## எம்.ஜி.ஆர் மோதிரத்தில் நுழைந்த சால்வை

"இதயவீணை" படப்பிடிப்பு காஷ்மீரில் நடந்த நேரம் அது. சூட்டிங் முடிந்து எம்.ஜி.ஆர் சென்னை திரும்புவதற்கு விமான நிலையத்துக்கு புறப்படும்போது, நேரம் அறிய வாட்சைப் பார்த்து, "அடடே - என்று கூறியபடி தனது உதவியாளர்களை அழைத்து, ஒரு மணிநேரம் டைம் தர்றேன். இந்த காஷ்மீரில் எளிதில் கிடைக்காத பரிசுப் பொருள் ஒன்று வேண்டும். குயிக்" என்று கூறி தூக்கினாராம்.



ஒரு மணிநேரத்தில் என்ன வாங்குவது என்று குழப்பத்தோடு சென்றவர்கள் அதிக விலை உள்ள ஒரு காஷ்மீர சால்வையை வாங்கிக் கொண்டு வந்தனர்.

அதைப் பார்த்த எம்.ஜி.ஆர். தன் வாட்சை உதவியாளர்களிடம் காட்டி, "இன்றைக்கு தேதி என்ன தெரியுமா? ஜூன் மூன்று - கலைஞர் பிறந்தநாள், அவருக்கு பரிசு தாறதுக்கு வாங்கிட்டு வாங்கன்னா, இதை வாங்கிட்டு வாரீங்களே" என்று கடிந்து கொண்டார்.

துணிச்சலாக ஒரு உதவியாளர், இல்லே அண்ணே, இதிலே ஒரு விசேஷம் இருக்குது என்று கூறி அவர் விரலில் இருந்த மோதிரத்தை வாங்கி, சால்வையின் ஒரு நுனியை மோதிரத்தில் நுழைந்து இழுக்க விறுவிறு என சால்வை மோதிர வளையில் நுழைந்து வெளியே வந்துவிட்டது.

இதைப் பார்த்து எம்.ஜி.ஆர். அடடே என்று ஆச்சர்யத்துடன், சென்னை திரும்பியதும் விமான நிலையத்திலிருந்து நேரே கலைஞரின் வீட்டுக்குச் சென்று அதனை பரிசளித்தாராம். ஒரு உதவியாளரை நிறுத்தி வைத்து டெமான்ஸ்டிரேசன் செய்து காட்டவும் ஏற்பாடு செய்திருந்தாராம்.

அந்த உதவியாளரும், கலைஞரின் மோதிரத்தையே வாங்கி, எம்.ஜி.ஆரிடம் செய்த சோதனையைச் செய்து காட்டவே, ஆச்சரியப்பட்ட கலைஞர், "எம்.ஜி.ஆர் ஒரு நல்ல மனிதரப்பா" என்று சர்டிபிகேட் வழங்கினாராம்.

- கே.பி.முருகேசன்



# பாலகுமாரன்

# தாஸி

## 1

அட.... மறுபடியும் இந்தக் கனவு வந்துவிட்டதா? இந்தக் கனவில் மட்டும் நான் ஏன் பறந்து போகிறேன்? சிறகுகள் இல்லாமல், மூன்றடி நான்கடி உயரத்திற்கு ஒரு புடவையை துப்பட்டா போல் போர்த்திக் கொண்டு பெரிய வீடுகள் உள்ள தெருக்கள் வழியே, எல்லோரும் தூங்கும் அதிகாலை நேரம், எதற்காக பறந்து போகிறேன்?

எட்டு முழப் புடவை, வெகு நீளமாய் என் முதுகுக்குப் பின்னே, அசைந்து ஆடி வருகிறது. ஒரு வேளை இந்தப் புடவையின் அசைவுதான் என்னைத் தூக்கிக் கொண்டு போகிறதோ...? பறக்க வைக்கிறதோ...?

ஆனால், இது எந்த இடம்? எந்த ஊர்? இவ்வளவு அகலமான வாசல்கள் உடைய வீடுகளை, நாம் இதற்கு முன்பு பார்த்திருக்கிறோமா?

மெல்ல வெளிச்சம் வர ஆரம்பித்தபோது, அவள் பறந்தபடியே கோயிலுக்குள் நுழைந்தாள். ஓவியங்கள் வரையப்பட்ட மண்டபத்துள் அவசரமாக நுழைந்தாள்.

அந்த மண்டபத்தில் யாரோ ஒரு இளம்பெண் படுத்திருந்தாள். அவள் படுத்துக் கிடந்த நிலையைப் பார்த்து, அவளுக்கு திக்கென்றது. ஒரு பஞ்சமுக வாத்தியத்தின் அருகே அவள் கிடந்தாள். காலில் மட்டும் சற்று வெளிச்சம் பரவியிருந்தது. அவள் முகம் சரியாகத் தெரியவில்லை.

கீழே கிடந்த பெண்ணை இழுக்க முயன்றாள், முடியவில்லை.

பஞ்சமுக வாத்தியத்தை சட்டென்று இரண்டு முழங்கை நீளம் நகர்த்தி வைத்தாள்.

இப்போது, யாது என்று உற்றுப் பார்த்தாள். வானத்தின் வெளிச்சம் அதிகரித்தது. அந்த வெளிச்சம் பாதியாய் மண்டபத்தினுள்ளே விழுந்தது.

அவள் கவனமாய் யார் படுத்திருப்பது என்று உற்றுப் பார்த்தாள்.

அங்கே படுத்துக்கிடப்பது அவள்தான் என்பது சட்டென்று தெரிந்தது. பயம் வந்தது.

முகத்தில் களையிழந்து போயிருந்தது. மூச்சு நின்று போயிருந்தது. கண்கள் மேலே செருகி லேசாய் திறந்திருந்தன.

அவள் செத்துப் போயிருந்தாள். அதாவது, செத்துப்போனது அவள்தான்.

அவள் உயிர் விடுதலையாகி வேறு எங்கோ சென்றுவிட்டு, இப்போது மறுபடி அவள் உடம்பைத்தேடி வந்திருக்கிறது.

அவளுக்கு அப்படி செத்துப்போனது பிடிக்கவில்லை.

நான் நல்லவதானே... நான் சின்னவதானே... நான் எதுக்கு சாகணும்? அவள் அழத்துவங்கினாள்.

கோயில் கதவுகள் விரியத் திறந்தன. பெரிய சாவிகளுடன் காவலாளிகள் வந்தனர். அவர்கள் கையில் குத்தீட்டியும், இடுப்பில் வாளும், முதுகில் கேடயமும் இருந்தன.

அவளுக்கு ஒரு கால மயக்கம் ஏற்பட்டது

'நான் யார்...? நான் யார்...? என் பெயரென்ன? என் உடம்பு ஏன் இங்கு கிடக்கிறது? நான் ஏன் இங்கு மிதக்கிறேன்?



இவர்கள் ஏன் இவ்விதம் உடுத்தியிருக்கிறார்கள்? இது இறந்த காலமா, நிகழ்காலமா, எதிர்காலமா?'

இது நனவல்ல, இது கனவு, இந்தக் கனவு வேண்டாமென்று தோன்றினாலும் விழித்துக் கொள்ள முடியவில்லை. எத்தனை சிரமப்பட்டாலும் விழிகளை திறக்கவே முடியவில்லை.

அமைதியாய் யோசிக்கும்போது ஒன்று புரிகிறது. இது கனவு, நிச்சயமாய் இது கனவு. இந்தக் கனவுக்குள் போன ஜென்மத்து நினைவு தெள்ளத் தெளிவாய் தெரிகிறது. போன ஜென்மம் என் இறுதி நேரம் காட்டப்படுகிறது. நான் எப்படி இறந்தேன் என்று சொல்லப்படுகிறது.

ஏனெனில், என் மரணம் போன ஜென்மத்தில் ஒரு மோசமான மரணம், ஒரு சோகமான முடிவு, ஒரு பெண்ணின் வஞ்சக நாடகம், ஒரு பொறாமையின் விளைவு. நான் அதற்கு முன் ஜென்மத்தில் செய்த வினையின் பலன்.

கடவுளே... வாழ்க்கை என்பது பலநூறு ஜென்மங்களின் அசைவுகளால், வினைவுகளால் உருவாக்கப்படுகிறது. ஜென்மமில்லாதிருக்க வினையறுக்க வேண்டும். வினையறுக்க மனம் கருக்க வேண்டும், மனம் கருக்க எதன் மீதும் பற்றில்லாது இருக்க வேண்டும்.

பற்றில்லாது நிலைதான் புதுவினை தராது. பற்றற்ற நிலையில் பிறருக்கு ஓடி ஓடி உதவி செய்தால் பழம்வினை அறும்.

இதுவே உயிர் வாழ்தலின் சூட்சுமம். இதற்கு இரண்டாவது கருத்து இல்லை. இன்னொரு வழிமுறை இல்லை. இதை மறுத்துப் பேசுவதில் லாபமில்லை. புரியாதவர்களே இதை உரத்து மறுப்பார்கள். இதை மறுப்பவருக்கு மறுபிறப்பு உண்டு, பல பிறப்புகள் உண்டு.

அவள் அந்தக் கோயில் மண்டபத்தில் கைகட்டி, தன் உடம்பையே பார்த்து, ஒன்னரை முழங்கை உயரத்தில் நின்று கொண்டிருந்தாள். அந்த உடம்பை வெறுமே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த உடம்பிற்கு ஒரு கதை இருக்கிறது. அவள் உயிருக்கு எந்தக் கதையுமில்லை. அது வெறுமே வேடிக்கை பார்ப்பது சாட்சியாய் இருப்பது எந்த உணர்வுமில்லாமல் உடம்பின் நாடகத்தை கவனித்துக் கொண்டிருப்பது.



காட்டில் ஆயிரக்கணக்கான பட்டாம்பூச்சிகளை வேடிக்கை பார்க்கிறவனுக்கு என்ன உணர்வு இருக்கும்? அவைகளோடு என்ன தொடர்பு இருக்கும் ? அவைகள் மீது என்ன அக்கறை இருக்கும் ? அதே விதம்தான் இறந்த பிறகு இந்த பூமியிலுள்ளோர் மீது வரும் அக்கறை.

குத்தீட்டி வைத்திருந்தவர்களில் ஒருவன் சட்டென்று அவள் கால்களைப் பார்த்துவிட்டான் ''அண்ணே... அந்தாளப் பாருங்க '' உரத்துக் கூறி சுட்டிக்காட்டினான்.

அவர்கள் அவள் உடம்பருகே ஓடி வந்தார்கள், குனிந்து பார்த்தார்கள்.

''ஐயோ... இது வெள்ளையம்மா, தாஸீ வெள்ளையம்மா''.

மூக்கில் கைவைத்துப் பார்த்தார்கள், புஜத்தைத் தொட்டார்கள், நாடியைப் பிடித்துப்பார்த்தார்கள்.

''ஐயோ... வெள்ளையம்மா போயிட்டாளா...'' பதறி எழுந்தார்கள்.

''ஓடு. ஓடு.. ஊர்ல போய் சொல்லு.''

இருவரில் ஒருவன் வந்த வழியே ஓடினான். இப்பொழுது மெல்ல மெல்ல வெளிச்சம் அதிகரித்தது. அவள் அமைதி அவளுக்கு நினைவுகளை திரும்பக் கொடுத்தது.

இது திருவாரூர். இது தேவாஸ்ரய மண்டபம் இது கும்பினிக்காலம். நவாபுகளின் அதிகாரங்கள் அடங்கி, வெள்ளைப்பரங்கிகள் வேகமாக பரவிக் கொண்டிருந்த காலம். குத்தீட்டிகளும் கத்தியும் மறைந்து, பீரங்கிகளும் துப்பாக்கிகளும் புழங்கி வந்த காலம்.

முரசு இல்லாமல் இரண்டு பக்கமும் தோல் தைத்த மத்தளம் போன்ற வாத்தியத்தை நிமிர்த்து வைத்து, மெல்லிய கோலால் 'ட்ட்ரும்ம்.. ட்ட்ரும்ம்' என்று சிப்பாய்கள் நடைக்கு ஏற்றபடி, முழங்கிப் போகின்ற காலம், நீளநீளமாய்ப் பருத்திப் புடவைகள் வந்துவிட்ட காலம் புடவையின் ஓரத்தில் வேறு துணி வைத்து கரையாய் தைக்கிற காலம், வாசனைத் தைலங்களும் சீமை சாராயமும் விதவிதமான கண்ணாடிக் குப்பிகளில் விற்பனையாகின்ற காலம்.

'பானையும், விறகும், புடவையும், பொன்னும் மணியும், நெல் கொடுத்து வாங்காமல் பணம் கொடுத்து வாங்கும் காலம்.

நவாபுகளைப் புறக்கணித்துவிட்டு, ''எங்க கோயில் ரொம்ப நாளா பூட்டிக்கிடக்கு நீங்க வந்து திறந்து வைக்கணும்'' ''பிராமணர்கள் பரங்கியர் முன்னே கைகட்டி நின்ற காலம், அவ களும் வந்த காலம்.

படைபலம் இழந்த சிற்றரசர்கள் கோட்டைக்குள்ளே உண்டு, தூங்கி, மோட்டுவளையை பார்த்த காலம், ஒரு ஆட்சி அஸ்தமித்து இன்னொரு ஆட்சி ஆரம்பிக்கிற பொழுது, அரசாங்க அலுவலர்களைவிட, அதிகாரிகளை விட, பஞ்சாயத்து தலைவர்களை விட, படைத் தளபதிகளுக்கு மரியாதை அதிகமிருக்கும்.

படை வீரர்கள் ஆட்சி செய்கிறபொழுது, பரத்தையர்களுக்கு செல்வாக்கு அதிகமாகிவிடும்.

''தளபதி உறங்கிக் கொண்டிருக்கிறார். என்ன விஷயம்?'' என்று தங்க வைத்தவள் கேட்டாள்.

''அம்மா, விஷயம் என்ன வென்றால்''... ஊர் கைகட்டி வளுக்கு பதில் சொல்லும்.

தேவரடியார்களில் பலர் பரத்தையர்களாகவும் இருந்தார்கள். இல்லாமலும் இருந்தார்கள். அப்படி பரத்தையராக இருந்தவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் நடுவே சண்டைகள் இருந்தன.

தேவருக்கு அடிமை, இறைத்தொண்டு செய்வதே வாழ்க்கை, வேறு எதற்காகவும் நான் பிறக்கவில்லை என்று பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த பெண்களை காலம் வளைத்துப் பிடித்தது. சமூக மாறுதல்கள் நசுக்கின.

பருவமடையாத பத்துவயதுப்பெண் குழந்தையை மிராசுதார்கள் வளர்த்து, பருவமடைந்ததும் அவளை அனுபவித்து விட்டு, பிறகு திருப்பியனுப்பி விட்டார்கள். அந்தப் பெண்ணை கோயில் அங்கீகரிக்கவில்லை. கோயில் அங்கீகரிக்கும் படியான அம்சம் அவளிடம் ஏதுமில்லை. ஆடவோ பாடவோ தெரியவில்லை.

முரட்டு ஆண்களை சமாளிக்க மட்டுமே அவளுக்குத் தெரிந்திருந்தது. அவள் அதுவே பழகினாள். அவள் வாழ்க்கை வேறு விதமாக இருந்தது.

ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண்களை காசுக்காக தினம் தினம் சமாளிக்கும் நிலைமை ஏற்பட்டது. அவளுக்கு கோயிலுக்குப்போய் சதிராடும் தேவரடியாரைக் கண்டால், வெருக்கும்,



இணங்காத தாஸியைக் கண்டால் வெறுப்பு ஏற்பட்டது. பொறாமை பொங்கியது.

'நானும் தாஸி, நீயும் தாஸி, உனக்கு மட்டுமென்ன கோயில் மரியாதை? என்மீது மட்டும் என் இழிவான பேச்சு?' மனம் வெதும்பினாள். நீ கோயிலிலுள்ள பாப்பனனோடு கூத்தடிக்கிறாய்...? என்று குறைசொன்னாள். புரளி பரப்பினாள். சின்னச்சின்னதாய் குற்றங்கள் தாக்கல் செய்தாள்.

தேவரடியார் பரத்தையர் ஒருபுறமும் பண்பாளர் ஒருபுறமும் என்று கட்சி கட்டினார்கள். அடிக்கடி சண்டையிட்டார்கள்.

சட்டங்கள் சரியில்லாததால் ஆட்சியாளர்களுக்கு பொறுமை இல்லாத காலம். அதர்மங்கள் கிளைத்துப் பரவிய காலம். அடிதடிகளுக்கு மட்டுமே மக்கள் பயந்த காலம். அடியாட்களுக்கு மரியாதை செய்த காலம். அன்பு செய்வது முட்டாள் தனம் என்று வாதிட்ட காலம். அது பரத்தையர்கள் காலம்.

கோயிலுக்குள் இறைவன் பற்றிய பாட்டும், பாட்டுக்கான அபிநயமும் மறந்து, ஒழுக்கமான மண்டபத்தில் உடை நெகிழ ஆபாசமாய் பரத்தையர்கள் ஆடிய காலம், கும்பலாய் நெருக்கியடித்து, பல நூறு ஆண்கள் இதை வெறிக்கப் பார்த்து விட்டு, குடும்பப் பெண்களை கேலிபேசிய காலம்.

சோம்பேறிப் புலவர்களும், பயந்த கோழையான பணக்காரர்களும், அகன்று பருத்து, எருமைபோல் வளர்ந்த, அகம்பாவமிக்க அந்தணர்கள் வாழ்ந்த காலம்.

வெள்ளையம்மாள் தேவரடியாராக இறைப்பணி மட்டும் செய்பவளாக, நல்லொழுக்கம் மிக்க தாஸியாக, வாழ்ந்து மலர்ந்து நிற்க, அன்பு மணம் வீச, பொன்னாத்தாள், அவளுக்கு பாயசத்தில் நஞ்சு கலந்து கொடுத்தாள்.

'எத்தனை வற்புறுத்தினாலும் எந்த ஆடவருக்கும் இணங்க மாட்டேன், எவ்வளவு கொட்டிக் கொடுத்தாலும் இந்தத் தொழில் செய்ய மாட்டேன்' என்று விலகி நின்றாள்.

பொன்னாத்தாள் வெள்ளையம்மாளின் உறுதியைப் புரிந்து கொண்டாள்.

வெள்ளையம்மாளுக்குப் பின்னே பல பெண்கள் சேர்ந்து விடுவார்கள் என்று பயந்தாள். எல்லோரும் அவளை மதிப்பது கண்டு புழுங்கினாள். அவள் வாழ்க்கையை இழிவாக்

காதபோது. மரணத்தை இழிவா
கினான்.

அவன் இறந்தபிறகு, அவ
தூக்கினாள். 'அவனை ஒரு அந்தண
கொன்றுவிட்டான். அவனுக்கும் அவ
னுக்கும் தொடர்பு இருந்தது. அவள் சுத்த
மானவள் இல்லை என்று பத்து பேரை
துணைசேர்த்துக் கொண்டு விவரித்து
பேசினான்.

அந்த அந்தணன் அவளை அ
பதுபேர் கூடியிருக்கும் சபையில்
இப்படிப் பேசாதே என்று கண்டித்தான்.
அவள் பேசுவேன் என்று சொல்ல,
காவல்காரன் குத்தீட்டியைப் பிடுங்கி,
நெஞ்சில் குத்திக் கொன்றான்.

நான் யோசிப்பது என்ன? இது கடந்த காலமா, எதிர்காலமா, நிகழ்காலமா? அவள் யோசித்தாள்.

**எதிர்காலம் நிகழ்காலமாகி இறந்த காலமாகிறது மனம் என் மரணத்தை யோசிக்கிற பொழுது என் மரணத்திற்குப் பிறகு நடந்ததை எதிர்காலமாகப் பார்க்கிறது**

காலம் நகர்ந்து கொண்டே இருந்தது. எதிர்காலம் நிகழ்காலமாகி இறந்த காலமாகிறது. மனம் என் மரணத்தை யோசிக்கிற பொழுது, என் மரணத்திற்குப்பிறகு நடந்ததை எதிர்காலமாகப் பார்க்கிறது. மரணத்திற்குப் பின் நடந்ததை யோசிக்கிற பொழுது, மறுபடி பிறந்தது ஞாபகம் வருகிறது, மறுபடி பிறந்து வாழ்ந்து வருகிற பொழுது, கனவில் கடந்த காலம் காட்டப்படுகிறது.

கடந்தது கடந்ததாகவே இருக்கட்டுமே... ஏன் காட்டப்பட வேண்டும்? நடந்தது நடந்ததாகவே இருக்கட்டுமே... ஏன் நினைவுபடுத்தப்பட வேண்டும்? இந்த சோகத்தை நான் ஏன் சுமந்து கொண்டு திரிகிறேன்.

போன ஜென்மத்து உடம்பை, இந்த ஜென்மத்தில் நினைவுபடுத்தி



என்ன நிகழப் போகிறது? அடிக்கடி ஏன் இந்தக் கனவு வருகிறது? இந்தக் கனவு எனக்கு என்ன சொல்கிறது?

எனக்கு எவர் மீதும் கோபமில்லை. கோபப்பட்டு வினைகளை வளர்த்துக் கொள்வதில் எனக்கு இஷ்டமில்லை. எவரையும் நோகடிக்காத எல்லோருக்கும் இதமான ஒரு வாழ்க்கையை நான் அன்றும் வாழ்ந்தேன். இன்றும் வாழ்கிறேன்.

எனக்கு எவர் மீதும் கோபமில்லை. இந்தக் கனவு வேண்டாம் இதிலிருந்து விடுபடவே நான் விரும்புகிறேன்.

அவள் மண்டபத்தை விட்டு வெளியே வந்தாள். திருவாரூர் தியாகேச பெருமானின் கோயில் கதவுகள் வழியே பறந்தாள். கமலாலயத்தை குறுக்கே கடந்தாள். அகலமான வாசல்களுடைய வீடுகளுடே விரைந்தாள்.

அவள் இமைகள் துடித்தன. விழி இரைப்பைகள் அசைந்தன. கண்களைத் திறந்தாள். கனவிலிருந்து மீண்டாள்.

ஜன்னல் வழியே நீலவானம் தெரிந்தது.

எல்லாக் காலத்திலும் எல்லா ஜென்மத்திலும் வானம் நீலம் தான் மாறாதது வானம்.

செல்வி எழுந்து உட்கார்ந்துகொண்டாள். கைகளால் முகத்தை தடவிக் கொடுத்தாள். உட்கார்ந்தபடியே கைகளைப் பிரித்து, மூச்சிழுத்தாள். முன்பக்கம் நீட்டி வெளியே விட்டாள். சிறிது நேரம் கால் கட்டை விரலைப் பார்த்தபடியே மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

அந்தக் கனவு மறுபடி நினைவிற்கு வந்தது. அது கனவா ... முன் ஜென்ம நினைவா..? அவளுக்கு தெளிவாகவில்லை. யாரைக் கேட்பது என்று புரியவில்லை. மெல்லப் புரண்டு படுக்கையை விட்டு இறங்கினாள். நிதானமாக நடந்து கண்ணாடியின் எதிரே போய் தன்முகம் பார்த்துக் கொண்டாள். அவளை அவளுக்குப் பிடித்திருந்தது. தான் அழகாக இருக்கிறோம் என்பது அவளுக்குள் ஒரு அமைதியைக் கொடுத்தது.

தன்னைப் பார்த்து மெல்லச் சிரித்தாள். பிறகு, மெல்ல வணங்கினாள் நகர்ந்து பாத்ரூம் கதவு திறந்தாள்.

# தாஸி

## 2

வீட்டுக்கு அருகிலேயே பார்லர். வீட்டையும் பார்லரையும் ஒரு சுவர் பிரித்தது.

கொல்லைப்புறம் இறங்கி ஒரு வாழைத் தோட்டம் தாண்டி, இரண்டு கிச்சிடி மரங்களைக் கடந்து, காம்பவுண்ட் சுவர் கதவு திறந்தால், அழகு நிலையத்தின் பின் வாசல் தெரியும் தலைவிரித்த அடர்த்தியான மகிழ மரம் இருக்கும் முரட்டு மரு தோன்றி அசையும், ஒரு மூலையில் நிறைய கருந்துளசி முளைத்திருக்கும்.

பின்வாசல் ஏறி, ரேழி வழியே ஹால் அடைந்து, ஹால் வழியே வராண்டாவை அடைந்து, வராண்டாவின் வழியே வாசலுக்குப் போய் நின்றால் வாசல்



தோட்டத்தின் வலப்பக்கத்தில் உயரமான வில்வமரம், அதுவும் மஹா வில்வம். இட[illegible]கம் வேப்பமரம், குறுகிய வாசலை யொட்டி போகன்வில்லா, கிணற்றடியும் கதவுக்கருகே பன்னீர் மரம். அந்த பன்னீர் மரத்திற்கு கீழே, ஒரு சிறிய மார்பு உயர மண்டபம்கட்டி இரண்டடி உயரத்தில் அகத்தியமுனிவர் அதே உயரத்தில் அவர் மனைவி லோபாமுத்ரா அப்பா ஆசையாய் வைத்து வணங்கிய சிலைகள் இன்றும் பலபேர் வணங்குகிறார்கள். நேரடியாய் அவர்களே பூஜை செய்கிறார்கள்.

யாரோ அதற்கு எதிர்ப்பு தெரிவித்தபோது, அப்பா அதற்கு விளக்கம் தெரிவித்தார்

''அகத்தியர் ஒரு முனிவர் சித்தபுருஷர், யோகி, மரண மில்லாதவர், மனிதர்கள் மீது மிகுந்த அன்புடையவர், பூமியை நேசித்தவர் பார்ப்பதற்கு சாதாரண உருவமுடையவர், லோபா முத்ரை இளவரசி மிக அழகி கணவன் மீது மாறாத காதல் கொண்டவள் கணவனை தெய்வமென்று போற்றிய பெண், அலங்கார அணிகலன்களோடு வாழ்ந்து வந்தவள்''

''ஒரு குடும்பத்திற்கு இவர்களே முன்னுதாரணம். அழகான பெண், ஆடை அணிகலன்களில் ஆசையுள்ள பெண், அவள் காட்டிற்கு வந்து பர்ணசாலையில் வசிக்கும் புருஷனுக்கு பணிவிடை செய்கிறாள். சற்றும் அலுப்பில்லாமல் பிரியம் குறையாமல் குடித்தனம் செய்கிறாள்''

''மனைவி பேரழகி, இருப்பதோ காடு. மனைவிக்கு ஆடை அணிகலன்களில் விருப்பம் அதிகம். தன்னுடைய தவ நெறி வாழ்க்கைக்கு, அவளை இடைஞ்சலென்று அகத்தியர் கருதவேயில்லை. அவளை இளவரசியாகவே வாழவைத்தார், தான் குள்ளம் தனது மனைவி உயரம் தான் சாதாரணம், தன் மனைவி பேரழகு என்றெல்லாம் நினைக்கவேயில்லை அவரவர் குணங்களை பரஸ்பரம் மதித்தார்கள் அவரவர் விருப்பங்களை பரஸ்பரம் கௌரவித்தார்கள்''.

''அதே சமயம் மிகுந்த காதலோடு நெல்முனையளவும் பிரிவில்லாமல் குடித்தனம் செய்தார்கள். சமூகசேவை செய்தார்கள், தமிழ்த்தொண்டு ஆற்றினார்கள். இலக்கியம் வளர்த்தார்கள், தபோபலத்தால் உலகை உய்வித்தார்கள்''.

''என் மனைவி பேரழகி..'' அப்பா தொடர்ந்து பேசினார், ''நான் சுமார் ரகம், ஆனால் நாங்கள் பேதப்பட்டதேயில்லை''.

''இதற்கு காரணம், என் உழைப்பு, என் கெட்டிக்காரத்

தனம், என் வரும்முன் காக்கும் குணம், என் தெளிவு, என் தை
எத்தனை சோதனை வந்தபோதும் என் மனைவியை நான் இழி
வுபடுத்தியதில்லை".

"விட்டுக்கொடுக்காத புருஷனை இழிவுபடுத்தாத கண
வனை, பெண் உள்ளங்கையில் வைத்து தாங்குவாள். உயி
ரினும் மேலாய் நேசிப்பாள்".

"ஆணுக்குத் திறமைதான் அழகு திறமையும் தெளிவு
முள்ள ஆணை, பேரழகியாக இருப்பினும் பெண்கள் போற்று
வார்கள். அவள் அழகு கர்வம் அங்கு எழுவதேயில்லை. அவை
சமர்ப்பணம் செய்யப்பட்டு விடுகின்றன".

"பெண் அழகாக இருப்பது கம்பீரமான ஆணுக்கு விரட்
சியேயில்லை. அவளை தீயதிலிருந்தும், தீயவர்களிடமிருந்தும்
காப்பாற்ற அவனால் முடியும். ஆணின் கம்பீரம் மனத்
திண்மை, செயல்திறன்".

"இப்பொழுது நான் சொன்னவைதான் அகத்திய
லோபா முத்ரா. நாம் இவர்களை வணங்குவதன் மூலம் இவர்க
ளுக்குண்டான குணங்களை வணங்குகிறோம் எதை நாம்
வணங்குகிறோமோ அதை நாம் விரும்புகிறோம் எதை நாம்
விரும்புகிறோமோ அது நம்மை வந்தடையும்".

யாருக்குப்புரிகிறதோ புரியவில்லையோ அப்பா
சொன்னது அம்மாவிற்கும், அவர் குழந்தைகளுக்கும் புரிந்தது.

செல்வியை விட, செல்வியின் தங்கை வாசுகியும், தம்பி
பாண்டியனும் அந்த சிலையை கொண்டாடி வணங்கினார்கள்.

பௌர்ணமிகளில் தெருவே கூடி வந்து பூஜை செய்யும்.

அப்பா இறந்தபிறகு, அம்மாவிற்கு அந்த வீட்டிலிருக்க
இஷ்டமில்லை நேர் பின்னால் ஒரு வீடு விலைக்கு வந்தபோது
அப்பா சேமித்து வைத்த காசை, இன்ஷூரன்ஸ் தொகையை
கொண்டு வாங்கினார்கள்.

சம்பாதிக்கும் பொறுப்பு செல்வியை வந்தடைந்தது.
பட்டப்படிப்பை பாதியில் நிறுத்திய செல்வி, அழகியல்
கலையைக் கற்றாள். அதிகம் தெரிந்துகொள்ள சிங்கப்பூருக்கு
போனாள்.

அதுவரை வாழ்ந்த வீட்டில், கொஞ்சம் கடன் வாங்கி
அழகு நிலையம் ஆரம்பித்தாள். அது அகத்தியரும் லோபா
முத்ராவும் இருக்கும் வீடு அறிவும் அழகும் குடியிருக்கும் வீடு
இரண்டும் அன்பாய் குடித்தனம் நடத்திய வீடு.



பிஸூட்டி பார்லர் அவள் நினைத்ததைவிட வேகமாய்
வளர்ந்தது.

அம்மாவின் அழகையும் அப்பாவின் அறிவையும்
செல்வி கொண்டிருந்தாள். யாருக்கு என்ன விதமான சிங்காரம்
தேவை என்பதை சில நொடிகளில் கண்டுபிடித்துவிடுவாள்.
என்ன சிகிச்சை செய்தால் குணமாகும் என்பதை கொஞ்சம்
தடவி கண்டுபிடித்துவிடுவாள்.

செல்விக்கு கொஞ்சம் கனமான தொண்டை, நீள
வாய்ஸ், கொஞ்சம் பூசினாற்போல உடம்பு லேசான பழுப்பாய்
பளபளக்கிற கண்கள், மேடு நெற்றி, அதிகம் உணர்ச்சிகளைக்
காட்டாத அழுத்தமான முகம்.

இருபத்தியொரு வயசிலேயே நடையில் போசில் ஒரு
ஐ.ஏ.எஸ். ஆபீஸர் கம்பீரம் வந்துவிட்டது.

செல்வி உழைப்பாளி பொறுமைசாலி அதிகம் அலட்டு
கிற பெண்களை அடக்கத் தெரிந்த கெட்டிக்காரி.

காலை ஏழு மணியிலிருந்து இரவு எட்டு மணிவரை
அவள் பார்லர் பெண்களால் நிரம்பப்பெற்றிருக்கும்.

"ஆம்பளைங்களுக்குன்னு ஒரு பார்லர் ஆரம்பிங்
களேன் மேடம்".

"அதெல்லாம் வேணாம். இதை ஒழுங்காப் பண்ணி
னாப்போறும்".

"இன்னொரு பிராஞ்ச் ஆரம்பிங்களேன் மேடம்".

"நான் இல்லாத இடத்துல, என் பேர் சொல்லி எதுவும்
நடக்கக்கூடாது. எது நடந்தாலும் எனக்குத் தெரிய நடக்கணும்".

மாடியில் தளம் எழுப்பி, அங்கே உடற்பயிற்சி நிலையம்
ஆரம்பிக்கப்பட்டது. இடுப்பு கரைக்கவும், வயிறு குறைக்கவும்,
பின்பக்கம் இறுக்கவும், முகம் மினிரவும் பல கருவிகள் உத
வியால் உடற்பயிற்சிகள் செய்ய சொல்லித்தரப்பட்டன.

நகரத்திலுள்ள மேல்தட்டு வகுப்புப் பெண்கள் இதற்கு
நிறைய பணம் செலவழிக்க தயாராக இருந்தார்கள்.

புருவத்தை சரி செய்து, முகத்திற்கு பிளீச் செய்து,
முழங்கை ரோமங்களை நீக்கி, தலைமுடியை அலசி உலர்த்தி,
சருமத்திற்கு பளபளப்பாய் ஈரப்பதம் ஏற்றி, வியர்வை துவார
அழுக்குகள் நீக்கி, உதடெழுதி, வில் எழுதி, இமை எழுதி,
பொருத்தமான அணிகலன் பூட்டி, பாந்தமான உடை உடுத்தி,

கண்ணாடி முன் நிறுத்திய போது, பல பெண்கள் வியப்பில் வாய்விட்டு அலறினார்கள். சில பெண்கள் தங்களை தாங்களே பார்த்து விம்மிவிம்மி அழுதார்கள். நான் இத்தனை அழகா...? ஒரு பெண் மயக்கமே போட்டு விழுந்தாள்.

"மாம்பலத்துல செல்வின்னு ஒரு யங்லேடி இருக்காடி, ஜிம், பார்லர் ரெண்டும் வைச்சிருக்கா, ஒரே ஒரு தடவை போயிட்டு வாயேன், உன்னை அப்படியே மாத்திருவா".

எந்தப் பத்திரிகையிலும் விளம்பரம் கொடுக்காமல், எந்த போஸ்டரும் கட்டாமல், செல்வியை நோக்கி பெண்கள், பரம் செய்தி பரிமாறிக் கொண்டு ஓடி வந்தார்கள். தங்களுடைய விதவிதமான குறைகளை அவளிடம் சொன்னார்கள்.

"என் பல்லு ஏன் மஞ்சளா இருக்கு?"

"இவ்ளோ கருப்பா இருக்கேனே... கொஞ்சம் பிரவுன் கலராக்கூட ஆக முடியாதா?"

"வயிறு குறைக்கணும் செல்வி மேடம், எப்படியாவது இளைக்கணும்."

"உதட்டுக்கு மேல முடி முளைச்சிக்கு, மூணு பேர் பெண் பார்க்க வந்து வேண்டாம்னுட்டாங்க."

"எனக்கு என்ன கலர் லிப்ஸ்டிக் நல்லாருக்கும்? அதை எப்படிப் போடணும்?"

"என்னுடைய ஹேர் ஸ்டைல் மாத்தணும்னா எப்படி மாத்தணும்? முடியை குறைக்கக்கலாமா வேண்டாமா?"

"செல்வி, என்னுடைய ப்ரெஸ்ட் ரொம்ப சின்னதா இருக்கு. எங்க வீட்டுக்காரர் தினம் கேலி பண்றாரு எக்ஸர்சைஸ் பண்ணினா டெவலப் ஆகுமா? நிறைய பெண்களுக்கு நல்லாருக்க. எனக்கு நல்லாவேயில்லை. பார்த்தா பொறாமையா இருக்கு. ஏதாவது செய்யுங்க செல்வி ப்ளீஸ்."

செல்வி நூற்றுக் கணக்கான பெண்களை சந்தித்து தன்னால் முடிந்தவரை, அவர்கள் குறைகளை களைந்திருக்கிறாள். அவர்களிடம் உண்மையாய் நடந்து, உற்சாகமாய் பேசி ஊக்கமூட்டியிருக்கிறாள்.

அவளுக்கு வருமானமும் நிறைய வந்தது.

தம்பி டாக்டருக்குப் படிக்க ஆசைப்பட்டான். தங்கை எலெக்ட்ரானிக்ஸில் தனிக் கவனம் செலுத்தினாள். கல்லூரியில் படிக்கும்போதே கம்ப்யூட்டரில் கவனம் செலுத்தினாள்.

தாஸி/பாலகுமாரன்



ஒற்றை சம்பாத்தியம், இரண்டு பேர படிப்பு நாலு பேர் உயிர் வாழுதல் என்பதாய் வாழ்க்கை நகர்ந்தது.

வீடு என்கிற விஷயம் ஒன்றுக்கு இரண்டாய் இருந்த துதான் பெரிய பாதுகாப்பு. அது தனி சுயபீரத்தைக் கொடுத்தது.

அவர்கள் இரண்டு பேரும் ஒரு நிலைக்கு வர, செல்விக்கு இருபத்தி எட்டு வயதாகி விட்டது. எல்லாவற்றையும் விட, செல்வி சிறந்து விளங்கியது திருமண அலங்காரம்.

ஒரு திருமணத்தில் முற்பகல் நேர வைதீகச் சடங்கின் போது, ஜடை பின்னலும், தாழம்பூ வைத்த நீண்ட பின்னலும், நெற்றிச் சுட்டியும், சந்திரப் பிறை சூரியப் பிறையும் மாட்டி, வீட்டுப் பெண்களை அலங்கரித்திருப்பார்கள். பட்டுப் புடவையில், அவர்கள் ஜாதி சம்பிரதாயப்படி உடை உடுத்தியிருப்பார்கள்.

ஆனால், மாலை நேரம் மணமகனும், மணமகளும முற்றிலும் மாறி விடுவார்கள். மணமகன், ஐரோப்பிய பாணி உடைக்குப் போக, மணமகள் வடக்கிந்தியப் புடவையோ, அல்லது தென்னிந்திய மாம்பழக் கட்டோ உடுத்திக் கொள்வாள்.

ஆரம்பத்தில் ஆயில் மேக்கப் அமர்க்களப்பட்டது. அழுத்தமான லிப்ஸ்டிக் விரும்பப்பட்டது. தலைமுடியில் அங்கங்கே முத்து வைத்து, தைத்தவர்கள் கூட இருந்தார்கள்.

உறுதியான சிறிய கொண்டையும் பின்பக்கம் அதிகம் தெரிந்த ரவிக்கையும், அடுக்கு வளையலும், பளபளக்கும் நெயில் பாலிஷும், குறைவான நகைகளும், குதிகால் உயர்ந்த செருப்பும் மணமகளை மெருகூட்டின.

"செல்வி, எனக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருக்கு. இன்னிக்கி காலையிலதான் சத்திரம் புக் பண்ணினாங்க. சத்திரம் நிச்சயமான உடனே, நேரே உங்ககிட்டதான் வரேன். எனக்கு நீங்க தான் ப்ரைடல் மேக்கப். கல்யாணத்துக்கு இன்னும் எழுபத்தஞ்சு நாள் இருக்கு. இப்பமே டைரியில குறிச்சு வைச்சுக்கங்க. இந்தாங்க அட்வான்ஸ்."

சமையலுக்கு முன்பணம் தருவதற்கு முன்னால, செல்விக்கு தந்து விடுவார்கள். சிலபேர் துணிவாங்கக் கூட கூட்டிக் கொண்டு போவார்கள். நகைகள் வாங்க கூட்டிக் கொண்டு போவார்கள்.

தாஸி/பாலகுமாரன்

காலை, மாலை மறுநாள் எல்லா நேரமும செல்வியின் கைவண்ணத்தில் அழகாய் மினிர்வார்கள்.

செல்வியும் உற்சாகமா கலந்து கொள்வாள்.

"மூணு வருஷமா நீ எனக்கு கட்டமா. உன்னை நான் விடுவேனா? உன் கல்யாணத்தை மறப்பேனா? உன்னை அழகுப் பதுமையா மாத்தறது என்னுடைய வேலை.

அதே சமயம், நான் சொல்ற சிலவிஷயங்களை, இந்த ரெண்டரை மாசம் நீ பழகணும். அப்பத்தான் உன்னுடைய அழகு கூடும்.

முதல் விஷயம், நீ அழகா இருக்கணும்னு கேபப்படாதே. ஊருனு இருக்கற எந்தப் பொம்பளையும் அழகா இருக்க முடியாது.

இரண்டாவது விஷயம், தொட்டதுக்கெல்லாம் அழாதே. எத்தனை மேக்கப் போட்டாலும் அழுமூஞ்சித்தனத்தை மறைக்க முடியாது.

மூணாவது விஷயம், நேரத்துல படுத்துத் தூங்கு. காலை நேரத்துல எழுந்திரு. விடிஞ்ச பிறகும் தூங்கினா, முகம் உப்பி, தத்தியா இருக்கும். தூக்கமே இல்லேன்னா, கண்ணுக்கு கீழே வளையம் வரும். கன்னம் தட்டிப் போகும்.

நாலாவது விஷயம், அழகா இருக்கணும்னு நிறைய சாப்பிடாதே. ரொம்ப முக்கியமா, பசியில்லாம சாப்பிடவே சாப்பிடாதே. எண்ணெயல வறுத்த பண்டத்தை சுத்தமா நிறுத்திடு. மாமிசம் சாப்பிடறவளா இருந்தா, குறைச்சலா சாப்பிடு.

கடைசி விஷயம், உன் கல்யாணத்தைப் பத்தி நீ கவலைப்படாதே. கவலைப்பட்ட முகத்துக்கு மேக்கப்பே போட முடியாது. கடவுள் மேல பாரத்தைப் போடு. சந்தோஷமா இரு. உண்மையில சந்தோஷம்தான் நல்ல மேக்கப். உன் கண்ணுல தெரியற அன்புதான், அழிக்க முடியாத அழகு.

இதெல்லாம் சரியா இருந்தா, உனக்கு மேக்கப்பே வேண்டாம். இந்த செல்வி வரவேண்டிய அவசியமேயில்லை. வந்தா, அது அழகுக்கு அழகு. குத்து விளக்கை மேடையில வைச்சா மாதிரி அழகு. தங்கப் பாத்திரத்தை பாலீஷ் போட்டு வைச்சா மாதிரி அழகு. வெள்ளிக் குடத்தை ஷமாய் லெதரால துடைக்கற மாதிரி அழகு.

நீ கிறிஸ்மஸ் மரம் மாதிரி, தளதளன்னு இருப்பே. நான் வந்து அங்கங்கே நட்சத்திரம் தொங்கவிட்டு, சரிகை பேப்பர்



போட்டு, அழகுபடுத்தி வைப்பேன்.

சரிகை பேப்பரா அழகு? மரம் மொட்டையா இருந்தா, வாடி வதங்கி இருந்தா, எந்த அலங்காரமும் நிறையாது. அதனால, கிறிஸ்மஸ் மரம் மாதிரி இரு." செல்வி மணப்பெண்ணுக்கு கூறிய குறிப்புகளை எல்லோரும் கேட்டுக் கொள்வார்கள்.

செல்வியிடமிருந்து வெளி வரும் ஆழ்ந்த அர்த்தமுள்ள பேச்சு எல்லோரையும் கவர்ந்தது. அவள் ரசனைகள் எல்லோருக்கும் பிடித்திருந்தன. அவள் வஞ்சனையற்ற உழைப்பு பலரை வியக்க வைத்தது.

செல்வியின் சம்பாத்தியத்தில் வீடு குதியாட்டம் போட்டது. அவள் தங்கை காதல் வயப்பட்டாள்.

ஒருநாள் இரவு தன் அக்காவிற்கு அருகேயமர்ந்து, தான் இன்னும் கன்னியில்லை என்று சொன்னாள்.

செல்விக்கு அதிர்ச்சியாக இருந்தது.

இதை மறைக்க முடியாது. மறைக்கவும் கூடாது என்று செல்வி தன் அம்மாவிடம் சொல்ல, செல்வியின் அம்மா தலையில அடித்துக்கொண்டு அழுதாள். செல்வியின் தம்பி முஷ்டியை மடக்கிக் கொண்டு கத்தினான்.

"ஏண்டி... கன்னியா இல்லேன்னா என்ன அர்த்தம். கர்ப்பமா இருக்கியா?"

அவள் தங்கை வாசகி இல்லையென தலையசைத்தாள்.

"யாரவன்?"

பெயர் சொன்னாள்.

ஒரு நாள் இரவு தன் அக்காவிற்கு அருகேயமர்ந்து, தான் இன்னும் கன்னியில்லை என்று சொன்னாள். செல்விக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''என்ன பண்றான்?''

விவரம் சொன்னாள்.

அவன் கம்ப்யூட்டர் கற்றுக் கொடுப்பவன். இவள் கற்றுக் கொள்பவள்.

''உங்க பக்கத்துல வந்தா, ஒரு சுகமான நறுமணம் வருது. அது இயற்கையிலேயே அமைந்ததா அல்லது அகில் புகை, சந்தனம் ஜவ்வாது போன்ற வாசனைப் பொருட்களால் ஏற்படுவதா? இது இயற்கையா அல்லது செயற்கையா? அவன் மூச்சுக் காற்று அவள் மீது படும் வண்ணம் அமர்ந்து கேட்டான்.

''தருமி. தள்ளிப்போ'' அவள் அடிக்குரலில் கட்டளையிட்டாள்.

''கதைப்படி நான் பாண்டிய மன்னன். தருமியில்லை. சந்தேகம் தருமிக்கு வரவில்லை. மன்னனுக்கே வந்தது.'' தன்னைச் சுட்டிக்காட்டினான்.

''பாண்டிய மன்னன் மாதிரி ஸ்டைலா? உக்காந்தா போறுமா? பல்லு தேய்க்க வேண்டாமா?'' பளிச்சென்று பேசினாள்.

அவன் அதிர்ச்சியானான். ''ஒருநாளைக்கு ரெண்டு வேளை தேய்க்கிறேனே...''

''நாறுது.''

''நிஜமாவா?''

''ஆமாம்.''

''யாரும சொல்லலியே?''

''யாரும் சொல்ல மாட்டாங்க. அவமானப்படுத்திடுவோமோன்னு பயந்து ஒதுங்கிருவாங்க.''

''நீ ஏன் ஒதுங்கலை?''

''யாராவது ஒருத்தர் உண்மையைச் சொல்ல வேணாமா? நீங்க பக்கத்துல வந்தாலே ஐயோன்னு சொல்றவங்க பெல்லாம், இந்தக் கிளாஸ்ல இருக்காங்க. நீங்க ஒரு டீச்சர். பக்கத்துல உக்காந்து பாடம் சொல்லித்தர்ற டீச்சர். நீங்க இப்படி வாய் துர்நாற்றத்தோட இருக்கலாமா?''

''இதுக்கு என்ன பண்றது?'' அவன் கவலையோடு கேட்டான்.

''வாங்க, டாக்டர்கிட்டே போகலாம்.''



அவள் அவனை பல் வைத்தியரிடம் கூட்டிப் போனாள்.

அவர் நாலு நாள் வைத்தியம் பார்த்தார். கறைகளை சுரண்டி எடுத்தார். கடைவாய்ப்பல் சொத்தையை அடைத்தார். ஈறுகளை உறுதியாக்கும் வித்தையைச் சொல்லிக் கொடுத்தார்.

பல் டாக்டரிடம் காத்துக் கிடக்கும் நேரங்களில் அவன் மீசையை ஒழுங்கு படுத்துவது பற்றியும், முகத்துக்கு களிமண் குழை பூசுவது பற்றியும் விளக்கிச் சொன்னாள். நகங்களை வெட்ட வற்புறுத்தினாள். கிருதாவை குறைத்து தலைமுடியின் நீளத்தைக் குறைத்து, காலையில் தினசரி ஓடச் சொல்லி, மாற்றங்கள் ஏற்படுத்தினாள்.

அவனுக்கு மென்மையான பாடி ஸ்ப்ரே இரண்டு பரிசளித்தாள். பேண்ட் எந்தக் கலரில் இருந்தாலும், வெள்ளை முழுக்கை சட்டையை உடுத்தச் சொன்னாள்.

அந்த கம்ப்யூட்டர் காலேஜில் ஒருமாத இடைவெளியில், அந்த தருமி அரசனானான். அரசிக்கு கைகூப்பி, கண்மூடி நன்றி சொன்னான்.

''எல்லாரும் என் வாய் நாற்றத்தை வெளியே சொல்லலாம், ஒதுங்கிப் போய் கேலி பண்ணினபோது, நீ மட்டும் மூஞ்சிக்கு நேரே சொன்னியே... ஏன்? என் மேல ஒரு இதுவா...?'' அசடு போல் கேட்டான்.

அவள் சிரித்தாள்.

''நீங்க ஒரு கெட்டிக்கார மாஸ்டர். ரொம்ப அருமையா க்ளாஸ் நடத்தற மாஸ்டர். மக்கு பசங்களுக்கெல்லாம் நீங்க பயிற்சி கொடுத்து கம்ப்யூட்டர்ல கெட்டிக்காரனாக்கிட்டீங்க. எப்பவுமே கம்ப்யூட்டர் மேலே கவனமா இருக்கிறதுனால, நீங்க கண்ணாடி சரியா பாக்கறதில்லை. உங்கள சரியா கவனிக்கறதில்லை. இதை நான் கவனிச்சேன்.

உங்களை கொஞ்சம் மாத்தினா, உங்களை இன்னும் நிறைய பேர் நெருங்கி நிப்பாங்க. பாடம் படிக்க லேடீஸ்லாம் வருவாங்க. நிறைய லேடீஸ் உங்ககிட்ட பாடம் படிக்கணும். நீங்க நல்லா சொல்லித்தரணும்.

உங்களால குறைஞ்ச பட்சம் ஒரு ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கணும். நம்ம ஊர் பசங்க அமெரிக்கா லண்டன், ஆஸ்திரேலியா, கனடான்னு பல ஊர்களுக்கு வேலைக்குப் போகணும். நிறைய சம்பாதிக்கணும்.

அந்தக்காசு நம்ம ஊருக்கு கொண்டாந்து, அவங்க

அப்பா அம்மாவை சந்தோஷப்படுத்தணும்.

இங்கிலீஷ் நல்லாப் பேசற தமிழ்நாட்டுப் பசங்க, கம்ப்யூட்டரை சுலபமா கத்துக்கிட்டா, வாழ்க்கை நல்லாயிடும். அவன் உயரமா வளர்ந்தா, அவனைச் சுற்றி பலபேர் வளரு வாங்க."

"ஆத்தா... என்னை விட்ரு. உன் முன்னாடி நான் தூசு" அவன் சட்டென்று குனிந்து, அவள் காலைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

அதற்குப் பிறகு இரண்டு நாள் அவன் பேசவே இல்லையாம்.

ஐநூறு ரூபாய்க்கு சுரிதார் வாங்கி, யாருக்கும் தெரியாமல் ரகசியமாய் கொடுத்தானாம்.

'உனக்கு என்ன வாங்குவது என்று எனக்குத் தெரியவில்லை. எனக்குத் தெரிந்ததை வாங்கினேன். உனக்குப் பிடிக்காமல் போனாலும், எனக்காக ஏற்றுக் கொள்' என்று எழுதியிருந்தானாம்.

"எனக்கு அந்த சுடிதார் பிடிக்கலை. ஆனா, எனக்குன்னு எழுதியிருந்தே பார். அது ரொம்பப் பிடிச்சது. திரும்பத் திரும்ப படிச்சிகிட்டே இருந்தேன். என்னமோ கவிதை போல. அத படிச்சவுடனே மனசெல்லாம் நிறைஞ்சிருச்சு.

நான் கொஞ்சம் கருப்பு. எனக்கு கத்தரிப்பூ கலர்ல சுரிதார் எடுப்பாங்களா? எந்தக் கடையில வாங்கினீங்க? வாங்க போய் மாத்திட்டு வந்துடலாம்."

அவனும் அவளும் கடைக்குப் போனார்களாம். உடை மாற்றினார்களாம். மயிலாப்பூர் ஷெல்டர் ஹோட்டலுக்குப் போய் மணிக்கணக்கில் பேசினார்களாம்.

ஷீரடி பாபா கோயிலுக்குப் போய் அவர் காலில் தலை வைத்து, பரஸ்பரம் நன்றாக இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்களாம்.

"அமெரிக்கன் கம்பெனி கம்ப்யூட்டர் ப்ரோகிராம்மை சிங்கப்பூர் கம்பெனி வாங்கி, மாத்தி எழுதுது. நிறைய ப்ரோகிராமர் அதுக்கு தேவைப்படுறாங்க. அஞ்சு வருஷம் நிச்சயமா வேலை. ஆரம்பத்திலேயே மாசம் நாப்பதாயிரம் ரூபா சம்பளம். நான் போகப் போறேன்."

"வெரிகுட்."



"நீ வசதியா?"

"நான் எப்படி வர்றது? வயசுப் பொண்ணை துணையில்லாம அனுப்புவாங்களா?"

"நான் துணையா இருக்கேன்."

"என்ன அர்த்தம் இதுக்கு?"

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்."

"சிங்கப்பூர்ல சமைச்சுப் போட பொம்பளை வேணும்னு பண்ணிக்கறியா? இல்ல வேற ஏதாவதா?"

"இது லவ்."

"இதை வாயைத் திறந்து சொல்லித் தொலைச்சா என்ன?"

"கத்துவியோன்னு பயம்."

"நான் கத்த மாட்டேன். எங்க வீடு கத்தும். எங்கம்மா திட்டுவாங்க. தம்பி சிரிப்பான். எங்க அக்கா என்ன செய்வான்னு எனக்குத் தெரியலை. சொல்லிப் பார்க்கறேன். கூப்பிட்டா, வந்து பேசு" அவள் நகர்ந்து போனாள்.

"சொல்லிட்டியா?" மறுநாளே அவளைப் பார்த்தவுடன் கேட்டான்.

"நல்ல வேளை சொல்லலை."

"என்ன... ஏன்?"

"நான் ஒரு முட்டாள்."

"புரியும்படியா சொல்லு."

"எனக்கு அக்கா ஒருத்தி இருக்கா. என்னை விட அஞ்சு வயசு பெரியவ. அவளுக்கு கல்யாணமாகலை. அதுக்குள்ளே எப்படிக் கேக்கறது? அவளை நான் பொம்பளையாவே நினைக்காம, வீட்டுக்கு ஆம்பளையாவே நினைச்சு, உங்கிட்ட என்னென்னமோ பேசிட்டேன். எனக்கு கம்ப்யூட்டரும் வேணாம், சிங்கப்பூரும் வேணாம், நீயும் வேணாம். ஆளை விடு."

"உங்க அக்காவுக்கு நான் மாப்பிள்ளை பார்க்கட்டுமா?" அவன் அப்பாவியாய் கேட்க அவள் சட்டென்று சீறினாள்.

"எங்க அக்காவ பார்த்திருக்கியா நீ?"

"இல்லை."

"அக்காவையே பார்க்காதவன், அக்காவுக்கு

மாப்பிள்ளை எப்படி பாப்பே? எவனாவது ஒரு பன்னாடையை, எங்க அக்கா தலையில கட்டலாம்னு பாக்கறியா?

எங்க அக்காவோட அழகும் அறிவும் எப்படிப்பட்டதுன்னு தெரியுமா உனக்கு? அவளுக்கு முன்னாடி நான் ஜுஜுபி. பத்து வாசகி சேர்ந்தா ஒரு செல்வி.

இன்னிக்கி சாயந்திரம், விஜயசேஷ மஹால்ல ஒரு கல்யாணம். எங்க அக்காதான் கல்யாண மேக்கப். வந்து பார்."

"மேக்கப்பையா?"

"போடா சதா வெட்டத் தலையா. எங்க அக்காவ வந்து பாரு."

"எனக்கு பத்திரிகை வைக்கலையே..."

"எனக்கு வைச்சிருக்காங்க. அஞ்சு மணியிலேருந்து அக்காவுக்கு உதவியா நான் அங்கே இருப்பேன். நீ ஆறே கால் மணிக்கு வா. டாண்ணு வா. நான் வாசலுக்கு வந்து உன்னைக் கூட்டிக்கிட்டுப் போறேன்."

அவன் வந்து நின்றான். மணமகளுக்குப் பின்னால வந்த அக்காளைப் பார்த்தான்.

அவளுக்குத் தரப்பட்ட மரியாதையைக் கண்டு வியந்தான். தன்னை நேசித்தவளுக்கு அருகே அமர்ந்து, கல்யாண சாப்பாடு சாப்பிட்டான்.

"உங்க அக்கா அழகுதான். அழகு இருக்கட்டும். அவ கிட்ட ஒரு ஆளுமை இருக்கு. அதான் எனக்குப் பிடிச்சிருக்கு. அவ உன்னை சிங்கப்பூருக்கு அனுப்ப மாட்டா.

அதனால, நான் மட்டும் போறேன். நிறைய சம்பாதிச்சிட்டு வந்து, எங்க வீட்டோட உங்க வீட்டுக்கு வந்து, உன்னை பொண்ணு கேக்கறேன்.

உன்னோட சிங்கப்பூர் போறதா ஏகப்பட்ட கற்பனை பண்ணிட்டேன். உன்கூட குடித்தனம் பண்றதா, நிறைய ஆசையை வளர்த்து வைச்சுட்டேன். உன் உடம்புல ஒவ்வொரு இடத்தையும் தொட்டுப் பாக்கறா மாதிரி, கனா கண்டுட்டேன். இப்போ நீயில்லாம சிங்கப்பூர்ல என்ன பண்ணப் போறேன்? அங்கேபோய் எப்படி உயிர்வாழப் போறேன்?

ஏன்டி என்னை மாத்தினே? என் டிரஸ் பண்ணிவிட்டே? என் வாய் நாறினா உனக்கென்ன? என் மீசை எப்படியிருந்தா உனக்கென்ன? எல்லார் மாதிரி கேலி பண்ணிட்டு



போக வேண்டியதுதானே...? எங்க கம்ப்யூட்டர் மாஸ்டர் ஒரு கொள்ளைன்னு சொல்ல வேண்டியது தானே...?

மலையுச்சிக்குக் கூட்டிக்கிட்டு போய் குப்புறத் தள்ளிட்டியேடி... நீ போ. என்னை தனியா விட்டுட்டுப் போ..." கடற்கரை மணலில் உட்கார்ந்து கொண்டு பிசாசாய் கத்தினான்.

பத்து மணி வெய்யில் இரண்டு பேரையும் சுட்டெரித்தது. அதை உணராமல் இருவரும் உட்கார்ந்திருந்தார்கள்.

"எழுந்திருடா."

"என்ன...?"

"எழுந்திருடா... கையில காசு வைச்சிருக்கியா? இல்லேன்னா இந்த மோதிரத்தை வைச்சு, ஆயிரம் ரூபா வாங்கு."

"எதுக்கு?"

"என்னை எங்கியாவது லாட்ஜுக்கு கூட்டிட்டுப் போ."

"எதுக்கு?"

"ம்ம்... பல்லாங்குழி ஆட."

"என்ன சொல்றே சனியனே..." அவன் கத்தினான்.

"லாட்ஜுக்கு வா, சொல்றேன்."

"வேணாம்டி."

"சும்மா அலட்டாதே. நீ ஒன்னும் நல்லவனில்லை, வாடா."

"என்ன சொல்றே?"

"எனக்கு முன்னாடி, இதே

மலையுச்சிக்குக் கூட்டிக்கிட்டு போய் குப்புறத் தள்ளிட்டியேடி.. நீ போ. என்னை தனியா விட்டிட்டுப் போ''

கிளாஸ்ல இன்னொரு பொண்ணுகிட்ட ஐ லவ் யூன்னு சொ யிருக்கே - எனக்குத் தெரியும்.''

''நீ மட்டும் யோக்யமா? நீயும் பள்ளிக் கூடத்துல ப கும்போதே, லவ் லெட்டர் எழுதினியாமே?''

''ஆமாம் எழுதினேன். அதுக்கென்ன இப்போ?''

''ஒன்னுமில்லை.''

''அப்போ வா.''

அவர்கள் முற்பகலில் ஒரு லாட்ஜுக்குள் புகுந்தார்க பிற்பகலில் வெளியேறினார்கள்.

''இப்போ எப்படிப்பா இருக்கு மனசு?'' அவன் துவாய் கேட்டாள்.

''நீ என் பொம்பளை. என்னை விட்டு நீ எங்கியும் போ முடியாது. போக விடமாட்டேன்.'' அவன் உறுதியோடு உ மாகப் பேசினான்.

''கை கொடுறா. இப்பதான் நீ ஆம்பளை. இப்பதான் இ காதல்.''

அவர்கள் பிரிந்து அவரவர் வீட்டிற்குப் போனார்கள்.

அன்றிரவு தன் நிலையை அவன் வீட்டில் விளக்கினா

வீடு குதித்தாலும் செல்வி வெகு வேகமாய் இதுப சிந்தித்தாள். இரண்டு நாள் யாரோடும் பேசாமல் மௌனம இருந்தாள்.

''செல்வி, உங்கிட்ட பேசணும்.'' தங்கை ரகசியம சொல்ல, அக்காவும் தங்கையும் இரவு நேரம் பார்லருக்கு புகுந்து கதவு சாத்திக் கொண்டார்கள்.

''செல்வி, உனக்கு நான் ஏதாவது தொந்தரவு கொடுத் ருந்தா தயவு செய்து மன்னிச்சுடு.

நம்ம ஆளு ஒரு நல்ல ஆம்பளை. ஒரு மாதிரி ஏழை குடும்பம். அதே சமயம் பண்பான ஆசாமி. இவனை இழக் துக்கு நான் விரும்பலை.

முதல்ல ' லவ் யூன்னவுடனே, நான் உன்னை பத்திதான் யோசனை பண்ணினேன். இவளைப் பத்தி யோச காம இருக்கோமேன்னு விலகி வந்தேன். நான் விலக வில அந்த ஆள் பத்தி நல்லா தெரிஞ்சது.

சரி, இவனை கமிட் பண்ண வைச்ச, சிங்கப்பூருக்



அனுப்பிடுவோம். ரொம்ப அவசியமானா, ரெண்டு தடவை போயிட்டு வருவோம். ஒரு நாலு வருஷம் அங்கே துட்டு சம்பாதிச்சிட்டு வரட்டும். நம்ம காத்திருந்து கல்யாணம் பண்ணிக்கணும் அப்படிங்கற நினைப்போடதான். அந்த ஆளோட லாட்ஜுக்குப் போய் படுத்தேன். அவனை நானாதான் கூப்பிட்டேன்.

இந்த நாலு வருஷத்துல உனக்கும் கல்யாணம் ஆயிடும். பாண்டியனுக்கும் கல்யாணமாயிடும். நாமளும் நிம்மதியா கல்யாணம் பண்ணிக்கலாம்னு நினைச்சேன்.

இதுக்கெல்லாம் யார்கிட்டயும் ஆலோசனை கேட்டுகிட்டிருக்க முடியாது. கேட்டா சொல்லவும் மாட்டாங்க. அதனால, நானா ஒரு முடிவு எடுத்துட்டேன். உன்னை கஷ்டப்படுத்தியிருந்தா தயவு செய்து மன்னிச்சுடு.''

''ஒரு கஷ்டமும் இல்லை. அந்தப் பையனை நம்ம வீட்டுக்கு கூட்டிகிட்டு வா. அப்புறம், அவனை மட்டும் சிங்கப்பூர் போகச் சொல்லு. ஒரு வருஷம் உன்னைப் பிரிஞ்சு இருக்கச் சொல்லு. அதிலே அவன் லட்சணம் தெரிஞ்சிடும். அந்த ஒரு வருஷத்துல என்ன சேர்த்து வைச்சிருக்கான்னு பாரு. அதிலே அவன் கல்யாண ஆசை புரிஞ்சிடும். அந்த ஒரு வருஷம் உன் புத்தி எப்படி இருக்குன்னு பாரு. அதுல உன் யோக்கியதை உனக்குத் தெரிஞ்சிடும்.'' செல்வி, தட்டில் ஊற்றப்பட்ட மைசூர்பாகில் கோடு போடுவது போல, அவர்கள் புத்தியை, உணர்வுகளை பிரித்துப் போட்டாள்.

''வாங்க தம்பி, எங்க வீட்டுப் பொண்ணு மேல ஆசை வைச்சுட்டீங்களா? இது ரொம்ப நல்லது. பூர்வ ஜென்ம புண்ணியம். அவ நல்ல மனைவியா இருப்பான்னு, நான் உத்தரவாதம் தர்றேன்.

ஆறாயிரம் ஏழாயிரம் சம்பளத்துக்கெல்லாம் இப்போ மரியாதையில்லை. காதலிச்ச கல்யாணம் கட்றவங்க கொஞ்சம் கூடவே சம்பாதிக்கணும். காசு மேல குறியா இருக்கணும்.

அதனால, நீ சிங்கப்பூர் போ. உனக்குத் தெரிஞ்ச தொழிலை செய்து, வேருனி நில்லு. உனக்கே திருப்தியான பிறகு, இவளை வந்து கூட்டிக்கிட்டு போ.

சிங்கப்பூர் போறத்துக்கு முன்னாடி, இவளைப் பத்தி, ஃபர்ஸ்ட் சொல்லிடு.

ஒண்ணே ஒண்ணு சொல்றேன். இவள்தான் புருஷன்னு

பொம்பளை ஒத்துக்கிட்ட பிறகு, அவனை ஏதாவது சொ ஏமாத்திடலாம். அது கஷ்டமில்லை. ஐயோ ஏமாத்திட் னேன்னு அந்தப் பொண்ணு நினைச்சா, எப்பேர்ப்பட் கொம்பனா இருந்தாலும், அவன் தரையோட தரையாயிடுவா நான் பயமுறுத்தலை. பார்த்ததைச் சொல்றேன்.

இந்தப் பிரிவு உன்னை உனக்குச் சொல்லும். உன்னை பத்தி அவனுக்குச் சொல்லும். அவனைப் பத்தி உனக்கு சொல்லும்.

சீக்கிரம் செட்டிலாயிட்டா, அவனை சீக்கிரம் அனுப் சிருவேன்'' செல்வி வாக்குத் தந்தாள்.

''செல்வி அக்கா, உங்க கல்யாணம்?'' அவன் ஆது தோடு கேட்டான்.

செல்வி அவனை உற்றுப் பார்த்தாள். அவன் நல்லவ என்று புரிந்து போயிற்று.

''அதுபாட்டுக்கு நடக்கும், நீ சிங்கப்பூர் போ.''

''ஒரு வருஷத்துல கல்யாணம்னா அவனை சீண் சீண்டி வழிக்குக் கொண்டாந்திடுவேனே... நாலு வருஷ பிரியப் போறோமேன்னு தானே நான் இந்த டிராமா ஆடினேன் உனக்கு எப்ப கல்யாணம், சொல்லு செல்வி?'' தங்கையு கேட்டாள்.

''எனக்கு கல்யாணம் வேணாம் வாசுகி. என் மனசு அதி லேயில்லை.''

''கல்யாணமே பண்ணிக்க மாட்டியா?''

''அந்த மாதிரி வெறுத்துப் போகலை.''

''யாரையாவது லவ் பண்றியா?''

''இதுவரைக்கும் அப்படி ஆள் பார்க்கலை.''

''உனக்கு கல்யாணம் பண்ணாம, நான் எப்படி பண்றது?''

''அப்படில்லாம் ஒரு சட்டமுமில்லை, உனக்கு அவ சரம். நீ செய்துக்கறே. எனக்கு இப்ப வேண்டாம்.''

''ஏதாவது வருத்தத்துல பேசறியா?''

''ஒரு வருத்தமுமில்லை. என் மனசு முழுக்க என்னு டைய பியூட்டி பார்லர் மேலதான் இருக்கு. அதுமூலமா, நான் நிறைய பேருக்கு உதவி பண்றேன். அதுல கிடைக்கிற நிம்ம தியை கல்யாணம் கெடுத்துருமோன்னு பயமா இருக்கு. ராத்திரி



நல்லா தூங்கறேன். கல்யாணம் கட்டினா தூங்க முடியாது.

இது எல்லாத்தையும் விட, இப்போ எனக்கு இருபத்தி ஒம்போது வயசு. கல்யாணத்துக்கான பருவத்தை நான் தாண்டிட்டேன்.

இப்படியே இருந்துரு இப்படியே இருந்துருன்னுதான் மனசு கத்துது. அதனால, தயவு செய்து, உன் கல்யாணத்தை என் கல்யாணத்தோட முடிச்சு போடாதே.

போ. போய் அவனை சிங்கப்பூருக்கு அனுப்பிச்சுட்டு வா.''

தங்கை அக்காவின் பேச்சுக்கு கட்டுப்பட்டு காதலனுக்கு வாயார முத்தம் கொடுத்து, சிங்கப்பூருக்கு அனுப்பினாள். திரும்ப வந்து, அக்காவை ஒரு குற்ற உணர்வோடு உற்றுப்பார்க்க ஆரம்பித்தாள்.

கம்ப்யூட்டர் வகுப்பு போன நேரம் போக, மற்ற நேரத்தில் அக்காவுக்கு உதவியாக இருந்தாள்.

''நான் செண்ட்ரல் கவர்ன்மெண்ட்ல வேலை செய்றேன். நாலாயிரம் ரூபா சம்பளம். தங்கை தம்பின்னு எல்லாரையும் மேல கொண்டு வர்றதுக்குள்ளே, எனக்கு முப்பது வயசாயிடுச்சு. கடவுள் புண்ணியத்துல அடுத்த மாசம் கல்யாணம்.

ஆனா, என்னைப் பார்த்தா கல்யாணப் பொண்ணு மாதிரியே தெரியலை. என் மூஞ்சி எண்ணெய் வழியறது. தலை முடியெல்லாம் கட்டை கட்டையா இருக்கு. இத்தனைக்கும் மூணு வேளை சோப்பு போட்டு அலம்பறேன். மாநிறமா இருக்கேன். ஏன் என் மூஞ்சி பளபளன்னு ஆகலை?''

''ஆகும். ஆக வைக்கலாம்.'' செல்வி பதில் சொன்னாள்.

''ஆனா... இதுக்காக ஆயிரம் ரூபாய்லாம் செலவு பண்ண முடியாது.''

''யார் சொன்னா ஆயிரம் ரூபா ஆகும்னு? நூறு ரூபா கொடுங்க போறும். அதுவும் உங்களுக்கு திருப்தி இருந்தா கொடுங்க, போறும்.''

அந்தப் பெண்ணை, செல்வி முகம் கழுவிக் கொண்டு வரச் சொன்னாள்.

தலைக்கு ஷாம்பூ போட்டு, வாஷ் பேசினில் அலசினாள். கண்டிஷனர் போட்டு முடி முழுவதும் நீவினாள். அப்படியே நாற்காலியில் உட்கார வைத்து புருவத்தை சரி செய்தாள்.

முகத்திற்கு பிளீச் செய்தாள். களிமண் குழைவை தடவி, அ உலரும் முன்பு, ஸ்பாஞ்ச்சால் அழுத்தித் துடைத்தாள்.

முகம் முற்றிலும் மாறியிருந்தது. கன்னங்களிலும் மூக் நுனியிலும், நெற்றிமேட்டிலும் பளபளப்பு கூடியிருந்தது.

"இப்ப நான் செய்ததை நீங்களே செய்துக்கலாம். உங் வீட்லியே செய்துக்கலாம். இந்தாங்க, இது பிளீச்சிங் க்ரீம், இது களிமண் பவுடர். இது என்னோட அன்பளிப்பு. வாரத்துக்கு ஒ தடவை போட்டுக்கங்க. ரெண்டுதடவை தலைக்கு குளிச் கண்டீஷனர் போடுங்க. ஏதாவது சந்தேகம் இருந்தா, தாராள வந்து கேளுங்க."

"ரொம்ப நன்றி மேடம். இப்போ இதுக்கு எவ்வள சார்ஜ்?"

"எதுவுமில்லை."

அந்தப்பெண் திகைத்தது. செல்வியின் கைகளை கண்களில் ஒற்றிக் கொண்டது.

பத்திரிகை கொடுக்க வருங்காலப் புருஷனோடு வந்தது.

"நானும் களிமண் குழைவு போட்டுக்கலாமா? எ முகமும் எண்ணெய் வழியுது. இல்ல இது லேடீஸ்க்குதானா?"

"யார் வேணா போட்டுக்கலாம். நாற்காலியில உக்கா ருங்க. உங்க வுட்பியைவிட்டே, உங்களுக்கு மட்பேக் போட சொல்றேன்".

அவளுக்கு குழைக்க கற்றுக் கொடுத்தாள். பூசக் கற்று கொடுத்தாள். பூசியதை வழித்தெடுக்க கற்றுக் கொடுத்தாள்.

அந்த முப்பத்தி ஐந்து வயது ஆணும் முகப்பொலி வோடு, சந்தோஷத்தோடு வாழ்த்திவிட்டுப்போனான்.

அந்தப்பெண் ஒரே வாரத்தில் இருபது முப்பது கஸ்டம களை செல்விக்கு அறிமுகப்படுத்தினாள்.

அவள் அறிமுகப்படுத்தியதில் பளிச்சென்று ஒருபெண் செல்வியோடு மிக நெருக்கமாக ஒட்டிக் கொண்டாள்.

"நானும் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் பாதுகாப்புத்துறை சீனியர் கிளார்க்கா இருக்கேன். எம்.ஏ.சோஷியாலஜி, சும்ம பொழுது போகலைன்னு எம்.ஏ.ஹிஸ்ட்ரி கரஸ்பாண்டன்ட் கோர்ஸ்ல சேர்ந்தேன்.

என்னால சும்மா இருக்க முடியாது. ஏதாவது



ராத்திரி
எப்பவாவது
ஒரு
மாதிரி
ஆயிடுது.
நான
தலகாணிய
கட்டிண்டு
என்ன
கட்டிக்கடா.
என்னை
கட்டிக்கடான்னு
அழறேன்.



செய்துண்டே இருக்கணும். அதனாலதான் படிக்கண்டே இருக்கேன். பத்துலேருந்து அஞ்சு ஆபீஸ். சனி ஞாயிறு லீவு. போக வர டூவீலர் இருக்கு.

எங்க அப்பா வக்கீல். அம்மா டீச்சர். அக்காவுக்கும், அண்ணாவுக்கும் கல்யாணம் ஆயிடுத்து.

அக்கா அவ்வளோ நல்லாயில்லை. அண்ணாவும் பொண்டாட்டியை படுத்தறான். அதனால, எனக்கு கல்யாணம் பண்ணிக்க பயமா இருக்கு.

நான் இங்கே வந்தது உங்களைப் பார்க்கத்தான்.

நீங்க கல்யாணமே பண்ணிக்கலையாமே.. வேணாம்னு இருந்துட்டீங்களாமே...

எனக்கும் அப்படியொரு எண்ணம் இருக்கு. ஆனா, திடீர்னு சில சமயம் புருஷன் வேணும்னு தோணுது. குழந்தை வேணும்னு தோணுது.

ராத்திரி எப்பாவது ஒரு மாதிரியாயிடுது. நான் தலகாணிய கட்டிண்டு, என்னை கட்டிக்கடா, என்னை கட்டிக்கடான்னு அழறேன்.

நான் பேசறது கொஞ்சம் ஆபாசமா இருக்கா? பொம்மனாட்டிக்கு பொம்மனாட்டி பேசறதுல என்ன வெட்கம்? பியூட்டிங்கறது என்ன உடம்பா, மனசுதானே...? மனசுல குழப்பம் இருந்து, முகத்துல அழகு இருந்தா என்ன புண்ணியம்?

ஆனா, உங்களைப்பார்த்தா, மனசிலேயும் தெளிவா இருக்கறவா மாதிரி தெரியறது. ரொம்ப உறுதியா இருக்கறவா மாதிரி தெரியறது.

ப்ளீஸ்... என் மூஞ்சி இப்படியே

இருந்துட்டு போகட்டும் என் மனசைமாத்துங்கோளேன், கல்
ணமே வேண்டாம்னு இருக்கப்பண்ணுங்கோளேன்.''

ஐப்பசிமாதம் பொதுக் கொண்ட வானம் போல, காற்றோடு கலந்துவீசும் மழைபோல, மின்னி இடித்து, தாக்கும்சாமழை போல, அந்தப் பெண் இடைவிடாது பேசி

''இதைப்பத்தி கேட்டு தெரிஞ்சுக்கமுடியாது. யார் டயும் பேசி முடிவுக்கு வரமுடியாது.'' இரண்டே வரிகள் செல்வி பதில் சொன்னாள்.

''நாற்காலியில உட்கார.'' அவளை ஏற்றி உட்கா வைத்தாள்.

ஒருமணி நேரத்தில் அவள் முகத்தை மாற்றிக்க டினாள்.

''ஏன் இதைப்பத்தி பேசமுடியாதுங்கறீங்க? கல்யாண பண்ணிக்கலாமா கூடாதான்னு பேசறது அசிங்கமா?''

''பேச அவசியமில்லை. ஆயிரம் விஷயம் கலந்து வெ பேசமுடியும். ஆனா, உன்னுடைய ஆயிரமும், என்னுடை ஆயிரமும் வெவ்வேற. ரெண்டு மூணு விஷயத்தைப் பரிமாறி றதுக்குள்ளேயே போரடிச்சிடும். ஆயிரம் விஷயத்தை எப்ப பரிமாறிக்க முடியும்? நான் சரின்னு எப்படி உனக்கு புரி வைக்கிறது?

அதனால, இதெல்லாம் மத்தவங்ககிட்ட பேசாதே. நீ யோசனை பண்ணு. நீயா ஒரு முடிவுக்கு வா.''

''கடவுளே...'' அந்தப் பெண் கன்னத்தில் கைவைத்து அதிர்ந்து அவளைப்பார்த்தது.

''இதை வெளியே சொல்லவேண்டாம்னு நா சொல்றத்துக்கு இன்னொரு காரணமும் இருக்கு. உன்னைவி உன்மேல அக்கறை இருக்கறவங்க வேறயார்? உன்னைவி உன்னைப்பத்தி நல்லாத் தெரிஞ்சவங்க யார்?

அதனாலதான் சொல்றேன். யார்கிட்டயுமே இதை கேக்க வேண்டாம். உன் கல்யாணத்தைப் பத்தின அபிப்ராய உன்னைத்தவிர யாருக்குமே சொல்லமுடியாது. அப்படியா வது சொல்ல முயற்சி பண்ணினாங்கன்னு வைச்சுக்கோ நீயாரை கல்யாணம் பண்ணிக்கணும், எப்படி கல்யாண பண்ணிக்கணும்னு சொல்றாங்கன்னு வைச்சுக்கோ... அவங் ஏமாத்தறவங்க. உம்மேல அக்கறை இல்லாதவங்க. அவங் ளோடு பேசறதே வேஸ்ட்.''



அந்தப் பெண் துவண்டுபோய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டது. சிறிதுநேரம் பொறுத்து நன்றி சொன்னது.

''எதுக்கு நன்றி?''

''இதை கத்துக் கொடுத்ததற்கு. எங்கிட்ட உண்மையா இருந்ததுக்கு. உங்க வேலைய விட்டு ஆதரவா பேசினதுக்கு. ஆமாவே. எம்பேரு ஞாபகம் இருக்கா?

''சொல்லவே இல்லியே...''

''நான் சுப்புலக்ஷ்மி. நான் எம்.ஏ. ஹிஸ்டரிய நிறுத்திடப் போறேன். உங்ககிட்ட ஜாயின் பண்ணப் போறேன்.''

''எங்கிட்டயா... எதுக்கு?''

''மேக்கப் போட கத்துக் குடுங்க. அதுக்கு க்ளாஸ் ஆரம்பிங்க. மூணு மாசம் கோர்ஸ்னு தீர்மானம் பண்ணி, எம்ப்பா ஒரு அமௌண்ட் கேளுங்க.''

''வேணாம் சுப்புலக்ஷ்மி. இதுக்கே நேரமில்லை.'' செல்வி வெளியே மறுத்தாலும் உள்ளுக்குள் அந்த ஆசை விஸ்வரூபமெடுக்கத் துவங்கியது.

வகுப்புகள் எடுத்தாலென்ன... கேள்வி வந்தது.

''டக்குன்னு மாட்டேன்னு சொல்லாதீங்க. நான் ஏதோ தலைய ஊணி, காலை ஊணி மேலே வந்துட்டேன். என்னை மாதிரி நிறைய ரெண்டுங்கட்டான் தவிக்குது தெரியுமா? வீட்டோட உட்கார வைக்க, பிளீச்சிங்கும், கரிமண் பேக்கும், ஹென்னா ட்ரீட்மெண்டும், எவளாவது செய்தாக்க அம்பது நூறு சம்பாதிக்கலாம் இல்லியா?

பொண்ணு பெரியவளாற துக்குப் போயோ, கல்யாணத்துக்குப் போயோ, வளைகாப்பு சீமந்தத்துக்குப் போயோ இன்னும் கூட சம்பாதிப்பாங்க இல்லியா?

எஸ்.எஸ்.எல்.சி. படிச்ச ஏழைப் பொண்ணுக்கு இது கௌரவமான வேலை இல்லியா?

அப்புறம் வகுப்புகளை இங்கிலீஷ்ல எடுக்காதீங்க. தமிழ்ல எடுங்க. செல்வின்னு எவ்ளோ அழகான தமிழ்பேர் உங்களுக்கு? எஸ்.எஸ்.எல்.சி. படிச்ச பொண்ணுங்களுக்கு என்ன இங்கிலீஷ் தெரியப் போவுது?

இந்த வேலைக்கு இங்கிலீஷ்ல பேசி ஏன் மிரட்டணும்? தமிழ்ல சொல்ல முடியுமில்லே... நீங்க தமிழ்லயே புஸ்தகம் கூட

போடலாம். ஆயிரக் கணக்குல வித்துரும்.''

செல்வி மெல்ல நகர்ந்து சுப்புலக்ஷ்மியின் கைகளை பற்றிக் கொண்டாள்.

இந்தப் பெண்ணிடம் இடையறாது ஒரு அன்பு ஊற்று பொங்கிக் கொண்டிருக்கிறது. சற்று இரைச்சலோடு பாய்ந்து பரவிக் கொண்டிருக்கிறது.

இவள் சொன்னதை யோசித்துப் பார்க்க வேண்டும். இவள் கருணையை உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

''சுப்புலக்ஷ்மி, நாளைக்கும் வாயேன்.''

ஆவலாய் கேட்டாள். ''என்ன நாளைக்கு?'' - சுப்புலக்ஷ்மி.

''இதுபத்தி பேசணும்.''

சுப்புலக்ஷ்மி காலையில் பத்து மணிக்கு வந்து நின்றாள்.

''என்ன... ஆபீஸ் போகலை?'' செல்விக்கு ஆச்சரியம் பொங்கியது.

''நீங்கதான் வரச் சொன்னீங்களே?''

''கடவுளே... ஆபீஸை முடிச்சுட்டு சாயந்தரம் வரக்கூடாதா?''

''எனக்கு தாங்காது. எப்படா விடியும்னு பார்த்திருந்து எட்டு மணிக்கே குளிச்சு, சாப்பிட்டு ரெடியாயிட்டு ஒம்பது மணிக்கே வந்துட்டேன்.'' சுப்புலக்ஷ்மி வெள்ளையாய்ப் பேசினாள்.

''ஏன்...?''

''உங்களைப் பார்க்கணும் போல ஒரு வெறி. உங்களோட பேசிண்டே இருக்கணும்போல ஒரு ஆசை.''

''எனக்கு இப்படி ஒட்டினா பிடிக்காது.'' செல்வி கடுகடுத்தாள்.

''எனக்கு அதுபத்தி அக்கறை கிடையாது.''

''உன் வேலையை நீ பார்த்துக்கோ லக்ஷ்மி.''

''என் வேலை இங்கதான்.''

''மத்திய சர்க்கார் வேலைய விட்டுறப் போறியா?''

''இல்லை. மேற்கொண்டு என்ன பண்றதுன்னு தெரியாத முழிக்கிறதை நிறுத்தப் போறேன். எம்.ஏ. ஹிஸ்டரி பண்ணலாமா, கம்பெனி செகரடெரியேட் பண்ணலாமா அப்ப



ன்னு அலையறதை நிறுத்தப் போறேன். ஒரு மூணு மாசம் உங்ககிட்ட வேலை கத்துகிட்ட பிறகு, ஒவ்வொருத்தர் வீட்டுக்கே போய் இது சொல்லித்தரப் போறேன்.''

''சரி வா.''

சுப்புலக்ஷ்மியை செல்வி வீட்டுக்கு அழைத்துப் போனாள்.

''இவங்கதான் அந்த செண்ட்ரல் கவர்ன்மெண்டா?'' பாண்டியன் வரவேற்றான். ''வாங்க உக்காருங்க. காபி சாப்பிட்டீங்களா, டீ சாப்பிட்றீங்களா?'' சமையலறை வாசலில் நின்று கேட்டான்.

சுப்புலக்ஷ்மி விழித்தாள். என்ன இது என்பது போல் செல்வியைப் பார்த்தாள்.

''இது என் தம்பி பாண்டியன். காபி போடறதுல, எக்ஸ்பர்ட்.

அம்மாவுக்கு முடியாது. நான் வெளியே போயிடுவேன். அப்பல்லாம் இவன்தான் சமைப்பான். ஐயோ சமைக்க வைச்சுட்டாங்களேன்னு அலட்டிக்காத. ரொம்ப பிரியமா பண்ணுவான். எங்க வீடு வேற மாதிரி சுப்புலக்ஷ்மி.''

''ரொம்ப நல்லா இருக்குங்க. நான் சொன்னதை யோசனை பண்ணினீங்களா?''

''தப்பு. நீங்க சொன்னது சரியா வராது. நான் இன்னிக்கு படிச்சு பாஸ் பண்ணினதே, செல்வியோட பியூட்டி பார்லராலதான். மூணு மாசம் செல்விகிட்ட வேலை கத்துட்டு, நாலாவது மாசம் எதிர்க்க கடை போட்ருவே. தேவையா இது?'' பாண்டியன் உள்ளேயிருந்து உரக்க குரல் கொடுத்தான்.

''போகட்டும்... யானையும் பூனையும் ஒண்ணாயிடுமா...?'' சுப்புலக்ஷ்மி சமையலறை வாசலுக்குப் போய் நின்று கொண்டாள். ''செல்வி பண்றா மாதிரி வருமா? மருந்து கிடைச்சுடுத்துன்னா போதுமா? வைத்தியம் பார்க்க வேணாமா? மேக்கப்னா விளையாட்டா?''

''வெறும் ட்ரெய்னிங் மட்டும் போதுமா? அதுக்கு வேற ஏதோ ஒரு சூட்சுமம் தேவையா இருக்கு. இங்கிலீஷ்ல ஈதெடிக் சென்ஸ்'ன்னு சொல்லுவா. கலையுணர்வு, அழகியல் உணர்வு இப்படி ஏதாவது தமிழ்லயும் சொல்லலாம். அது ஆளாளுக்கு வேறுபடும். செல்வியினுடைய இந்தத் திறமையை யாரும் திருட முடியாது. அப்படி செல்வியை விட பிரமாதமான ஆளா

இருந்தா, செல்விகிட்ட வராதயே வெளியே வந்துருவா."

"பத்து வருஷம் முன்னாடி பியூட்டி பார்லருக்கு ம
தையேயில்ல. மசாஜ் கிளப்புன்னு எவ்வளவு கேவலமா பே
ளாங்க. இப்ப பேட்டைக்கு ரெண்டு இருக்கு. நாளைக்கு தெ
வுக்கு ஒண்ணு இருக்கும்."

"அதுக்கு அர்த்தம், கஸ்டமர்ஸ் ஜாஸ்தியாயிட்டாங்க
றதுதான்."

"ஒரு வீட்ல மூணு பொம்மனாட்டி இருந்தா, பியூட்
பார்லர் வந்துருவாங்க. டாக்டர்கிட்டப் போறது எவ்வளோ முக்
யமோ, அவ்வளோ முக்கியம் பார்லர் அப்படின்னு ஆயிடும்."

"அதனால நூறு பேருக்கு வகுப்பு நடத்தறதுல எந்த
தப்புமில்லை."

உள்ளே பால் குக்கர் சீறிக் கத்தியது. அருகில் நின்று ப
பளப்பான பலகையில், ஆப்பிள் நறுக்கிக் கொண்டிருந்
பாண்டியன், குமிழியிலிருந்து வெளிப்பட்ட நீராவித் தாக்
தலால், நிலை குலைந்து போனான். சட்டென்று கை உத
கூர்மையான கத்தி, இடது கை நடுவிரலையும், ஆள் காட்டி வி
லையும் பதம் பார்த்து விட்டது.

பாண்டியன் அலறினான்.

சுப்புலக்ஷ்மி பாய்ந்து உள்ளே ஓடினாள். அடுப்பை
அணைத்தாள். பால் பாத்திரத்தை திருப்பினாள். பாண்டியனின்
இடது கையை இறுக்கப் பிடித்து, சமையலறை பேஸினுக்கு
போய், நீர் திறந்துவிட்டு, நேரே பிடித்தாள். இடுப்பு கர்ச்சீபை
நனைத்து சட்டென்று சுற்றினாள்.

'பென்'சாயின் இருக்கா, பென்சாயின் இருக்கா?
கத்தினாள்.

செல்வி கொண்டு வந்ததும், ஈரமான கர்ச்சீப்பில்
மருந்தை ஊற்றினாள்.

"பால் குக்கர் கத்தும்னு தெரியாதா? கரெக்ட்டா மூஞ்
யில அடி வாங்கியிருப்பீங்களே... இதான் சமையல் பண்ற லட்ச
ணமா?"

"விடுங்க, நான் காபி போட்டுக்கறேன்" அவனை கூடத்
திற்கு தள்ளிவிட்டு, மிகக் குறைந்த நேரத்தில் டவரா டம்ளரில்
காபி போட்டுக் கொண்டு வந்தாள்.

"காபின்னா டவரா டம்ளர்தான். டீன்னா கப் அண்ட்
சாஸர். கூல்டிரிங்ஸ்னா கண்ணாடி டம்ளர்."



பாண்டியன் அவளை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

"நீங்க ஐயர் பொண்ணா?" சடக்கென்று கேட்டான்.

"எதை வைச்சு கேக்கறீங்க? பாஷையை வைச்சா? ஆறு மாசம் எங்க வீட்ல இருந்தீங்கன்னா, உங்களுக்கும் இந்த பாஷை வந்துடும். ஆறு மாசம் நான் கோயம்புத்தூர்ல இருந்தா, என்னை கவுண்டரான்னு கேப்பாங்க."

"ஒரு உயரத்துக்குப் போன பிறகு, ஜாதியெல்லாம் கேட்கக் கூடாது. நம்ம ஜாதி மிடில்கிளாஸ், ஒண்ணுமே இல்லேன்னும் இல்லாம, ஓஹோன்னும் இல்லாம, ஒரு நடுவாந்திரத்துல இருக்கற வர்க்கம்."

"எங்க வீட்டு வேலைக்காரி நாலும் நாலும் எட்டு மணி நேரம்தான் வேலை செய்றா, அதுக்கு அப்புறம் டி.வி. பார்த்தே ஆகணும். கூடை முடைய கத்துக்கோ. ஒயர் பின்ன கத்துக்கோன்னு சொல்றேன். மாட்டேங்கிறா."

"என்னால கத்துக்காம இருக்க முடியாது. இதனால, நான் பெரிய பணக்காரி ஆயிடுவேனான்னா, அதுவும் கிடையாது. கொஞ்சம் கொஞ்சமா முன்னேர்றதுதான் நம்முடைய வாழ்க்கை. அதுதான் நம்முடைய சந்தோஷம். சின்னச் சின்ன வெற்றிகள் தான் நம்ம லட்சியம்."

"ஒரு கொலை பண்ணினா, பத்து லட்ச ரூபா கிடைக்கும் அப்படின்னு சொன்னா வேணாம்னு சொல்லிடுவோம். யோசிக்காம மறுத்திடுவோம். நம்மை நம்ம தப்புக்கள் ரொம்ப விரட்டும். ஏகப்பட்ட கலாட்டா பண்ணும். மத்தவங்க தர்ற தண்டனையை விட, நம்ம மனசு நம்மை சித்ரவதை பண்ணும்."

பாண்டியன் காபியை ரசித்துக் குடித்தான்.

"ரொம்பப் பக்குவமா கலந்திருக்கீங்க. நீங்க ஐயர்தான்.

"சொல்லிக் கொடுத்தா நான் சிக்கன் தோட்டி ஃபைவ் கூட பண்ணுவேன்.

"தோட்டி ஃபைவ்வா?"

"தோட்டி ஃபைவ் இல்லியா, தப்பா? சரி, ஃபார்ட்டி ஃபைவ்".

"சிக்கன் சிக்ஸ்டி ஃபைவ்ங்க".

"எனக்கு சொல்லிக் கொடுத்தா அதையும் சமைப்பேன்,

மறுபடி சொல்றேன் ஜாதி பேசாதீங்க."

அதற்குப் பிறகு அவர்கள் வகுப்புகள் ஆரம்பிப்பது பற்றி, மும்முரமாய் பேசினார்கள். பாடங்கள் தயாரித்தார்கள்.

இரண்டாவது நாள், மூன்றாவது நாள், நான்காவது நாள் என்று பேச்சு தொடர்ந்தது.

அவள் இருப்பு விஷயங்களை வேகமாக நகர்த்திற்று. ஒரு முடிவுக்கு மிக எளிதில் வரமுடிந்தது. அவள் கேள்விகள் கூர்மையாக இருந்தன. அதற்கு பதில் தேடிப்போகும் வேகம் அபாரமாக இருந்தது.

அவளுக்கு திட்டமிடுதல் தெரிந்திருந்தது.

ஐந்தாம் நாள் அவளில்லாத போது, அக்காவும், தம்பியும் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தார்கள். அவளுடைய தொலைபேசி எண் கூட வாங்கி வைத்துக் கொள்ளவில்லையே என்று வருத்தப்பட்டார்கள்.

பேப்பரில் விளம்பரம் கொடுத்துவிட்டு வெளியே வந்தவன், அவள் வேலை இடத்திற்கு தேடிக் கொண்டு போனான்.

"சுப்பு லஷ்மின்னு நாலுபேர் இருக்காங்க. இந்த ஒரு செக்ஷன்லியே, எந்த சுப்புலஷ்மியை தேடுறீங்க? இது கடல் சார், டிபார்ட்மெண்ட் பேர் தெரியாம, ஆள் தேடமுடியாது. பதினொன்னரை மணிக்கு டீ சாப்பிட இப்படி அலை அலையா வருவாங்க நூத்துக்கு தொண்ணூத்தி ஒம்பது பேர் டீ சாப்பிடுவாங்க அப்போ, பார்த்து பேசிக்கோங்க, வெறுமனே பேர் சொல்லி உள்ளே புகுந்தீங்கன்னா தப்பாயிடும், தேடறவங்களுக்கும் மரியாதை இருக்காது. அதுவும் நீங்க தேடறது லேடீஸ், அப்படி ஓரமா நிக்கிறதே நல்லது" யாரோ ஒருவர் பொறுப்பாக இதைச் சொல்ல, அவன் காத்திருந்தான்.

அரைமணிக்குப் பிறகு, தொலைவே அவள் பேசிக் கொண்டுவருவது தெரிந்தது.

"ஏன் காலல நகம் வளர்க்கறே? ஏன் கை நகத்தை வெட்டவேயில்லை. ஆம்பிளையா இருந்தாலும் சரி, பொம்பளையா இருந்தாலும் சரி, நான் காலையும், கையையும்தான் பாக்கிறேன். அப்புறம்தான் மூஞ்சியப் பார்ப்பேன்".

"நகங்களை ஒழுங்கா வைச்சுக்காதவன் மனசை ஒழுங்கா வைச்சுக்கமாட்டான். பொண்டாட்டியா இருந்தா, புருஷனை ஏமாத்தறவன்னு தைரியமா சொல்லுவேன்".



"நான் சொல்றதை நம்பலையா... இப்படிப்பட்ட நகங்களையே சுத்தமா வைக்கத் தெரியாதவர், வேற எதையும் சரியா வைக்க மாட்டார்".

"அழகுங்கற விஷயத்தை நகத்துல ஆரம்பிக்கணும். பாலீஷ் பண்ணு பண்ணாதபோ, ஒட்ட வெட்டி வைச்சுக்கோ. தினம் காலை க்ளீன் பண்ணு உன்னை நீ நேசி, உன உடம்பு நேசப்பிரியப்படு. அப்பதான் அடுத்தவனை நேசிக்க முடியும்".

"ஆரோக்யம், அழகு ரெண்டும் கிட்டக்கிட்ட இருக்கு. அழகா இருக்கறது கூட ஒரு ஆரோக்கியம்தான் மனசு ஆரோக்யமா இருந்தா உடம்பு அழகா இருக்கும். முகத்தை அழகுபடுத்திண்டா மனசு ஆரோக்யம் நல்லா வளரும்.

"இந்த வித மனசு ஆரோக்கியத்துக்கு ஒரு டாக்டர் இருக்கா. டாக்டர்னா டாக்டர் இல்ல... டாக்டர் மாதிரி. செல்வின்னு பேரு. எக்ஸலண்ட் லேடி. வேலை தெரிஞ்சவங்க மட்டுமில்லை. மனுஷாள் மனசைத் தெரிஞ்சவங்க."

"வந்து பேசு. முகத்தை அழகுபடுத்திக்கோ. செத்துப் போயிடுவேன் தற்கொலை பண்ணிக்குவேனெலாம் சொல்லாதே."

"நான் மத்தியானம் லீவு போட்டுட்டு போகப் போறேன். அஞ்சு நாள் ஸிக்லீவு போட்ருக்கேன். என்கூட வா. ஒரு புடவைக்கு மூவாயிரம் நாலாயிரம்னு செலவு பண்றீங்க. முந்நூறு ரூபா கொடுத்து மூஞ்சியை சரிபண்ணக்கூடாதா?" அவள் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

பாண்டியன் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தான். பத்து பேருக்கு நடுவே அவளிடம் பேச கூச்சப்பட்டான். செல்வியிடம் வந்து அவள் பேசியதை தெரிவித்தான்.

"ஏன் அக்கா அந்தப் பொண்ணு உம்மேல இவ்ளோ உயிரா இருக்கு? ஏன் உன்னை இப்படி பாராட்டிப் பேசுது."

"சிலபேர் அப்படி இருப்பாங்க பாண்டியன். ஆயிரத்துக்கு ஒருத்தர் அப்படி இருப்பாங்க. எங்கே நல்லவிஷயம் தென்பட்டாலும், அந்த இடத்துக்கு அவங்களும் ஓடிவருவாங்க. கொஞ்சம் நல்லவங்கன்னு தெரிஞ்சாக்கூட ரொம்ப கொண்டாடுவாங்க."

"படிப்பு, நல்ல குடும்ப சூழ்நிலை, சிறிதளவு வருமானம், கடவுள் நம்பிக்கை, இலக்கிய ஆர்வம் இதெல்லாம், நிறைஞ்சு இருக்கறவங்களுக்கு இப்படித்தோணும்."

"சின்ன உதவி செய்தாக்கூட நன்றியில நடுங்கிருவாங்க. அதே சமயம், ஒரு வார்த்தை தப்பா சொல்லி டாக்கூட தாங்க முடியாது. இப்ப சொல்லிட்டீங்களே இப்படி சொல்லி ட்டீங்களேன்னு புலம்பிடுவாங்க.

"மத்தியானம் சுப்புலக்ஷ்மி வரேன்னு சொல்லியிருக்கா."

"பாண்டியன், அந்த பொண்ணுக்கு ஏதாவது பண்ணணும் அவளை மொத்தமா அக்கௌண்ட் கவனிக்கச் சொல்லணும். நீ என்ன சொல்றே?"

"அந்தப் பொண்ணு மேக்க கத்துக்கணுமனு சொல்லுது."

"வேணாம்டா, இதெல்லாம் யா வேணா பண்ணலாம். ஆனா, நிர்வாக கஷ்டம், எல்லாராலேயும் பண்ணமுடி யாது. எனக்கு அதுக்குத்தான் ஆள் வேணும்."

"அது ஏழைப்பொண்ணா தெ யுதுடா. ஏதுனா நகை வாங்கிக் கொடு கணும்."

இன்னைக்கி எனக்கு ஆறு கஸ்டமர்ஸ் இருக்காங்க. சுப்புலஷ்மி வேற யாரையோ கூட்டிகிட்டு வரப் போறா

"எது மாதிரி?"

"குடை ஜிமிக்கி."

"கரெக்ட்."

"இன்னிக்கி எனக்கு ஆறுகஸ் டமர்ஸ் இருக்காங்க. சுப்புலக்ஷ்மிவேற யாரையோ கூட்டிக்கிட்டு வரப்போறா நீயும் சுப்புலக்ஷ்மியும் உட்கார்ந்து வரவு செலவு பத்தி பேசுங்க. என்ன கட்டணம் வாங்கலாம்னு முடிவு பண்ணுங்க."

அவள் வந்து படியேறினாள்.

அவன் அவளை மிகபவ்யமாக வரவேற்றான்.

அவள் மீது தனக்கு ஏற்பு அதிக



தை உணர்ந்தான்.

பல்வேறு விதமாக யோசித்து நான்குமணி நேரத்தில் ர்கள். ஒரு திட்டத்தை தயாரித்தார்கள்.

அவளுக்கு அது கைவந்தக்கலையாக இருந்தது.

"ஹவுஸ் சர்ஜன் முடிச்சிட்டு என்ன பண்ணப் றீங்க?" வேலைக்கு நடுவே அவள் கேட்டாள்.

"தெரியலை."

"இதான், நம்ம ஊரு ஆளுங்க பண்ற பெரியதப்பு. ம்ப சோமபேறித்தனமான பதில். மூணுசாய்ஸ் வைக்க க. இது பண்ணப் போறேன், இது பண்ணப்போறேன். இது ண்ணப்போறேன் அப்படின்னு சொல்லுங்க. தெரியலைன்னு ற பதில், உங்களை பலவீனப்படுத்தும். உற்சாகம் இழக் வைக்கும்."

"டாக்டருக்குப் படிச்சுட்டு உற்சாகமில்லாம இருக்க மா? இந்தமாதிரி சொல்லாதீங்க."

"நீ என்ன பண்ணப்போற சுப்புலக்ஷ்மி?" அவன் ப்பார்த்து ஒரு உறுதியோடு, ஒருமையில் அழைத்தான்.

"என்னால சென்ட்ரல் கவர்ன்மென்ட் வேலை ரொம்ப ள் பார்க்க முடியாது. எனக்கு அது போறலை. அதனால..."

"அதனால...?"

"பியூட்டிபார்லர் ஆரம்பிக்கப்போறேன்.

"நேர் எதிர்க்கயா?"

"நங்கநல்லூர், குரோம்பேட்டை அந்தமாதிரி இடத்துல, தேகமா, செல்வி விருப்பப்பட்டா, அவங்களோட பார்ட்னரா டுவேன். நல்லா வேலை செய்றவங்க ரெண்டுபேர் டைச்சாப் போதும், நான் பேங்கல லோன் வாங்கி, கஸ்டமரை ன்வாஷ் பண்ணி பத்திரிகைல பேட்டி கொடுத்து, டி.வில மோ நடத்தி, வாராவாரம் என்னவெல்லாம் செய்யணும்னு ளம்பரப்பு செய்து, பிஸ்னஸ இம்ப்ரூவ் பண்ணிடுவேன்".

"இது செட்டிலாயிட்டா, வீடு போட்டுட்டு, பார்லர் ஆரம் ச்ச, அப்புறம் வேலைய ரிஸைன் பண்ணிடுவேன். அப்புறம் ர்லாதான் தொழில் அஞ்சு ஆறு பிராஞ்ச் ஆரம்பிச்சிடுவேன். லேஜ் துவங்குவேன். இப்படி நிறைய்ய இருக்க செல்வி ர்ட்னரா சேர்ந்துட்டா, இது வேகமா இருக்கும்."

"என்னை பார்ட்னரா சேர்த்துக்கறியா?"

"ஓ யெஸ்." வேகமாய் ஆரம்பித்தவன் சட்டென்று நிறுத்தினான், அவளை உற்றுப் பார்த்தான்.

"என்ன சொன்னீங்க புரியலியே..."

லேசான கலவரத்துடன் கேட்டான்.

"என்னை கல்யாணம் பண்ணிக்கறியான்னு கேட்டேன்."

"ஏன் திடீர்னு."

"காரணம் இருக்கு. நான் கொஞ்சம் சோம்ப கொஞ்சம் சுகவாசி. நாளைக்கு செய்துக்கலாம் நாளை செய்துக்கலாம்னு, தள்ளி போடறவன். உண்மையில் நாளைக்கி என்ன பண்றதுன்னு எனக்கு தெரியில்லை. அ தள்ளிப்போடக் காரணம்."

யாராவது விரட்டினா நல்லாருக்குமுன்னு நினைப் அக்கா விரட்டமாட்டாங்க. அது என் வேலையில்லைன் வாங்க. அம்மாவுக்கெல்லாம் நான் என்ன செய்யறேன், எ செய்யணும், எதுவும் தெரியாது."

"ஒரு மாதிரி நான் வளர்ந்தேன். அப்பா இல்லே றதை. ரொம்ப உணர்ந்திருக்கேன்." "எங்க அப்பா இரு ருந்தா, இன்னும் பிரமாதமா வெளிய வந்திருப்பேன்."

"ஒன்னும் பண்ணவேண்டாம். என்கூட யோசன பண்ணிப்பார்த்தா போதும். கேள்விமேல கேள்வியா என்கி கேட்டாப்போறும் என்மேல யாருக்குமே அக்கறையில் அப்படீன்னு தோணின போது, எனக்கு யோசனை நின்னு யிடுது. என்னை கொஞ்சம் இழுத்துண்டு போகணும். அ உன்னால முடியும்னு நினைக்கிறேன். அதனாலதான் உன் டகுன்னு அப்படிகேட்டேன். தப்பா இருந்தா மன்னிச்சு மறந்துரு."

"உம்மனசுல வேற ஆள் இருக்கலாம். உன்னை மதி கெட்டிக்காரப்பொண்ணை பலபேர் டாவடிக்கலாம். இரு தாலும், என் மனசுல இருக்கறதை ஒளிக்காம கேட் வைச்சுட்டேன்."

"ஒரு மாசம் பொறுத்து இதைப் பேசலாமா?" அவ சட்டென்று, அவன் பேச்சை ஒரு முடிவுக்கு கொண்டு வந்தா

அவன் சற்று தயங்கினான்.

"கோபமா?" என்று கேட்டான்.

"ஒரு கோபமுமில்லை. கல்யாணம் பண்ணிக்கலாமான



காலே கேட்டீங்க. இதுக்கு கோபப்படுவேனோ."

"ஏன் சட்டுன்னு ஒரு மாசம் தள்ளிப்போட்டுட்டே?"

"இப்ப இது பேசினா, கையில இருக்கற வேலை கெட்டுடும். மனசு மயங்க ஆரம்பிச்சிடும். வேலை நடக்க லைன்னா, எம்மேல கோபம்தான் வரும். அதனால, ஒரு நூறுபே க்கு க்ளாஸ் எடுக்கற ப்ரோக்ராம் ஆரம்பிக்கட்டும். அப்புறம் இதைப்பத்தி பேசுவோம்."

"இது... இது... இது தெரியல எனக்கு", பாண்டியன் நெற்றியில் அடித்துக் கொண்டான்.

அவள் சட்டென்று, "அப்படிபண்ணாதீங்க. எனக்கும் தெரியாதது நிறைய இருக்கு. கத்துக்கறபோது நொந்துக்க னே."

"செல்வியகூப்பிடுங்களேன். நாம போட்ட கணக்கு சரி ன்னு கேப்போம்."

செல்வி வந்து உட்கார்ந்ததும் இன்னொரு மூன்று மணி நேரமாயிற்று.

செல்வி ஆழ்ந்து யோசனை செய்து கொண்டிருந்த து வெளியில், அவன் சோபாவில் சுருண்டு தூங்கினான்.

அவன் சமையலறைக்குப்போய் காபி கலந்தான். அவ ளுக்கு பருகக் கொடுத்தான்.

"அக்கா... சப்புமடிமிய அவங்க வீட்ல கொண்டுபோய் விட்டுட்டு வரட்டுமா?"

"செய். ஆனா, அவளை கேட்டுக்க. எங்கே இறக்கிவிடச் சொல்றாளோ, அங்கே இறக்கிவிட்டுடு வீட்டுக்குள்ளே நுழைஞ்சு வைப்படுத்திடாதே."

"வேலைக்குப் போற பொண்ணு, விளக்கு வைச்சதுக்கு அப்புறம், வேற ஒரு ஆம்பளையோட வீட்டுக்கு வந்தா, பெத்த ங்களுக்கு பகீருன்னு இருக்கும். அம்மா முகம் மாறிப்போச் ன்னா, பெண் குழந்தைக்கு சிரமம். ரொம்ப ஜாக்கிரதையா நடந்துக்க. உதவி செய்யறேன்னு' டு உபத்திரவம் பண்ணி தே."

ஒரு பெண் துணையோடு, அவளின் வழிகாட்டலோடு, வேறொரு பெண்ணை காதலித்தவன் நிச்சயம் வெற்றிய டைவான். அவனே அவன் அணுகுமுறை மிகச்சுலபமானதாக இருக்கும். பெண் வாழ்க்கையின் நெளிவுசுளிவுகளைப் புரிந்து

கொண்டு. ஆத்திரமில்லாமல் அவளை அணுக, பெண் சந்தோஷமடைவாள்.''

ஆனால், இது அபூர்வம். ஒரு பெண்ணை காதலிக்க இன்னொரு பெண் உதவுவதேயில்லை.

செல்விக்கு அவள் தம்பியின் மனம் புரிந்தது. கறுப்பான பெண்மீது அவனுக்கு ஆர்வம் ஏற்பட்டதை, விரைவிலேயே கவனித்துவிட்டாள். இது வளரட்டும் என்று மௌனமாய் இருந்தாள்.

தான் காதலிக்காது போனாலும், கல்யாணம் செய்து கொள்ளாமல் போனாலும், பிறருடைய காதலும் கல்யாணமும் மிக உன்னதமான விஷயங்கள் என்று புரிந்து வைத்திருந்தாள்.

''என்னடி லவ்வா..?'' என்று எகத்தாளம் பண்ணாமல், ''அவ கோக்டர் அவ்ளோ ஒன்னும் நல்லாயில்லே' என்று இடைஞ்சல் செய்யாமல், இது வளர்வதாயின் நல்லது என்று அமைதியாய் இருந்தாள். அதில் அதிகம் வேகம் காட்டாதிருக்க உதவி செய்தாள்.

மாடியில் இடப்பக்கத் தோட்டத்தில் சின்னச்சின்ன கட்டிட வேலைகள் நடந்தன. அதிகமான நிலைக்கண்ணாடிகளும் நாற்காலிகளும் பொருத்தப்பட்டன. கூடுதலாய் இரண்டு குளியலறையும் கழிவறையும் கட்டப்பட்டது.

வங்கி கடனுக்கு சப்புலக்ஷ்மி வழிசொல்லிக் கொடுத்தாள்.

செல்வி பேங்க் ஊழியர்களை ஸ்நேகமாக்கிக் கொண்டு அவர்கள் முகத்துக்கு உதவி செய்து, கடன் தொகை கைமேல் மலர காத்திருந்தாள்.

பத்து நாளைக்குப்பிறகு, பத்திரிகையிலிருந்து ஒரு அட்டைப்பெட்டி நிறைய விண்ணப்பங்கள் வந்தன. அவர்கள் நினைத்ததை விட, மிகமிக அதிகமாய் பெண்கள் ஆர்வம் வெளிப்பட்டிருந்தது.

'உங்கள் சொந்த வாழ்க்கையைப்பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதவும்' என்ற கேள்வியில்தான் விதவிதமான சோகங்கள் வெளிப்பட்டிருந்தன

'நான் கணவனை இழந்தவள்.'

'நான் என் கணவருக்கு மூன்றாவது மனைவி.'

'எனக்கு திருமணமாகவில்லை. தாய் தந்தையர்கள் வ... தானவர்கள்.'



'எனக்கு படிப்பு சரியாக வரவில்லை. காரணம், என் தாய்தந்தையரிடையே ஓயாத சண்டை.'

ஏகப்பட்ட சோகக்கதைகள் நெஞ்சை அழுத்தின.

செல்வி எல்லாவற்றையும் அள்ளிக் கொண்டுபோய் பூஜையறைக்குள் வைத்தாள். 'எல்லார் மனமும் அமைதியாகட்டும் என்று பிரார்த்தனை செய்தாள்.

அன்றிரவு மறுபடி அந்தக் கோயில் கனவு அவளுக்கு வந்திருந்தது.

பறந்து போய், அவள் அந்த ஊரில் இறங்கினாள். அப்படி பறக்கும் பொழுதே, 'அடாடா... கோயில் கனவு வருகிறதே..மனம் இப்போது நம்மை கோயிலுக்கல்லவா கொண்டு போகிறது' என்று நினைத்தாள்.

மனம் அவளை ஒரு வீட்டுக்கூடத்தில் இறக்கியது.

கூடம் முழுவதும் பெரிய கோலங்கள் போடப்பட்டிருந்தன.

ஒரு புலவர் ஓலைச்சுவடியிலிருந்து பாடல் வாசிக்க, நான்கு இளம் பெண்கள் அதை மனனம் செய்து கொண்டிருந்தார்கள்.

பெரிய திரைச்சீலையை இழுத்து மரச்சட்டத்தில் அடித்து, அதில் சுண்ணாம்புக்கலவை ஊற்றி, கெட்டியாக்கி, அதன் மீது சித்திரம் வரைய மூவர் முயன்று கொண்டிருந்தார்கள்.

பின்கட்டில் யாழ்வகுப்பு நடந்து கொண்டிருந்தது. இரண்டு பெண்கள் மிக அருமையாக குழல் வாசித்தார்கள். இரண்டு இளைஞர்கள் அந்தக் குழலுக்கு மத்தளம் வாசித்துக் கொண்டிருந்தார்கள்.

எல்லோரும் உறவுக்காரப் பெண்கள், தாஸிகள், தாஸிகளுக்குப் பிறந்த பையன்கள்தான் மத்தளம் மிருதங்கம் போன்றவைகளை வாசித்துக் கொண்டிருந்தார்கள்.

வெளியே திண்ணையில் நட்டுவாங்கம் செய்கின்ற கிழவர்கள், தாளக்காரர்கள், நாயனக்காரர்கள் பெருத்த சிரிப்போடு பேசிக் கொண்டிருந்தார்கள்.

அது தாஸி வீடு, தன்னை இறைப்பணிக்கென்று ஒப்புக் கொடுத்த தேவரடியார் வீடு.

தேவரடியார் கவனங்கள் பல ஊரில் வேறுவிதமாக

திரும்ப, போனதலைமுறை தாஸிகள் இக்குலம் சார்ந்த ஆசா ளோடு பேசி, ஆடல் பாடல் கலைகளை அதிகரித்தார்கள்.

சாகாட்டம், மயிலாட்டம் என்கிற பெயரில் ஆபாச நடனங்கள் மலிந்து வருவதைப் புரிந்து கொண்டு, தேவாரத் திருவாசகங்களுக்கு அபிநயிப்பதை சொல்லிக் கொடுத்தார்கள்.

ஆண்டாளின் பாடல்களை கண்டிப்பாய் மனப் செய்வித்தார்கள்.

தனியே பாடி தொண்டை புண்ணாக்கிக் கொள்ளாமல் பத்து பாடற பெண்கள் சேர்ந்த குழுவாய், இரண்டு குழல், இரண்டு மத்தளம் ஒரு யாழ் என்று அமைப்பாகி, மணிக்கணக்கில் பாடினார்கள், மக்களை மயங்கடித்தார்கள்.

இவைகள் பாடப்படும் இடத்தில், கடவுளின் அடியார்கள் வருகிறார்கள் என்று அந்தணர்களால் புகழ்ந்து சொல்லப்பட்டது.

சாதுக்களும், சித்தர்களும் எழுந்து கைகூப்பி வணங்கினார்கள்.

பிரபுக்கள் தாழ்ந்து வணங்குவதைப் பார்த்து அதிகாரிகள் கும்பிட, அமைச்சர்கள் எழுந்து நின்று ஆசீர்வதித்தார்கள்.

தாஸிகளுக்கு அமைச்சர்கள் எழுந்து நிற்பதைப் பார்த்தவுடன், அரசன் எழுந்து நின்று தானம் தந்தான்.

தாஸிகள் மரியாதை பெறும் நேரத்தில், தாஸிகளை தாஸிகளே அவமானப்படுத்தத் துவங்கினார்கள்.

பாட்டோ, பக்தியோ, மொழிவளமையோ, குலப்பெருமையோ, உழவுத்தொழிலோ, இல்லாத, குடிகாரக் கூலிப்பட்டாளத்திற்கும் பெண்கள் தேவைப்பட்டனர்.

தாஸிகளில் பாடலோ, ஆடலோ வராத, சற்று முக அழகு குறைந்த தடித்த பெண்கள் இருந்தனர்.

பாடவராது போனாலென்ன... கோயில்களைப் பெருக்கலாம். கலசங்களையும், சிலைகளையும் புளி போட்டு சுத்தம் செய்யலாம், அபிஷேகத்திற்கு நீர் எடுத்து வரலாம், மாலை தொடுக்கலாம் என்று அவர்களைப் பிரித்துவிட்டார்கள்.

பிரிந்தவர்களுக்கு வருத்தமாகிவிட்டது. பிரிந்தது தேவலமாகிவிட்டது.

அவர்கள் குறை சொன்னபோது, எல்லா தாஸிகளுமே கோயில்களுக்கு பூமாலை கைங்கர்யம் செய்யவேண்டுமென்று



ளமாகியது.

ஆனால், புளி போட்டு சிலை தேய்ப்பவர்கள் திருப்திய யவில்லை.

அகத்தில் இல்லையென்று சொல்லி, வெளியே சுற்றி கள், வெளியூர் விசேஷங்களுக்குப் போகிறபோது காடுக லும் தோப்புகளிலும் பதுங்கிக் கொண்டார்கள். அந்தக் கூலிப் டாளத்தை துணைக்கு அழைத்துக் கொண்டார்கள். யாய் சந்தோஷம் கொடுத்தார்கள்.

கூலியாட்கள் காசு சம்பாதிக்க, பிரபுக்களுக்கு ஆசை த்தை கூறி, கூட்டி வந்தார்கள். அதிகம் காசு கேட்டு மிரட் ர்கள்.

'இந்தக் கருமத்திற்கா பத்து பொன் கழஞ்சு கேக்கறே...? ய் நாற்றம் சகிக்க முடியவில்லையே... அழகிய பெண்களைக் ண்டு வா. இன்னும் அதிகம் காசு தருகிறேன்.''

மிராசுகள் கொக்கரிக்க, தாஸிகளை தாஸிகளே ஏமாற்றி ர்கள். வேட்டையாடினார்கள்.

''உன் பாட்டை பூந்தோட்டம் அந்தணர்கள் கேட்க ண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். மாணந்தாங்குடி மிரா ா வில்வண்டி அனுப்பியிருக்கிறார்.''

''முன் பணமாக பத்து பட்டுச்சேலையும் நூறு பொன் ஞ்சும் கொடுத்திருக்கிறார்.''

பெண்கள் ஆவலானபோது அவர்களுக்கு அது காட்டப் பட்டது. ஊருக்கு கிளம்பும்போது தருவோம் என்று மறுத்து றப்பட்டது.

பாடற் பயிற்சிக்கு வீட்டுக்கு அழைத்துப் போய்விட்டு, ப்படி அழைத்துப் போன பெண்களை இரவோடு இரவாக க்கிக் கொண்டு போனபோது, காடுகளிலுள்ள கூலிப்படை னர் கெடுத்தார்கள்.

அதிகாரிகள் பெண்களைத் தேட முயற்சித்தபோது, மிரா தார்களால் கையூட்டு பெறப்பட்டு, திசை திருப்பப்பட்டார்கள்.

அமைச்சர்களிடம் விஷயம் போனபோது, தாஸிக ளுக்குள் காசுபிரிப்பதில் சண்டை என்று சொல்லப்பட்டுவிட் டது.

''ஊர் நிலைமையே சரியில்லை, இதில் உங்கள் சொந்த வு வேறா?'' அமைச்சர்கள் சீறினார்கள்

''ஒன்றுக்கு இரண்டாக அந்நியர்கள் உள்ளே புகுந்து கிறார்கள். இந்த நேரம் தாஸிகளின் பங்குச் சண்டையைத் தீர் வைக்கவா நாங்கள் இருக்கிறோம்.'' அதிகாரிகள் அ னார்கள்.

''ஐயா தாஸிகள் தேவாரம் திருவாசகம் பாடுகிறே என்ற பெயரில், வெளியூர்களுக்கு போகும் வழியில், தே ளிலும் துறவுகளிலும் கூடாரமடித்து தங்கி, வழிப்போக்க மடக்கிவேண்டாது செய்கிறார்கள். இவர்களுக்கென்று வாய்ந்த கூலிப்படையொன்று வைத்திருக்கிறார்கள். அந் களுக்கு உளவு சொல்ல, இந்தக் கூலிப்படையினரே முன கிறார்கள்.

விஷயம் திரித்துக்கூறப்பட்டது.

காவிரியில் வெள்ளம் பொங்க, ஆற்றிலே கடத்தப்ப ஒரு தாஸிப் பெண் குதித்து, தற்கொலை செய்து கொ முயன்று, வெள்ளத்தால் அடித்துப் போகப்பட்டு, சாகு யாமல் மிதந்து வந்த இன்னொரு பிணத்தைப்பற்றி, தொலைவிற்குப் போய் கரையேறி, அங்குள்ள சித்தபுருஷ நடந்ததை அழுது சொல்ல, அவள் செத்தபிணம் என்று அழு கொண்டு வந்தது, எதிர்க்கரையோரம் நடந்து போவது காட் பட்டது.

எங்கு அதர்மங்கள அதிகரிக்கின்றனவோ அ இறைவன் மனிதவடிவில் வந்து இறங்குவான் நல்லவர்களு துணை செய்வான்.

அந்தப் பெண் காபாலிக மதத்தைச் சேர்ந்த, அந்த புருஷரோடு, ஊர்வந்தாள்.

ஊரில் விவரம் சொல்லப்பட்டது.

படை திரண்டு ஊர்மக்கள் போய், மற்ற பெண்களை விடுவித்து வந்தார்கள்.

கடத்திப்போன பாத்தையர்களை ஊர் மக்கள் மொட்ட யடித்து கடுமையாய் அடித்தனர்.

கூலிப்படையினரை துடிக்க துடிக்க கழுவேற் னார்கள்.

ஆடலுக்கும் பாடலுக்கும் அரசு அதிகம் மரியாத செய்தது.

ஊர் பெண்களே முன்வந்து காசுகள் கொடுத்தார்கள்.

சிறிது நாட்கள் பொறுத்து மறுபடியும் பழைய சண்ட



அந்த சத்தியம் ரகசியமாய் இருந்தது. அப்படி சத்தியம் செய்தார்கள் என்பதை கேள்விப்பட்டு பொன்னாத்தாள் கோபமடைந்தாள்

தலைதூக்கிற்று.

தாஸிகள் இருவகைப்பட்டனர் ஒருவர் பாத்தையர், இன்னொருவர் பண்பாளர்.

இவர்கள் இருவருக்குமிடையே இடைவிடாது சண்டை இருந்து கொண்டேயிருந்தது. அவ்வப்போது, அடிதடி வேதனைகள் நடந்தன.

மாட்டுவண்டியிலிருந்து தாஸி பொன்னாத்தாள் கீழிறங்கி வந்து, கூடத்தில் பாடிக்கொண்டிருந்த பெண்களை அதட்டி அழைத்தாள்.

இசை நின்றது. இழிவான வச னங்களோடு சண்டை ஆரம்பமானது வெள்ளையம்மாள் கோபமானாள்.

பாடிக் கொண்டிருந்த பெண்களில் இருவர் அவளின் உறவு, அவர்களை வெள்ளையம்மாளின் தாய் வரவழைத்து பதிகங்கள் பாடவைத்தார்.

பருவமடைந்து சில மாதங்களே ஆன அந்தப் பெண்கள், எது நேரினும் இழிவான நடவடிக்கைகளில் ஈடுபடுவ தில்லை என்று சத்தியம் செய்திருந் தனர்.

அந்த சத்தியம் ரகசியமாய் இருந்தது. அப்படி சத்தியம் செய்தார்கள் என்பதை கேள்விப்பட்டு, பொன்னாத்தாள் கோபமடைந்தாள். அவர்களை இழுத்துப் போய் தொழிலில் ஈடுபடுத்த ஆவேச மானாள்.

''உன்னைப்பற்றி தெரியாதா, உன்தாயைப் பற்றி தெரியாதா? நீங்க ளெல்லாம் என்ன புருஷ வாசனையே அறியாத பெண்களா? அரசன் அழைத்தால் மாட்டேன் என்று சொல்லி

விடுவீர்களா?''

''எந்த கல்லுச்சாமி உன் ஆடலை பார்க்கிறது? பித்தளை பொம்மைக்கு மாலைபோட்டவா, நீ இத்தனை அ காரம் செய்துகொண்டு மினுக்குகிறாய்?''

''இறைவன் அழைப்பான் என்றா இழுத்து க கொண்டு ஆடுகிறாய்?''

''ஆண்களை மயக்கத்தானே இந்த உடை அலங்கா மயக்கத்தானே இந்த ஆட்டம் அதிகாரிகளை மயக்கத்தா இந்தப் பாட்டு.

சாமி சாமி என்று சொல்லி, சாமி மட்டும் பார்க்கவா ராடுகிறாய்?''

''சுற்றி ஆயிரம் பேர் கூட்டமிருந்தால்தானே உ ளுக்கு குதூகலமே வரும், கருவறைக்கதவை தாளிட் கொண்டு, சுவாமிக்கு மட்டும் என்று எந்த தாஸியாவது ஆ துண்டா?''

''நீங்கலெல்லாம் நெல்லுக்கு ஆடாமல் புல்லுக்கா ஆ கிறீர்கள்? நாளையிலிருந்து கோயில் சன்மானம் கிடை தென்றால் எவளேனும் ஒருத்தி காலைத்தூக்குவீர்களா?''

தாஸிகள் சண்டையை ஊர் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தது ஏளனமாய் சிரித்தது.

மதிப்பிற்குரிய ஆண்கள் பரத்தையை விட்டு வில நிற்பார்கள். அவளோடு பேசுவது ஆகாது என்று புறந்திருப் கொள்வார்கள். அடாவடி செய்கிற பரத்தைப் பெண்களை அ பதைக் கூட மற்றவர்கள் விரும்புவதில்லை. அதுவே பாவ பட்ட ஜென்மம் அதை அடித்து துன்புறுத்துவானேன். விட விடுங்கள் விலகி நில்லுங்கள் என்றுதான் உபதேசம் நடக்கு

யாரும் தண்டிக்கமாட்டார்கள் என்கிற நினைப்பா பரத்தையரின் பேச்சும் ஆட்டமும் மிகக் குரூரமாக இருக்கு தெருவில் போவோர் வருவோரை உரத்த குரலில் அழைத் கேலி செய்வது அவர்கள் பழக்கம்.

கோயிலுக்கு கும்பலாய் அவர்கள் வருகிறபொழுது திண்ணையிலுள்ள ஆண்கள் உள்ளே போய்விடுவார்கள்.

அப்படிப் போனாலும் பரத்தையர்கள் விடுவதில்லை வீட்டுப்படியேறி குடிக்க ஜலம் கேட்பார்கள்.

''அடடே... ஐயர் உட்கார்ந்... இடம் இத்தனை குடா இருக்கிறதே... ஐயர் உடல் கொதி... நீங்கள் இறக்குவதேயி



யா?'' ஏதாவது பேசிச்சிரிப்பார்கள்.

''இந்த கழஞ்சு பொன் கொடுங்கள் சனிக்கிழமை ஐய எண்ணெய் தேய்த்து விடுகிறோம். நிறுத்த வைத்து நாலு லை உருவிவிட்டால் உடல் தானே குறைகிறது.'' ஒருத்தி ல்ல மற்றவர்கள் பேயாய் சிரிப்பார்கள்.

அவர்கள் பேச்சு கேலியை மற்றவர்கள் பேச இயலாது.

அத்துமீறிப் பேசி அறை வாங்கிய நிகழ்ச்சிகளும் ண்டு. அதனால் இன்னும் ஆபாசம் அதிகரிக்குமே தவிர, றையாது நடக்கத்துவங்கி விடுவார்கள்.

ஒரே ஒரு அறைக்கு கழுத்து முறிந்தது போல் துவண்டு ப்பார்கள். மூச்சு போச்சு, மூச்சு போச்சு என்று கத்துவார்கள் லக்கு கொண்டு வந்து தூக்கிக் கொண்டு ஓடுவார்கள்.

'படாத இடத்தில் பட்டுவிட்டது நாளை காலை வரா ங்காது' என்று சேதி பரப்புவார்கள் விசாரிக்கப் போனால், லை மூடிக்கொள்வார்கள்.

''பெண்டாட்டியை அடிக்க முடியாதவனெல்லாம் பரத் தையைக் கண்டதும் பாய்கிறார்கள். உயிரோடு இருந்த போது காசு தாஸிக்கு கொடுப்பதில்லை. நாளை அவன் செத்துவி வான். சடங்குகள் செய்ய வேணும். அதற்காகவாவது பத்து ஞ்சு பொன் கொடும் ஐயா.''

''கடன் வாங்கினால் கொடுத்துவிடலாம். உயிர் னால் திரும்பி கொடுத்துவிட முடியுமா? கடன் வாங்கியா பத்து கழஞ்சு கொடுங்கள்.''

ஒரு அறைவிட்டவரிடம் காசு பிடுங்கிவிடுவார்கள்.

நல்ல அரசர்கள் இல்லாமல், உயர்ந்த மதகுருக்கள் ல்லாமல், தெளிவடைந்த சந்நியாசிகளோ, சாதுக்களோ ல்லாத காலம் அது பாலைவனத்து அந்நியர்களும், பனிதே து அந்நியர்களும் உள்ளே புகுந்து அடித்துக் கொண்டிருந்த லம் அது.

பாலைவனத்தார் பனிதேசத்தாரை எதிர்க்க, பரம்பரை ம்பரையாய் இங்கே வாழ்ந்து வந்தவர்களை உதவி செய்ய ழைக்க கெஞ்சிக் கொண்டிருந்த காலம் அது.

படைகள் முன்னும் பின்னும் அலைந்து கொண்டிருந் ன. சண்டை நடந்த இடங்களிலெல்லாம் கொலையும் ள்ளையும் நடந்து கொண்டிருந்தது.

கொள்ளையடித்ததில் ஒரு பகுதியை போர்வீரர் தனக்கு ஒதுக்கிக் கொண்டு, மீதியை மொத்தமும் இதுதான் என்று அரசனிடம் கொடுத்து, அந்த அரசனிடம் ஒரு பகுதியை சன்மானமாக வாங்கிக் கொண்டிருந்த காலம் அது.

தான் குத்தப்பட்டு சாவதற்கு பதிலாய், தாம் யாரையோ குத்தி சாகடித்திருக்கிறோம். ஒருநாள் நாமும் குத்தப்பட்டு சாவோம் என்று இடையறாத பதட்டத்தில், மரணத்தில் மே... ராகள் இருந்தார்கள்.

அந்தப் போர்வீரர்களின் வீரத்திற்கு நேரே மிகப்பெரிய கோழைத்தனம் இருந்தது.

அதை மறைக்க, காசை வீசியெறிந்து கண்மூடி... மைசப் குடிக்க ஆரம்பித்தார்கள். கொள்ளையடித்தே கா... தானே... அதனால் வாரியிறைத்தார்கள். மதுவின் மயக்கத்... மங்கையைத் தேடினார்கள். அவர்களின் ஆட்டபாட்டங்களை ஆரவாரத்தோடு ரசித்தார்கள்.

அந்த கோழைத்தனமான வீரர்களை, கெட்டிக்காரத்த... மான பரத்தையர்கள் எளிதாய் ஏமாற்றினார்கள்.

தலைப்பாகைக்குள்ளும், உடைகளுக்குள்ளும் வே... திரகுள்ளும், வாளின் உறைக்குள்ளும் சிலசமயம் காலணி... ளுக்குள்ளும் தங்கக்காசுகளை வைரவைடூரியங்களை வீரர்... மறைத்து வைத்திருந்தார்கள். அவைகளை பரத்தையர்க... வைத்திருந்தார்கள். அவைகளை பரத்தையர்கள் கண்டுபிடித்து நோண்டியெடுத்தார்கள்.

''நீ வரும்போது தலைப்பாகையோடு வரவில்... லையே... காலணிகூட அணியவில்லையே... வெறும் உடு... போடல்லவா வந்தாய். அந்த உடுப்பையும் உன்பின்னே வந்... நண்பன் சுத்தம் செய்ய வாரிக்கொண்டு போய் விட்டானே...''

எல்லாவற்றையும் உருவிக் கொண்டு, இடுப்பு கோ... ணத்தோடு திருப்பியனுப்புவார்கள்.

கோமணத்தோடு குதிரையேறிப்போகும் வீரனை... ளைப்பார்த்து கைகொட்டி சிரிக்கும்.

முரடர்கள் விரட்ட, கூலிக்கு பரத்தையர்கள் முரட... களை வைத்திருந்தார்கள்.

அவர்களுக்கு எதிராய் யாருமே குரல் உயர்த்த முடி... வில்லை.

வெள்ளையம்மாள் எதிர்த்தே தீரவேண்டும் என்...



...லைக்கு தள்ளப்பட்டாள். வீட்டுக்குள்ளிருந்து கம்பு ...த்தாள். கூச்சல் போட்டவளை கூசாமல் சாத்தினாள். பலம் ...ணடமட்டும் அடித்தாள்.

''உங்களை அடக்குவார் இல்லையென்று நினைத் ...? பதிகம் பாட நியமிக்கப்பட்டிருக்கிற பெண்ணை விரல் ...த் தொட, உனக்கு எவ்வளவு தைரியம்?''

''என் அழகு அறிவு எல்லாம் இறைவனுக்கே. வேறு எவ ...குமில்லை. என் மனதுள் மறந்தும் ஒருவனை நான் நினைத் ...தில்லை. இது சத்தியம். என்னை இழிவாகப்பேசிய நீ, இன்று ...லைக்குள் நிலைகுலைந்து விழுவாய். இது திருவாரூர் தியா ...ர் மீது ஆணை.''

''நான் தினமும் கண்மூடி அமர்ந்து, தியானம் செய்யும் ...டகேஸ்வரத்தார் மீது ஆணை.''

''பரத்தை பேச்சுக்கு ஊர் நடுங்கலாம். நான் பத்தினி. ...ங்கமாட்டேன். நான் தாஸியானாலும் தர்ம ஸம்வாத்தினி. ...க்கு அஞ்சமாட்டேன்.''

''அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று ...ல்லும். இங்கே சூழ்ந்திருக்கிற அதிகாரிகள் உன்னை அடக் ...வறி விட்டார்கள். இன்று இருட்டி, நிலவு உதிப்பதற்குள், ...இறைவனால் அடக்கப்படுவாய்.''

''சத்தியம் வாழும் எங்கள் வீட்டைப் பார்த்து, நீ இறைத்த ...த்தைகள் கொடுமையானது. இனி, உன்னால் பேசமுடியாது ...கும். உன் கைகள் தூக்க முடியாமல் போகும். உன் வலக்கால் ...வலற்றுவிழும். உன் பார்வை பழுதுபடும். செவிப்புலன் ...கும். ஒரு கவளம் உணவை விழுங்க படாத பாடுபடுவாய். ...ம் கழிக்கமுடியாமல் அரற்றுவாய். மூச்சுத்திணறலால் வேத ...னப்படுவாய்.''

''இந்த பூமியில் வாழ்கிற ஒவ்வொரு விநாடியும் நரகவே ...னை அனுபவிப்பாய்.''

''என் கோலால் அடிபட்ட நீ மட்டுமல்ல என்னால் அடி ...டாத, உன்னை இங்கு தூண்டிவிட்ட உன் தமக்கையும் அடிப ...வாள். இன்றே நான் சொன்னது அவ்வளவும் நடக்கும்.''

நடந்தது.

வெள்ளையம்மாள் அடித்ததால் பொன்னாத்தாளுக்கு ...லப்பக்கம் விழுந்தது என்று சிலர் சொன்னாலும், வெள்ளை ...யம்மாளின் விரலே படாத பொன்னாத்தாளின் தமக்கைக்கும்

வலப்பக்கம் விழுந்ததுகண்டு பலா ஆச்சரியப்பட்டார்கள்

''தாலி சாபம் பலிக்கறதைய்யா.''

''அப்படியானால், இது கலியுகம்தான்.''

''இறைவனைத்தவிர தன் மனதில் வேறு எவருமில் என்கிறாளே...''

''அவளை நாமும் கும்பிடுதல் நல்லதுதான்.''

ஊர் வெள்ளையம்மாள் வர எழுந்து நின்று வண யது. குலப் பெண்கள் அவளிடம் குங்குமம் வாங் கொண்டார்கள். மெட்டியும் வளையலும் போ சொன்னார்கள். நல்ல நாள் பார்த்து, அவளை விட்டு த கோர்க்க சொன்னார்கள்.

'தாலி நித்ய சமங்கலியல்லவா.. அவள் தாலி கோர் கொடுத்தால் நெடுநாள் நெஞ்சில் தங்குமல்லவா...'

காசும் அன்பும் கொடுத்து ஆதரித்தார்கள்.

இதற்குப்பிறகு பரத்தையர்கள் ஆட்டம் கணிச குறைந்தது.

'தாலியே பரத்தையை கொம்பால் அடித்த பிறகு, ந பயந்திருப்பதா?' ஊர் பரத்தையை அங்கங்கே தண்டித்தது. தையின் கூலியாட்களை வளைத்துப் போட்டு சுற்றி நி தாக்கியது. சிறைக்கு அனுப்பியது.

'வீரர்கள் போனால்தானே பரத்தையர்களுக்கு காசு. இ பரத்தையர்களுக்கு நோய் இருக்கிறதென்று சொல். குறிப் குழிப்புண் வருமென்று தண்டோரா போடு'.

போடப்பட்டது.

பரத்தையர்கள் வெதும்பினார்கள். என்ன செய்வ என்று தெரியாமல் திண்டாடினார்கள். ஆட்டங்களை குறைத் இதுவரை சேர்த்து வைத்த காசை செலவழிக்கத் துவங்கினார் மௌனமாக வாழ்ந்தார்கள்.

''நானும் பதிகம் பாடுகிறேன் அக்கா''. அவள் வீட் இளம்பிள்ளைகளை வெள்ளையம்மாளிடம் அனுப்பி கெஞ் செய்தாள்.

வெள்ளையம்மாள் அதற்கு இணங்க, ஒரு பொய்க பரப்பினார்கள்.

பொன்னாத்தாளுக்கு மெல்ல மெல்ல, வலது உணர்வு வந்துவிட்டது என்று சொன்னார்கள். அதற்கு தேவா



திருவாசக பதிகம்தான் காரணம் என்றார்கள்.

வெள்ளையம்மாள் பாடும் இடத்திற்குப் போய் அவ களும் பதிகம் பாடினார்கள்.

நரி கிடைக்குள் புகுந்து. ஆடு போல் கத்தியது.

கத்த முயற்சி செய்தது.

ஆடுகள் மிரண்டன.

நரியின் நடவடிக்கையை கவனித்துக் கொண்டிருந்த

நுழை நரி எதுமறியாத ஆடுபோல் மௌனமாய் இரு தது. காலம் கனியக் காத்திருந்தது.

திருவாரூர் தியாகராஜா கோயிலுக்குள் தனித்திருக்கு ஹாடகேஸ்வரர் சன்னதியில் தினமும் இருட்டிய பிறகு வெள்ளையம்மாள் அமர்ந்து கொள்வாள். கண்மூடி தன்னுள் நடக்கிற சலனங்களை பார்த்துக் கொண்டிருப்பாள். தன் கோப தாபங்களை கவனித்துக் கொண்டிருப்பாள்.

உற்று அலைகளை கவனித்துக் கொண்டே இருக்கி பொழுது, அலை கரையத்துவங்கும். மெல்ல அகலத்துவங்கும்

பாசிகுளத்தில் கால் சறுக்கி இழுப்பது போல், ஆற் வேகத்தில் முதலை கவ்விப் போவதுபோல், உயர்ந்த மரத்தின் உச்சி இலை காற்றில் நழுவி தரையில் சேருவது போல், மன அடங்கும் நேரத்தில் எங்கோ எதனாலேயோ இழுத்து கொண்டு போகப்படும். அளப்பரிய ஆனந்தம் ஏற்படும் உடம்பு கனம் மறைந்து போகும். உயிரின் தெளிவாய் தெரியு இருட்டும் வெளிச்சமும் கலந்த நிலை போய், எல்லா இட திலும் வெளிச்சம் இருக்கும் நிலை காணப்படும். ரீங்கார செவிப்புலன் அடைக்கும்.

அதீத சந்தோஷம் என்கிற உணர்வு அவளைச் சுற்றி கொண்டிருக்கும். அந்த சந்தோஷத்தில் ஒரு அமைதி இருக்கும் அந்த அமைதிதான் கடவுள் என்பது புரியும். அந்த அமைதிதான் பிரபஞ்சத்திலேயே வலிவு மிக்கது என்பது தெரியும்.

அவள் அங்கே உட்காருவதை கேள்விப்பட்டு பொன்னாத்தாள் தன்னை கூடையில் வைத்து, அங்கே கொண்டு போகச் சொன்னாள்.

பெரிய கூடையில் பொன்னாத்தாளை உட்கார வைத்து மேலே வரட்டிகள் அடுக்கி, ஹோமத்திற்கு கேட்டார்கள் என்று கூடை கொண்டு போகப்பட்டது.

பொன்னாத்தாள் நகர்ந்து நகர்ந்து ஒரு சிவலிங்கத்தின் பின்னே ஒளிந்து கொண்டாள். வெறியோடே வெள்ளையம்மாளை கவனித்தாள்.

இடக்கையால் கமூன்றி எழுந்து நின்றாள், விழுந்தாள், மறுபடி எழுந்து நின்றாள். சிவலிங்கம் முகவாயில் இடித்து வாயெல்லாம் ரத்தம் வந்தது. நாக்கு துண்டாகி தரையெல்லாம் பீய்ச்சியடித்தது.

வலி இன்னும் வெறியைக் கொடுத்தது.

விஷம் தடவிய வெற்றிலையும் பாக்கையும் வெள்ளையம்மாளின் மடியில் வைத்தாள். ஒரு பொற்காசு வைத்தாள். ...ளி நகர்ந்து போனாள்.

என்றும் தொடாத உயரம் அன்று வெள்ளையம்மாள் ...கேஸ்வரம் சன்னதியில் தொட்டாள். மறுபடி உடம்பு நினைவு வந்தபோது வேதனைப்பட்டாள்.

'போதுமய்யா இந்த வாழ்க்கை என்னை கூட்டிக்கொள்' என்று ஹாடகேஸ்வரரைக் கும்பிட்டாள்.

ஹாடகேஸ்வரம் சன்னதிக்குள் வெளிச்சம் சிரித்தது. சரியென்றது.

வெள்ளையம்மாள் கண் திறந்தாள். மடியில் கிடந்த வெற்றிலைப் பாக்கை இடுப்பில் சொருகிக் கொண்டாள். கோயில் பானையிலிருந்து நீர் மொண்டு, மூன்று குவளை குடித்தாள்.

'ஹாடகேஸ்வரா... என்னஇது மரண தாகம்' என்றாள். மறுபடி கோயிலை வலம் வந்தாள். தியாகேசுவரை கண்குளிர தரிசித்தாள்.

தேவாஸ்ரிய மண்டபத்திற்கு வந்து காற்றாட அமர்ந்து கொண்டாள்.

மெலலியதாய் பசித்தது. இடுப்பிலிருந்த வெற்றிலைப் பாக்கு ஞாபகம் வந்தது.

குலப்பெண்கள் அங்குதான் வந்து பேசுவது வழக்கம். தங்கள் மனக்குறையை தீர்த்துக் கொள்வது பழக்கம்.

ஏனோ அன்று யாரும் வரவில்லை.

வெள்ளையம்மாளுக்கு பசித்தது. பாக்கு போட்டாள்.

கொட்டைப்பாக்கு முதலில் தித்தித்தது. பிறகு, கசந்தது.



கசப்பு நீங்க அவசரம் அவசரமாக, நுந்தாறு வெற்றிலை போட்டாள்.

தகடுதகடாய் அன்று பறித்த வெற்றிலைகள் நல்ல காரத்தோடு இருந்தன. கடிக்க கடிக்க சாறு ஊறிற்று.

சாறு தொண்டைக்குள் இறங்கியது. வயிற்றில் விழுந்ததும் லேசாய் கலங்கியது.

வெறும் வயிற்றில் வெற்றிலை போடுவது தவறோ என்று நினைத்தாள்.

கண் கிறங்கிவந்தது. குமட்டல் எகிற்று. உடம்பை யாரோ பிடித்து சுழற்றுவது போல், ஒருதலைசுற்றல் இருந்தது.

என்ன ஆயிற்று இந்த உடம்பிற்கு? யார் கொடுத்த வெற்றிலை இது?' சிரமப்பட்டு யோசித்தாள். ஒன்றும் புரியவில்லை.

தாஸிக்கு வெற்றிலை பாக்கு தருவது ஒரு சம்பிரதாயம். பசுவுக்கு அகத்திக்கீரை, தாஸிக்கு வெற்றிலை, இவையிரண்டுமே புண்ணியம் என்று சொல்வார்கள்.

தாஸி மருதாணி அரைத்து தருவாள். முகத்திற்கு பாசிப் பயிறு மாவு மூலிகைகளோடு கலந்து தருவாள்.

திருமணமாகப் போகும் பெண்ணின் வீட்டிற்குப்போய், அவளுக்கு முகம் முழுவதும் எலுமிச்சை சாறும், தேனும் தடவி, உடம்பெல்லாம் மஞ்சள் தடவி, பயற்ற மாவு தடவி, வாசனைப் பொடிகள் தடவி ஊற வைப்பாள்.

தலைக்கு செம்பருத்தி பூவின் சாறு பூசுவாள். கால்களை பன்னீரில் ஊறவைத்து, ஓரங்களில் நலங்கு எழுதுவாள்.

ஆண்கள் வாராத கொல்லைப்புறத்தில் திருமணப் பெண்ணுக்கு அழகுகூட்டிக் கொண்டிருக்கும் பொழுதே, காமம் பற்றியும் கலவி பற்றியும் சொலலித்தருவாள்.

அநேகமாய் வணிகர் வீட்டுப் பெண்கள்தான் இத்தகைய அலங்காரத்துக்கு ஆசைப்படுவார்கள்.

இந்த அலங்காரத்திற்கு வா என்று கூப்பிட, வெற்றிலைப்பாக்கும் ஒரு பொற்காசும் தருவார்கள்.

'யார் கூப்பிட்டது என்னை? எங்கே கூப்பிட்டார்கள்? இது என்ன வெற்றிலை? ஏன் இந்தக் கசப்பு? எதனால் இப்படி தலைசுற்றுகிறது?'

அவள் தேவாஸ்ரிய மண்டபம் விட்டு வெளியே ஓ...

வந்தாள். குபுக்கென்று வெற்றிலையை வாந்தியெடுத்தாள்.

ஒரு கடுமையான கசப்பு நாற்றம் அங்கே பரவியது. பார்வை பழுதுபடத்துவங்கியது. மூச்சுத்திணறல் அதிகமாகியது. கை விரல்கள் வெட்டி இழுக்கத்துவங்கின.

கையிலிருந்த கடைசி வெற்றிலையை முகர்ந்து பார்த்தாள். வியர்வை ஈரம்பட்ட வெற்றிலையில் அதே துர்வாசனை வீசியது.

'விஷம் வைத்துவிட்டார்கள். யாரோ விஷம் வைத்துவிட்டார்கள். ஹாடகேஸ்வரா... தியாகேசா...' வாய்விட்டு அலறினாள்.

'தாயே... கமலாம்பிகே... என்னைக் காப்பாற்று.' அழுதாள்.

உடம்பு மெல்ல மெல்ல செயலற்றுப் போவதை உணர்ந்தாள்.

இல்லை. இப்போது தியாகேசா சன்னதிக்கு போகக்கூடாது. போய் அசுத்தம் செய்துவிடக் கூடாது.

எனக்கு மரணம் நிச்சயம். அது கோயிலுக்குள் நிகழ்ந்துவிடக்கூடாது. இன்னும் சில நிமிடங்களில் நான் சடலமாகிவிடுவது உறுதி. அது என் இறைவன் சன்னதியில் நடந்துவிடக்கூடாது.

எனக்கு மரணம் நிச்சயம். அது கோவிலுக்குள் நிகழ்ந்துவிடக் கூடாது. இன்னும் சில நிமிடங்களில்...

உள்ளே ஓடியவள் இப்போது வெளியே பதட்டமாய் ஓடத்துவங்கினாள்.

ஆனால், விஷம் தன் வேலையை செய்யத்துவங்கியது. வேகமாய் உடம்பெல்லாம் பரவத்துவங்கியது.

கண்பார்வை மெல்லமெல்ல



குறைந்து கொண்டே வந்தது. கோயிலைவிட்டு எப்படியாவது வெளியே போய்விட வேண்டும் என்ற வெறி இருந்தது.

'ஹாடகேஸ்வரா... ஹாடகேஸ்வரா... என் நாயனே... நீ வெளிச்சமாய் வந்துசிரித்தது இதற்குத்தானா? எனக்கு யார் விஷம் வைத்தது என்று நீ காட்ட வேண்டாம். உன்னைக் காட்டு. நீ யாரென்று சொல். என்னை எனக்குத் தெரிவி. நம் தியாகேசனைக் காட்டு. நம் கமலியின் தரிசனம் கொடு.'

வெள்ளையம்மாள் மனசுக்குள் அலறினாள். ஓடிக்கொண்டே அரற்றினாள்.

'ணங்'கென்று எதன்மீதோ முட்டிக்கொண்டாள். கைபட்ட இடம் 'தொம்'மென்று சத்தமிட்டது.

அடே... இது பஞ்சமுகவாத்தியம்.

தம்.. திம்.. தொம்.. டம்.. டம்.. சப்தம் எழுப்பினாள்.

அவள் சப்தம் எழுப்பாமலேயே தொடர்ந்து தாளக்கோர்வைகள் கேட்டன.

தாளம் அதிகரிக்க அதிகரிக்க மணல்துகள் போல, எதிரே பரவிய சக்திவடிவம். நடராஜர் போல் ஆடிற்று. உற்றுப் பார்க்க ஒவ்வொரு துகளிலும் நடராஜர் தெரிந்தது.

ஏதேதோ சப்தங்கள் கேட்டன. நிறைய உருவங்கள் வந்து கைகூப்பின. அழகிய முகங்கள் வந்து ஆதுரமாய் பார்த்தன.

அவள் சரிந்து சுவருக்கும், பஞ்சமுக வாத்தியத்திற்கும் நடுவே விழுந்தாள். புடவையால் உடம்பை நன்கு மறைத்துக் கொண்டாள். படுத்தபடியே கைகூப்பினாள். கைகளை மார்பின் மீது வைத்துக் கொண்டாள்.

'ஹாடகேஸ்வரா... நான் உன்னைப் பார்க்கவே இல்லையே...'

சடைமுடியோடு, நீண்ட வெண்தாடியோடு நடுத்தர உயரமுள்ள, சிவந்த, மெல்லிய உருவத்தோடு ஒரு தோற்றம் கண்ணுக்குப்பட்டது.

அந்தக் கிழவர் அவளைப்பார்த்து சிரித்தார். கைதூக்கி ஆசீர்வதித்தார்.

"ஐயனே... எனக்கு சாகாவரம் கொடேன்."

"அதெப்படி. நீதான் செத்துக் கொண்டிருக்கிறாயே..."

"இந்தப்பிறவியைச் சொல்லவில்லை.

இன்னொரு பிறவியில்லா வரம் கேட்டேன். பிறப்பு இருந்தால்தானே இறப்பு."

"இல்லை குழந்தாய். ஆத்திரப்பட்டு அடித்தாய் அல்லவா... அது உனக்கு பிறப்பை கொடுத்துவிட்டது. நீ சற்று இளைப்பாறிய பிறகு மறுபடி பிறப்பாய்."

"ஐயனே... இதுதான் முடிவெனில், அடுத்த பிறவியிலும் உங்களை மறவாதிருக்க வேண்டும்."

கிழவர் சிரித்து கையை உயரத்தூக்கினார்.

வெள்ளையம்மாள் காதுகளில் சங்கு முழக்கம் கேட்டது. வெளிர் நீலம் பரவியது. விழிகள் திறந்து விட்டதைப்பார்த்தன.

உயிர் சட்டென்று விழிவழியே பறந்து போயிற்று.

திருவாரூர் விட்டு நகர்ந்து, உலகம் விட்டு வெளியேறி மிக வெளிச்சமான ஒரு இடத்தில் அவள் மிதக்கத்துவங்கினாள்.

கீழே கொதிக்கும் வெந்நீர் ஆறு ஓடிற்று.

அவளை பலர் கை தூக்கி, கவனமாய் கரை சேர்த்தார்கள்.

அமைதியான ஒரு இடத்தில் அவள் உலவத் துவங்கினாள்.

சட்டென்று கனவு கலைந்தது.

செல்வி எழுந்து தலையைப் பிடித்துக் கொண்டாள்.

வெள்ளையம்மாளின் முகம் மனதில் நன்கு பதிந்து விட்டது.

செல்வி எழுந்து நிலைக்கண்ணாடிக்கு அருகே போனாள்.

அவள் முகத்தில் வெள்ளையம்மாள் சாயல் இருந்ததை அவளால் உணர முடிந்தது.

தான் கண்டது கனவா அல்லது நனவின் நினைவா..

யாரது வெள்ளையம்மாள்? அவள் ஏன் என்னைப்போல் இருக்கிறாள். அல்லது நான் ஏன் அவளைப் போல் இருக்கிறேன்.

அது என்ன ஹாடகேஸ்வரம்? நான் திருவாரூருக்கு போனதேயில்லையே... எப்படி அந்தக் கோயில் ஞாபகம் வந்தது எனக்கு? பஞ்சமுக வாத்தியம் என்று ஏதோ செய்திப்பத்திரிக்கையில் படித்திருக்கிறேன். அது என்ன வெண்கலமா, மரமா?

எப்போதேனும் வருகிற இந்தக் கனவு என்ன சொல்கி



றது? நான் என்ன செய்யவேண்டும் இப்போது?

எந்தக் குழப்பமுமில்லாமல் தெளிவான ஓடை போன்ற என் வாழ்க்கையில், இந்த கனவுக்குழப்பம் எதற்காக? ஆனால் இதை குழப்பம் என்று சொல்ல முடியவில்லை. ஹாடகேஸ்வரத்தில் தியானம் செய்து கொண்டிருந்த அமைதி இப்போதும் உள்ளே சிறியதொரு குங்குமச்சிமிழில் உட்கார்ந்திருக்கிறது. தன்னைச்சுற்றி என்ன நடந்தாலும் அந்த அமைதியைத் திறந்து விட அதிலிருந்து கிளம்பும் வாசனை நடப்பவற்றோடு தன்னை சம்பந்தமில்லாமல் செய்து விடுகிறது.

இது அப்பா இறந்தபோது நடந்தது. சிறிது கூட துக்கப்படாமலிருக்க உதவியது. பார்லர் துவக்கியபோது நடந்தது. நன்கு வளர்வோம் என்ற நம்பிக்கையைக் கொடுத்தது.

பின்பக்கம் இன்னொரு பங்களா கட்டும்போது, உன்னால் இதுபோல் பலதும் கட்டமுடியும் என்று தைரியம் கொடுத்தது.

இதையெல்லாம் விட, ஊரில் எத்தனையோ பெண்கள் காமத்தில் தவிக்க, காதலில் சிக்கி அலைய, செல்விக்கு இந்த நினைவே எழவில்லை. ஒரு அமைதி கிளம்பி இது அவசியமில்லாத ஒன்று என்று தெரிவித்துவிடும். அவளை ஆழ்ந்து தூங்க வைத்துவிடும்.

இன்னொன்றும் நடக்கிறது. ஒரு பெண்ணை உற்றுப் பார்த்து, இவளுக்கு என்ன மேக்கப் செய்யலாம் என்று யோசிக்க ஆரம்பிக்கும் போது, தியானம் போல் ஒருநிலை ஏற்பட்டு விடுகிறது. மனம் குவிந்து செய்யும் தொழிலைத் தவிர மற்ற எல்லாவற்றையும் மறக்கடித்து விடுகிறது.

தியானம் கற்றுக் கொள்ளவில்லை. கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசையுமில்லை.

தியானம் என்றால் என்ன? தன்னை மறந்து வேலையோடு வேலையாக மூழ்கி விடுவதற்குப் பெயர்தான் தியானம். எந்த எதிர்பார்ப்புமில்லாமல் மனம் எங்குவதற்குப் பெயர்தான் தியானம். கடந்த காலத்திலுமில்லாமல் எதிர்காலத்திலும் வாழாமல் இடைவிடாது நிகழ்காலத்தில் இருப்பதற்கு பெயரே தியானம்.

அவள் மறுபடியும் கண்ணாடியைப் பார்த்தாள். வெள்ளையம்மாள் என்று தன்னைக் கூப்பிட்டாள், சிரித்தாள். மற்ற வேலைகளைக் கவனிக்கப்போனாள்.

# தாஸி

# 3

## 3

அந்த ஆங்கில வார்த்தைக்கு கரடி என்று பெயர். கரடியின் சின்னம் தாங்கிய அந்தக் கம்பெனி உடற்பயிற்சிக் கருவிகளை தயாரித்தது.

சிங்கப்பூரில் அதன் தொழிற்சாலை இருந்தது. சிங்கப்பூரிலிருந்து ஐரோப்பாவிற்கு ஏற்றுமதியாயிற்று.

ஐரோப்பாவில் வேறு ஒரு கம்பெனி தன் லேபிளை ஒட்டி அமோகமாக விற்றது.

காலுக்குள் பெடலை மாட்டிக்கொண்டு, கழுத்து வரை இழுப்பது. சுழலும் தட்டில் இருந்து கொண்டு இடதும் வலதும் இடுப்பை அசைப்பது. நின்ற நிலையில் சைக்கிள் ஓட்டுவது. இரண்டு வளையத்திற்கு நடுவே பஸ்கி எடுப்பது.



மேல்வயிறு குறைக்க உயர்த்திய காலும் தூக்கிய தலையுமாய் மேலும் கீழும் ஆடுவது. மிக நேர்த்தியான ஸ்கிப்பிங் ரோப், பளபளப்பான டம்பிள்ஸ், மார்பு விரிவடைய ஸ்பிரிங்பேட் என்று கைப்பட்ட விஷயங்களை தயார் செய்தது.

ஐரோப்பாவில் அழகும் உடற்கவர்ச்சியும் இளைஞர்களிடையே அதிகம் பரவியிருந்த நேரம். படபடப்பினால் இருதய நோயும் சர்க்கரைநோயும் பரவியிருந்த நேரம். அழகான பெண்களுக்கு மதிப்பு அதிகமிருந்த நேரம். கட்டுடலான

வாலிபர்களை பெண்கள் நேசித்த நேரம்.

இந்த வியாபாரம் உச்சநிலையை அடைந்தது.

இந்தக் கருவிகளை ஐரோப்பாவில் செய்தால் பத்து ரூபாய் லாபமென்றால், சிங்கப்பூரில் செய்வது மூன்று ரூபாய் ஆயிற்று. கப்பல் செலவு ஒரு ரூபாய் தரவேண்டியிருந்தது.

உலகத்தரத்துக்கு இணையாக அந்தக் கரடிக் கம்பெனியின் தரம் இருந்ததால் ஆர்டர்கள் குவிந்தன. பத்து வருடங்கள் அந்த சிங்கப்பூர் கரடிக் கம்பெனி சக்கைப் போடு போட்டது.

அமெரிக்க கம்பெனி ஒன்று இந்த ஐரோப்பிய சங்கதியை புரிந்து கொண்டது.

ஹாங்காங்கில் தொழில் ஆரம்பித்தது.

தென்கொரியாவில் ஒரு தொழிற்சாலை துவங்கியது. தரத்தை இன்னும் உயர்த்தியது. வடிவங்களை புதுமையாக்கியது.

தன் விளம்பர யுக்தியை உபயோகப்படுத்தி ஐரோப்பிய சந்தையில் போட்டியாக நுழைந்தது.

சிங்கப்பூர் கம்பெனிக்கு ஆர்டர்கள் குறைந்தன. அந்தக் கம்பெனி தன் பார்வையை அரபு நாடுகளுக்குத் திருப்பியது. அரபு நாடுகளில் விற்பனை அதிகம் ஏற்படாது போகவே இந்தியாவிற்குள் நுழையத் திட்டமிட்டது. தமிழ்நாட்டை அதன் வாசலாகக் கொண்டது.

''எங்கே போனாலும் என்ன செய்தாலும் அவனவன் பிறந்த மண்ணுக்குத்தான் திரும்பணும்னு எழுதியிருக்கு.''

அந்த கரடிக் கம்பெனி முதலாளி வாய்விட்டுச் சிரித்தார்.

அவர் சங்கரன். திருநெல்வேலி அவர் சொந்த ஊர். தமிழ் அவர் தாய்மொழி.

அவர் சென்னைக்கு வந்திறங்கினார். பத்திரிகைகள் மூலம் மனிதர்களின் வாழ்க்கையை படித்துக் கொண்டார். பியூட்டிபார்லர்கள் மூலம் தன் கருவிகளை அறிமுகப்படுத்த விரும்பினார்.

ஒரு நல்ல நாளில் செல்வியின் பார்லரில் கால் வைத்தார்.

செல்வியினுடைய இடம் வெறும் பார்லர் மட்டுமல்ல, அது அழகுக்கலை பயிற்சி நிலையம்.

வசதிகள் அதிகமில்லையென்றாலும் அருமையாய் விஷயங்களை சொல்லிக் கொடுத்தார்கள். ஆர்வமாய் பலபேர் அதைக் கற்றார்கள்.

உடற்பயிற்சி மீது அதிக கவனம் செலுத்தாமல் பூச்சுக்கலையிலேயே அதிகம் கவனம் செலுத்தினார்கள்.

சுப்புலக்ஷ்மி என்கிற பெண் அங்கே அழகாய் நிர்வாகம் கவனித்துக் கொண்டிருந்தது. டாக்டருக்கு படித்து முடித்த இளைஞன் அங்கு வரும் பெண்களுக்கு மருத்துவ சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தான்.

"அது கிட்னி வலி இல்லீங்க. வெறும் தசைவலி. இந்த க்ரீம் மேல தடவிக்கங்க. ரொம்ப வலிச்சா இந்த மாத்திரை சாப்பிடுங்க தானா சரியாயிடும். வலி போலேன்னா எங்கிட்ட சொல்லுங்க." அவன் அணுகுமுறை மிகுந்த மரியாதையோடு இருந்தது.

"நான் மூணு மாசம் கர்ப்பம். உடற்பயிற்சி செய்யலாமா?"

"ப்ளீஸ். ஒரு சைகாலஜிஸ்ட்கிட்ட கேளுங்க. இதுக்கு நான் பதில் சொல்ல முடியாது. இருங்க. நான் கேட்டுச் சொல்றேன்."

உடனே ஒரு லேடி டாக்டரை டெலிபோனில் தொடர்பு கொண்டான். தானாக சொல்லாமலும் தள்ளிவிடாமலும் அந்த விஷயத்தைக் கையாண்டான்.

செல்வியைப் பார்த்ததும் சங்கரன் ஆச்சரியப்பட்டார். இதுஒரு கம்பீரமான அழகு என்று மனதுக்குள் குறித்துக் கொண்டார். யாருடனோ அவள் தொலைவில் சிரித்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டார். இவள் பேச்சைக் குறைத்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்று எண்ணினார்.



அவர்கள் இருவரும் எதிரும் புதிருமாய் உட்கார்ந்து கொண்டார்கள். சிறிதுநேரம் மௌனமாய் இருந்தார்கள்.

"உங்களை எங்கியோ பார்த்திருக்கேன். எங்கேன்னு தெரியலை." அவள் வியப்போடு அவரை உற்றுப்பார்த்தாள்.

"வாய்ப்பு இல்லீங்க. நான் பதினெட்டு வயசுல சிங்கப்பூர் போயிட்டேன். இருபத்தி எட்டு வயசுல குடியுரிமை வாங்கிட்டேன். இப்போ, நாப்பத்திரெண்டு வயசு. எப்பவாவது ஒரு தடவை தான் மெட்ராசுக்கு வருவேன் பாரிஸ், பாரீஸ் தெரிஞ்ச அளவுக்கு திருநெல்வேலி தெரியாது. என்னைப் பார்த்திருக்க வாய்ப்பில்லை."

"தெரியலை." அவள் சிரித்தாள்.

அந்த சிரிப்பு சங்கரனை என்னவோ செய்தது. இதற்குமுன் இவளை எங்கே பார்த்திருக்கிறோம் என்று மனம் தேடத் துவங்கியது.

அவர்கள் வியாபாரம் பேசினார்கள்.

நாற்பது சதவீதம் கழிவு தருவதாகச் சொன்னார். செல்வியின் பெயரிலேயே விளம்பரங்கள் வெளிவரும்என்றார். வீட்டின் முகப்பை மாற்றி அங்கு ஷோரூம் ஆபீஸ் ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னார்.

ஆரம்பத்தில் வகை ஒன்றுக்கு ஆயிரம் கருவிகள் விற்க வேண்டும் என்று எல்லை வகுக்கப்பட்டது.

ஒருவருடத்திற்குப் பிறகு, தொடர்ந்து நடத்தவோ, பிரியவோ பரிசீலிக்கப்படும் என்று சொல்லப்பட்டது.

பேசப்பேச, செல்வியின் கம்பீரம் அவருக்குப் பிடித்துப் போனது.

"உங்க குடும்பத்தைக் கூட்டிட்டு வரலையா சங்கரன்?"

"நான் தான் குடும்பம்."

"புரியலையே..."

"தங்கச்சிங்க நாலு பேரை கரையேத்தணுமேன்னு சிங்கப்பூர் போனேன். மெல்லமெல்ல கரையேத்தினேன். அப்பதான் என் வயசும் கரையேறிடுச்சன்னு தெரிஞ்சிச்சு. முப்பத்திஏழு வயசுக்கு அப்புறம் கல்யாணம் பண்ணிக்கிட்டா எனக்குப் பிரச்சினையில்லை. எனக்குப் பிறக்கிற குழந்தைகளுக்கு பிரச்சினையாயிடும். பெரிய இடைவெளி வந்துடும்."

"கல்யாணம் கட்டி குழந்தை பெத்துக்க முடியாதுன்னா,

அப்புறம் கல்யாணம் எதுக்கு கட்டணும்? விட்டுட்டேன். நாப்பத்தி ரெண்டு வயசாயிடுச்சு"

''ஒரு தங்கச்சி அவ வீட்டுக்காரரோட சிங்கப்பூர்ல இருக்கா. ஒரு தங்கச்சி பாரிஸ்ல இருக்கா. ஒரு தங்கச்சி நார்த் அமெரிக்கால இருக்கா. ஒரு தங்கச்சி திருநெல்வேலில இருக்கா.''

''வெறும் மோர் சாதமா இருந்த எங்க குடும்பம் ரொம்ப உயர்ந்த நிலைக்கு வந்துருச்சு. அதுக்கு, கடவுளுடைய கிருபை காரணம், திருநெல்வேலி காந்திமதி அம்மன் காரணம்''.

''எப்பவாவது தோணும், வயசானா நம்மள யார் கவனிச்சுக்குவான்னு தோணும். தங்கச்சிங்க பாத்துக்குவாங்கன்னு ஒரு தைரியம் வரும். பாத்துக்க மாட்டாங்கன்னு ஒரு பயம் வரும். இப்ப வேற எண்ணம் வந்திருக்கு.''

''என்னது?''

''மெட்ராஸ் நோக்கி வியாபாரம் திரும்பும்னு நான் நினைக்கலை. திரும்பிருச்சு. அதேமாதிரி, வாழ்க்கையும் திரும்புமோன்னு ஒரு கேள்வி வருது. திரும்பினா என்னன்னு யோசிக்க ஆரம்பிச்சிட்டேன்.''

''அதுவும், நம்மைமாதிரியே தம்பி தங்கைக்காக ஒரு ஜென்மம் வாழ்க்கையை தியாகம் பண்ணியிருக்கேனு யோசிக்க ஆரம்பிச்சிட்டேன்.

''அந்த ஜென்மம், நம்மள மாதிரியே நாம செய்யற தொழில்லயே ஆவமா இருக்கேன்னு சந்தோஷப்பட ஆரம்பிச்சிட்டேன்.''

''அந்த ஜென்மம் அழகா இருக்கு. அறிவா இருக்கு, அமைதியா இருக்கு, வாழ்க்கை பத்தின தெளிவோட இருக்குன்னு புரிஞ்சுகிட்டேன்.''

செல்விக்குப் புரிந்தது. ஆனால், என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை.

''முதல்ல, இந்த உடற்பயிற்சி வியாபாரத்தை சரியா பண்ணணும்.''

''பண்ணுவோமே...''

அவள் இதை யாருக்கும் வெளியே சொல்லவில்லை. அவரும் சொல்லவில்லை.

அடுத்த நாள் சந்திக்கும்போது, அவள் அந்தப் பேச்சை



சுத்தமாக மறந்து போயிருந்தாள்.

''இந்த ஸ்பிரிங் நமக்கு சரியா வராதுங்க. நம்ம வேலை கொஞ்சம் கூட இழுக்க முடியாது. இது ஐரோப்பால ஆண்கள் பண்றது.''

அவர்கள் விவாதித்தார்கள்.

இந்திய உருவம், இந்திய பருமன், இந்திய வலிவு என்பது பற்றி கூட்டமாய் உட்கார்ந்து பேசி, குறிப்பெடுத்துக் கொண்டார்கள்.

அவள் சிங்கப்பூருக்குப் போனாள். அவரின் விருந்தாளியாக ஒரு வாரம் தங்கினாள். விதம்விதமான க்ரீம்களை வாங்கிக் கொண்டாள். அவர் கம்பெனியை சுற்றிப்பார்த்தாள். தொழிற்சாலைக்குள் விஜயம் செய்தாள்.

சங்கரன் வெறும் புளியங்கொம்பு இல்லை. பெரிய பிரும்மாண்டமான புளியமரம் என்பதைப் புரிந்து கொண்டாள்.

அவர் காட்டிய மரியாதையை மகிழ்வோடு ஏற்றாள். கல்யாணம் செய்து கொண்டால் என்ன என்று யோசித்தாள்.

எந்த விஷயத்தைப்பற்றியும் ஆழயோசிக்கும் போது, அவள்மீது ஒருகுங்குமச்சிமிழ் திறந்து ஒரு அமைதி பரவுமே... அது பரவவில்லை. தெளிவு தோன்றவில்லை.

ஏன் என்று கேள்விகேட்டாள். ஆச்சரியப்பட்டாள்.

வியாபாரசம்பந்தமான பேப்பர்களை பரிமாறிக்கொள்ள, அடுத்தமுறை சுப்புலக்ஷ்மியை அனுப்பினாள். சுப்புலக்ஷ்மி இல்லாமல் பாண்டியன் இங்கே பரிதவிப்பதை கவனித்தாள்.

அன்று இரவு பாண்டியனிடம் சுப்புலக்ஷ்மியை என்னவாக நினைத்துக் கொண்டிருக்கிறாய் என்பதை தெளிவு படுத்திவிடு என்று சொன்னாள்.

நீ அனுமதித்தால், திருமணம் செய்து கொள்கிறேன் என்று அவன் பதில் சொன்னான்.

'காதலா...?' என்று அவள் கேட்டாள்.

'இல்லை நட்புதான். ஆனால் எந்த நேரமும் காதலாகிற வாய்ப்பு இருக்கிறது' என்று சொன்னான்.

சுப்புலக்ஷ்மியின் வீட்டிற்கு தனியே கார் எடுத்துக் கொண்டு போனாள்.

அவள் வீடு வரவேற்றது.

திருமண விஷயம் ஆரம்பிக்க, அவர்கள் காத்திருந்தது போல பேசத்துவங்கினார்கள்.

"ஜாதி என்ன ஜாதி... நாமெல்லாம் ஒரே கலாச்சாரம். தமிழ் கலாச்சாரம். தாலி மெட்டி குங்குமம், வீடு வாசல் குழந்தை குட்டின்னு இருக்கற கலாச்சாரம். பெரியவங்களை கொண்டாடற கலாச்சாரம். இது உங்க வீட்லயும் இருக்கு. எங்க வீட்லயும் இருக்கு."

"பாண்டியன் குடிக்கமாட்டான்."

"அது போறும் எங்களுக்கு. எங்க பொண்ணு சுப்புலக்ஷ்மி, பத்து பேர் வேலையை ஒருத்தியா செய்வா. அவ எந்த இடத்திலே இருந்தாலும், அந்த இடம் செழிக்கும். இதுதான் அவ ஜாதகம்."

சுப்புலக்ஷ்மி திரும்புவதற்குள் பாண்டியன் அவர்களை பலமுறை பார்த்துவிட்டு வந்தான். காரில் காஞ்சிபுரம் கூட்டிப் [illegible] வந்தான்.

அங்கே நட்பு இறுகிறது.

சுப்புலக்ஷ்மி சென்னைக்கு வந்து செய்தி கேள்விப்பட்டு வெட்கப்பட்டாள்.

"நான் என்னை நீங்க சிங்கப்பூர் அனுப்பினதுக்கு நன்றி சொல்லணும்னு நினைச்சேன். அதுகூட சின்ன விஷயமா போயிடுத்து. என்னை உங்க வீட்ல சேர்த்துக்கறேன்னு முன் வந்திருக்கேளே... இதுக்கு எப்படி நன்றி சொல்லப்போறேன்."

"அது கிடக்கும்டி. எனக்கு ஒருபிரச்சனை. யோசனை பண்ணி பதில் சொல்லு."

செல்வி சங்கரன் தன்னோடு பேசியதை விவரித்தாள். தன் மனதை வெளிப்படுத்தினாள்.

"அடி சக்கை... உங்க விஷயம் தான் முதல்ல ஆரம்பிச்சது. உங்கவிஷயம்தான் முதல்ல முடியணும். சங்கரனைப்பத்தி ஒரு அபிப்ராயத்தை சொல்லு.

"கசப்பட்ட காசு அக்கா. நீங்க உள்ளே புகுந்தீங்கன்னா, உங்க வாழ்க்கையே மாறிடும். பார்லர், மேக்கப் எல்லாத்தையும் விட்டும்படி ஆயிடும். சங்கரன் சங்கரன் சங்கரன்னு அவர் பின்னாடி சுத்துவீங்க.

மூணு பி.ஏ வச்சிருக்காரு. மூணு பேருக்கும் மூச்சு முட்டற வேலை. நீங்க உள்ளே போனீங்க, மொத்த வேலையும்



உங்க தலையில.

வாழ்க்கையில மட்டுமில்லை, தொழில்லயும் அவருக்கு பார்ட்னர் தேவைப்படுது.

"இது எதுக்கு அவசியமா போக வேண்ணுமுன்னு நான் சொல்லலை"

"அவர் புருஷன்னா, அவர்தான் உங்க கணவர்ன்னா உங்க வாழ்க்கை வேற, மொத்த நடவடிக்கையும் வேற."

"இந்த பார்லர் தொழில் செய்ய முடியாது. இது பத்தி யோசிக்கக்கூட முடியாது. அவ்வளவு பணக்காரருடைய மனைவி ப்யூட்டி பார்லர் வச்சிருக்காங்க அப்படின்னா அது கேவலமாதான் படும். அதுனால நீங்க உங்களை மாத்திக்கணும். பெரிய்ய எஸ்டேட் ஓனர் லேடிமாதிரிதான் நடக்கணும் நிக்கணும் பேசணும்."

"அப்படி மாற என்னால முடியாது சுப்புலக்ஷ்மி. பார்லர் இல்லாம கூட இருந்துடலாம். ரொம்ப கம்பீரமா அல்லது அலட்டலா என்னால இருக்க முடியாது."

"அப்ப யோசனை செய்யுங்க செல்வி. நான் ரொம்ப மேலோட்டமாதான் பேசறேன். இது பத்தி நான் பேசி நீங்க முடிவு பண்றத விட நீங்களா முடிவு பண்றதுதான் நல்லது."

"நீங்க யார்? உங்களுக்கு என்ன வேணும்? எது உங்க வாழ்க்கை? யோசனை பண்ணி முடிவுக்கு வாங்க."

சுப்புலக்ஷ்மி மிக ஆதரவாய் செல்வியின் கைகளைப் பிடித்துகொண்டு முதுகு வருடி காது மடல்கள் சொடக்கு எடுத்து விட்டபடி பேசினாள்.

எது என்னுடைய இடம் யார் என்னுடைய மக்கள். எவரால் எனக்கு இந்த உயர்வு. இங்கே எதுசெய்ய நான் வந்திருக்கிறேன்.

யோசிக்க தனிமை தேவைப்பட்டது.

மேடம் இன்னிக்கு அப்பாயின்ட்மென்ட் கொடுத்திருந்தாங்களா. ஸாரி அவங்களுக்கு இன்னிக்கு முடியல. ஜூரம் ஜலதோஷம். தொட்டா மத்தவங்களுக்கு ஒட்டிக்குமேன்னு மேடம் கீழயே வரல, வீட்டு மாடியிலயே இருக்காங்க. ப்ளீஸ் வேற ஆள அனுப்பட்டா ப்ளீச்சிங்தானே.

சுப்புலக்ஷ்மி கீழே சமாளித்துக் கொண்டிருப்பது கேட்டது. அறையின் குறுக்கும் நெடுக்கும் நடந்தபடி செல்வி

யோசித்தாள்.

இந்த வயசுக்கு மேல் கல்யாணமா. புருஷன் என்று ஒரு ஆளின் பின்னே என்னால இனி நடக்க முடியுமா.

இதை எடுத்துவா அதை எடுத்துவா என்று நான் ஏவி நாலுபேர் செய்கிற அடத்தை விட்டு நான் ஏவப்பட்டால் தாங்குவேனா. என்னால் அவ்விதம் செய்ய இயலுமா.

வேலைகளுக்கு ஏவப்படுதல் இருக்கட்டும் இனி எனக்கு புருஷ சுகம் அவஸ்யமா. என்னால் புருஷனுக்கு சுகம் தரமுடியுமா, என்ன எதிர்பார்ப்புகள் இந்த சங்கரனிடம் இருக்கும். இதுநாள் வரை அவர் இந்த பசிக்கு எங்கே சாப்பிட்டார் எங்கு சாப்பிட்டார். இத்தகைய உணவு என்னைப் பரிமாறச் சொன்னால் முடியுமா மாட்டேன் என்றால் மதிப்பாரா.

திருமணம் என்று மாட்டிக் கொண்டுவிட்டால் பின்னே நகர்ந்து வரமுடியுமா வந்தால் மரியாதையா, டைவர்ஸியை திருமண மேக்கப் போட அழைப்பார்களா. சாதாரணமாய் பார்லருக்கு வருகிறவர்கள் கூட நின்று விடுவார்கள்.

கேரெக்டர் சரியில்லை என்று புருஷன் இல்லாத பெண்களை குறை சொல்வார்கள்.

செல்வி மௌனமானவள் தேவைக்கு அதிகமாய் பேசாதவள் இது இயல்பாக மட்டுமில்லை. பார்லரில் அதிகம் பேசக் கூடாது என்ற கொள்கையும் அவள் ஆரம்பத்திலேயே வைத்திருந்தாள்.

நிறைய பெண்கள் அரட்டைக் கள்ளிகள், சற்று சௌகர்யம், திருமணம் என்கிற மரியாதை கொஞ்சம் அழகி என்கிற இறுமாப்பு கொண்ட பெண்களே பார்லருக்கு வருவார்கள்.

கும்பலாய் பெண்கள் பார்த்ததும், பெண்கள் மட்டுமே என்று உணர்ந்ததும் பேச்சு அதிகமாய் பொங்கத் துவங்கிவிடும்.

உனக்குத் தெரியுமா இவ யாருன்னு அவ கல்யாணம் எப்படி நடந்ததுன்னு நான் சொல்கிற மாஸ்க் போட்டுகிட்டு வரேன் உட்கார்ந்து பேசலாம். முகம் முழுவதும் அப்பிக் கொண்டு உலருகிற வரையில் விரித்த தலையும் கசங்கின நைட்டியுமாய் உட்கார்ந்து குசுகுசுவென்று பேசுவார்கள்.

நீங்கதான் அவங்களா உங்க மேரேஜ் பத்தி இவ சொன்னா இது நெஜமா கேட்டதும் ரொம்ப கஷ்டமாயிடுச்சு. ஏதோ நடந்தது நடந்துபோச்சு அதுவும் எப்பவோ நடந்தது. இதையேன் அவகிட்ட சொல்றீங்க, அவ உங்களைப்பத்தி



எல்லார்க்கிட்டயும் தப்பு தப்பா பேசறா [illegible] அவகிட்ட ப்ரண்ட்ஷிப் வச்சுக்காதீங்க.

அவகிட்ட நீ சொன்னியாமே என்னைப் பத்தி அவளே வந்து என்கிட்ட சொன்னா. அவ ப்ரண்ட்ஷிப் வேண்டாம் அவ மோசமான கேரெக்டரா சொல்லு இப்ப நா மோசமா நீ மோசமா.

எல்லோரும் மோசமானவர்களாய் மாற அங்கே இடம் இருந்தது. வழிவகை இருந்தது. வாழ்க்கை ஒவ்வொருவரை ஒவ்வொரு பக்கம் அவரவர் விருப்பம் கேட்காமல் இழுத்துப் போகும் காட்டாறு. திருமணம், குழந்தை, செல்வம் சேர்த்தல், நோய்வாய்ப்படுதல் எல்லாம் தலையெழுத்து. பூர்வ வினை. இதை நன்கு தெரிந்தவர்கள் மற்றவர் பற்றி ஏளனம் செய்வதில்லை. தன்னைப்பற்றி இறுமாப்பு கொள்வதில்லை.

இது அறியாத முட்டாள்களுக்கே அகம்பாவம் வருகிறது. பிறர்பற்றி விமர்சனம் வருகிறது. அவளுக்கென்ன அவ புருஷன் உள்ளங்கைல வச்சு தாங்கறான். கள்ளக் கடத்தல் காசு போதைப் பொருள் சம்பாத்தியம், மாசம் ஒரு கார்ல வருவா பொருமுவார்கள் எப்பேர்ப்பட்ட உத்தமரையும் பேச்சால் பொறாமையால் அசிங்கப்படுத்துவார்கள்.

அவளுக்கு சுப்புலட்சுமியிடம் பிடித்த விஷயமே இதுதான் சுப்புலட்சுமி எந்த அர்த்தமற்ற கேள்வியும் கேட்பதேயில்லை. புருவம் பிடுங்க வரும் பெண்ணிடம் உன் புருஷன் என்ன செய்கிறான் என்று கேட்பதேயில்லை. அவளாகச் சொன்னாலும் அக்கறைக் காட்டுவதேயில்லை. அடுத்தடுத்து வேலைகளில் மூழ்கவே சுப்புலட்சுமி அக்கறை காட்டினாள்.

பாண்டியன் ஒருநாள் சொன்னான்.

நான் வெகுநாள் யோசனை செய்துவிட்டுச் சொல்கிறேன், செல்வி முகத்துக்கு அழகு செய்வதும், நகத்தைப் பேணி வளர்ப்பதும், உடம்பைக் கட்டுக்குலையாமல் வைத்திருப்பதும் பரம்பரைப் பரம்பரையாக பெண்களுக்கு சொல்லித் தரப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் மௌனமாக இருக்க சொல்லித் தரப்படவேயில்லை. அப்படிச் சொல்லிக் கொடுத்தாலும் பெண்களுக்கு அது பிடித்தமானதாகத் தெரியவில்லை. ஆறுமணி நேரம் இடைவிடாது பேசுகிறார்கள். அப்படிப் பேசுவதற்காகவே இங்கு வருகிறார்கள். இன்று முழுவதும் ஒரு வார்த்தை கூட பேசக்கூடாது... இன்று முப்பது வார்த்தைக

ளுக்கு மேல் பேசக்கூடாது... இன்று நூறு வார்த்தைகளுக்கு மேல் பேசக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்துக் கொள்ளக் கற்றுக் கொடு. எது பேசினாலும் அவசியம்தானா என்று யோசித்துவிட்டு பேசக் கற்றுக்கொடு. மௌனமாய் இருப்பதுதான் அழகு என்று அவர்களை உணர வை.

"நறுக்கு தெறித்தாற்போல் நீ பேச அவர்களும் அதற்கு பழகிவிடுவார்கள். இதை ஒரு வித்தியாசமான பார்லராக செய்."

கவுன்ஸ்லிங், கவுன்ஸ்லிங் என்று ஒரு மிகப் பெரிய பொய் இப்போது தமிழ்நாட்டில் ஓடிக் கொண்டிருக்கிறது. பிரச்சினையின் நுனியைக் கூட அசைக்க முடியாதவர்களிடம் பிரச்சினையைச் சொல்ல பலர் ஓடி வருகிறார்கள். இந்தப் பாவத்தை நீ செய்யாதே. வசதியாய் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு உனக்கு கொஞ்சம் காசு பணம் இருக்கிற கர்வத்தை அதை இல்லாதவர்களிடம் காட்டாதே. எல்லா முடிவுகளும் பிரச்சினைகள் அழுத்தத்தில் தானாய் வெளிவரும். பிரச்சினைகள் அழுத்தாமல் மேலோட்டமாய் இருக்கும்போது எடுக்கப்படும் முடிவுகள் இன்னொரு பிரச்சினை ஆகிவிடும்."

"உதாரணத்திற்கு புருஷன் அடிக்கிறான் என்றால் டைவோர்ஸ் கேள் என்று சொல்லிவிடக் கூடாது. அதைப் பல கோணங்களில் பார்க்கவேண்டும். இது இனி தாங்க முடியாதென்று அந்தப் பெண்ணே முடிவுக்கு வரவேண்டும். அப்படித் தானே முடிவுக்கு வந்த பெண்ணிற்கு உதவி செய்யலாம். உனக்கு டைவோர்ஸ் தானே வேண்டும். இன்னாரிடம் போ என்று வக்கீலிடம் அழைத்துப் போகலாம். அவள் கோர்ட்டுக்கு அலையும் போது கூட இருக்கலாம்."

கோர்ட்டில் அவள் குத்திக் குதறப்படுகிறபோது கூட நின்று மனம் தேற்றலாம். இதெல்லாம் அவமானமே இல்லை என்று உற்சாக மூட்டலாம். மனமாறுதலுக்காக அவள் வீட்டில் போய் தங்கலாம். அவளை உன் வீட்டில் தங்க வைத்துக் கொள்ளலாம். இதுதான் உண்மையாகவே பெண்ணுக்குப் பெண் செய்யும் உதவி. புருவம் பிடுங்குவது அல்ல."

"இந்தாம்மா... இதை வக்கீல் நம்பர் நோட் பண்ணிக்கோ நான் சொன்னேன்னு அவளைப் போய் பாரு.. ஷி வில் ஹெல்ப் யூ" என்று மேம்போக்காய் உதவி செய்வதல்ல. பத்திரிக்கையில் பேர் மாற்றி பிரச்சனைகளைப் பேசுவது அல்ல. பத்திரிக்கையில் ஒரு பிரச்சினையில் வம்பளக்கிறோம் என்பது தவிர இது உண்மையில் எந்த உதவியும் செய்யப் போவதில்லை."



"மதர் தெரசா எந்தப் பத்திரிக்கையில் யார் பிரச்சினையைப் பேட்டி கொடுத்திருக்கிறார்கள். இதோ இந்த உதவும் கரங்கள் வித்யாகர் எத்தனை உண்மைக் கதைகளை வைத்துக் கொண்டிருக்கிறார் தெரியுமா... அவர்களை அவர் பத்திரமாகப் போட்டு விற்கிறாரா... இல்லை. இது விளம்பரக் காலம். அதனால்தான் எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படாமல் போய்விடுகிறது. யாருக்கும் யார் மீதும் அக்கறை இல்லை என்கிற சந்தேகம் வந்துவிடுகிறது. பியூட்டி பார்லர் வம்பளப்புக் கூடமாய் மாறிவிடக்கூடாது. அசட்டுப் பெண்களின் சபையாக ஆகி விடக்கூடாது."

"செல்வி, நீயும் பேச்சைக் குறை. மற்றவர்கள் பேசுகிற போது இவ்வளவு நேரம் பேச என்ன இருக்கு என்பதாக மௌனமாய் விமர்சனம் செய்.

"மேலோட்டமாய் இது அழகுக்கலை நிலையமாக இருப்பினும் மனோபலம் வளர்க்கும் இடமாகவும் இருக்கட்டும்."

தியானம் பற்றிய புத்தகங்களையும் அடுக்கி வை. பியூட்டி பார்லரில் ஓம் என்கிற சப்தத்தை இடைவிடாது ஒலிபரப்பினால் தவறா.. இது கோவிலில் தான் ஒலிபரப்பப்பட வேண்டுமா. இங்கும் செய் செல்வி."

செல்வி எழுந்து வந்து அவன் பேசியதற்கு கை குலுக்கினாள். செல்வியிடம் பேசுவதற்கு முன்பு அவன் சுப்புலட்சுமியிடம் தனியே இது பற்றிப் பேசியிருக்கிறான். இதெல்லாம் சேர்ந்து பியூட்டி பார்லர் மீது அவளால் மாற்றிக்கொள்ள முடியாத ஒரு பிரேமை வந்துவிட்டது.

ஒரு அழகு நிலையத்தில் கொலை நடந்தது. இன்னொரு அழகு நிலையத்தில் கற்பழிக்கும் முயற்சி நடந்தது. உடற்பயிற்சி செய்யும்போது கழற்றி வைத்த நகையைத் திருடிக் கொண்டு போன சம்பவங்கள் எல்லாம் நடந்தன. ஆனால் செல்வி தன்னுடைய அழகு நிலையத்தைக் கண் குத்திப் பாம்பாய் நினைத்துக் கொண்டிருந்தாள். கொஞ்சம் அதட்டிப் பேசுகிற பெண்ணை நீங்கள் வரத்தேவையில்லை என்று நிர்தாட்சண்யமாய் விலக்கினாள். இப்படி மேக்கப் செய்யுங்கள்...அப்படி செய்யுங்கள் என்கிற பெண்ணை உங்களுக்கு நான் மேக்கப் செய்யமுடியாது என்று மறுத்தாள். தெளிவுள்ள உறவுக் கூட்டத்தால் செல்வியின் அழகுக்கூடம் பலமுள்ளதாக இருந்தது. விளம்பர போர்டுகள் இல்லை. பத்திரிக்கைகளில் பேசவில்லை. தொலைக்காட்சியில் செய்முறை விளக்க

யில்லை. அந்த இடத்தின் அமைதியை அனுபவித்தவர்கள் அதைப்பற்றி வெளியே சொன்னார்கள்.

"முகத்தில் முடி முளைக்கிற பாப்பம் தானே. செல்விகிட்ட போ, தலைமயிர் வெட்டிக்கணுமா... உன் முகத்துக்கு எது நன்றாக இருக்குமனு செல்வியைத் தவிர வேறு யாரும் சரியா தீர்மானம் பண்ணமாட்டாங்க."

கல்யாணப்பெண் மட்டுமல்ல, கல்யாணத்துக்கு போகிற கல்யாணமாகாத பெண்கள் கூட மேகப்புக்காக செல்வியிடம் காத்துக் கிடந்தார்கள். வேறு எந்த பார்லரிலும் மேக்கப்புக்கு முன்பு இருபது நிமிடம் தியானம் என்பது இல்லை. தியானம் செய்து முகம் முழுவதும் புத்துணர்ச்சி பெற்ற பெண் மேக்கப் இல்லாமலேயே அழகானாள். அந்த அழகுக்கு அழகூட்ட ஆனந்தமாய் விடைபெற்றாள். இந்த பார்லர் இவர்கள் மாதிரி பெண்களின் பேச்சால் வளர்ந்தது.

இங்கு இருக்கிற ஒவ்வொரு கண்ணாடியும், சுழல்நாற்காலியும், க்ரீமும், பேஸ்ட்டும் செல்வி தன் சொந்த கண்காணிப்பில் வாங்கியது. மனம் முழுவதும் எப்போதும் இடைவிடாது பார்லரையே பற்றிக் கொண்டு நிற்கிறது.

இரவுநேரம் சட்டென்று விழிப்பு வந்து வேறெதைப் [illegible]டமாக எடுக்கலாம் என்று குறிப்பு எழுதத் தோன்றுகிறது. இதைவிட்டு விட்டு இந்த எண்ணங்களையெல்லாம் உதறிவிட்டு சிங்கப்பூருக்குப் போய் எக்ஸ்போர்ட், இம்போர்ட் என்று கவனிக்க முடியுமா. மனிதர்களைக் கவனித்துக் கொண்டிருப்பதை மறந்து இன்டர்நெட்டைக் கவனித்துக் கொண்டிருக்க முடியுமா காகிதங்களைப் படித்துக் கொண்டிருக்க முடியுமா பார்ட்டிகளில் பொய்யான பேச்சுக்கு தலையசைத்துக் கொண்டிருக்க முடியுமா.

மிக நல்ல மனிதன். உயர்ந்த பண்பாளன். செல்வந்தன்... அந்த மனிதனை வலை விரிக்க பல பெண்கள் முயன்றதையும் கேள்விப்பட்டாயிற்று. அந்த மனிதன் நினைத்தால் இளமையான பெண்களின் பெரிய க்யூ வரிசையை நிச்சயம் ஏற்படுத்திப் பார்க்க முடியும். ஆயிரம் பெண்ணை வடிகட்டி ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளமுடியும். அந்த மனிதன் தன்மீது ஆசை கொண்டது செல்விக்கு கொஞ்சம் அதிசயமாகத்தான் இருந்தது. அதை வெளியிட்ட விதமும் மிக நாகரிகமாக இருந்தது.

ஆயினும் சட்டென்று மனம் சந்தோஷப்படவில்லை.



அடித்தது அதிர்ஷ்டம் என்று துள்ளவில்லை. ஒருவேளை இதற்குக் காரணம் காலமோ, யாருக்கும் வணங்காமுடியாது என்கிற அலட்டலோ... சிறு வயதிலிருந்தே வறுமை தெரியாததால், மிதமான காசு பழக்கப்பட்டு விட்டதால் இந்த மிதமான சௌகரியம் என்று நினைத்து விட்டோமோ. ஆண் கவர்ச்சியில்லையோ எந்தப் புத்துணர்ச்சியும் ஏற்படாத மரக்கட்டை ஆகிவிட்டேனா... என்ன முடிவு செய்யப்போகிறேன். எப்படி முடிவு செய்யப் போகிறேன்... எதை வைத்து முடிவு செய்யப்போகிறேன்.

தூக்கம் வராமல் எழுந்து சோபாவில் சரிந்து உட்கார்ந்து ரிமோட் கண்ட்ரோலை எடுத்து டிவியை உயிர்ப்பித்தாள். சேனல்கள் மாற்றிக்கொண்டு போனாள். பி.பி.சியில் வயல்வெளி ஒன்று தெரிந்தது. தொலைவில் பனைகள் நின்றன. அட... நம்மூர் போல இருக்கிறதே... தாமதித்தாள்... இரட்டை மாட்டுவண்டி தெரிந்தது. ஓட்டுகிறவன் பல் தெரியச் சிரித்தான்.

தென்னிந்தியன் என்று முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. தெலுங்கனா... கர்நாடகமா... தமிழனா... கேள்வியோடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கேமரா வேறுபக்கம் திரும்பி ஒரு கோபுரம் காட்டியது.

கோபுரம் பார்த்ததும் திக்கென்றிருந்தது. அது அவளுடைய ஊர். திருவாரூர். ஆனால் பார்த்ததேயில்லை. கனவிலே பார்த்திருந்த ஊரை ஒரு புத்தகத்திலிருந்து உறுதிப்படுத்திக் கொண்டாள். இப்பொழுது பி.பி.சி அதை உயிர்ப்போடு காட்டிக் கொண்டிருக்கிறது.

பார்க்கப் பார்க்க தூக்கம் வந்தது. இரண்டு மூன்று கொட்டாவிகள் வெளியேறின. கண் கோவிலைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மனம் வேறுயாரையோ தேடத்துவங்கியது.

எப்போது யாரால் கட்டப்பட்டது... அந்தக் கோவிலின் விசேஷம் என்ன... அங்குள்ள கல்வெட்டுக்களில் என்ன எழுதப்பட்டிருக்கிறது. என்பதெல்லாம் ஆங்கிலத்தில் விளக்கிக் கொண்டிருந்தார்கள். தேவாசிரிய மண்டபம் காட்டிக் கொண்டிருந்த போது உள்ளே ஒரு நடுக்கம் ஏற்பட்டது. மண்டபத்திலிருந்து ஒரு ஆடு ஓடி வந்துகொண்டிருந்தது. அந்த ஆடு கறுப்பாக இருந்தது. அந்த ஆட்டிலிருந்து யாரோ தோன்றினார்கள். ஒரு பிணத்தின் பின்னே அழுது கொண்டே ஓடும் ஒரு

பெண்ணைப் போல பெரிய அழுகுரலோடு அந்த ஆட்டின் பின்னே ஓடினார்கள்.

ஆடு ஓடிவிட்டது. மண்டபத்திற்குள்ளே அந்த உருவம் ஓடிவந்தது. கோபுரம் கட்டப்பட்ட பெரிய கோபுரத்தின் உச்சியில் நின்று அலறியது. பெரிய தாழ்வாரம் கட்டப்பட்ட போது அங்கே ஒரு மூலையில் உட்கார்ந்து விசும்பியது. பஞ்சமுக வாத்தியம் வாசித்தபோது காதைப்பொத்திக் கொண்டு கத்தியது.

இறைவன் பிரகார உலா வந்தபோது தூண்மீது சாய்ந்து கொண்டு எங்கோ வெறித்துக் கொண்டிருந்தது.

அவள் தடக்கென்று டிவியை அணைத்தாள். மணியைப் பார்த்தாள். விடிகாலை மூன்று மணி.

வராண்டாவில் விரிப்பைப் போட்டு கண்மூடி உட்கார்ந்தாள். பாண்டியனை உலுக்கி எழுப்பினாள். "திருவாரூருக்குப் உடனே போகிறோம். கிளம்பு என்றாள். சுப்புலட்சுமியை வீட்டில் காத்திருந்து அழைத்துக் கொண்டாள்.

திருவாரூர் நோக்கி பயணமானாள். பிற்பகல் ஒரு மணிக்கு கோவில் வந்து சேர்ந்தார்கள். கோவில் மூடியிருந்தது. ஊருக்குள் போய் மதிய உணவு சாப்பிட்டார்கள். ஹோட்டலில் ரூம் போட்டுத் தூங்கினார்கள். ஐந்து மணிக்கு குளித்து உடுத்திக்கொண்டு கோவில் நோக்கி போனார்கள். பையை சுப்புலட்சுமியிடம் கொடுத்து விட்டு வேகமாய் செல்வி உள்ளே நுழைந்தாள்.

கமலாம்பிகை சன்னதிக்கு முன்னே இருக்கும் உச்சிஷ்ட கணபதி சன்னதியில் உட்கார்ந்தாள். மெல்ல உள்ளே போனாள். கமலாம்பிகையை கண்ணாரப் பார்த்தாள். நடுக்கம் தீர்த்த விநாயகரை தரிசித்தாள். அட்சரப்பீடத்தின் எதிரே கண்மூடி நின்றாள். சுற்றி வந்து தூர்க்கையை தரிசித்தாள்.

சுப்புலட்சுமி இதெல்லாம் எனக்கு ரொம்ப தெரிஞ்ச இடம். நான் ஆடின இடம். பாடின இடம். இதோ இந்த மண்டபம்... இந்த உச்சிஷ்ட கணபதிக்கு மேல இருக்கே... இது கட்டினபோது நான் இருந்தேன். மேல் தளத்தைச் சுற்றிக் காட்டினாள். உத்திரத்தில் சிலைகள் செதுக்கப்பட்டிருந்தன. ஆறங்குல உயரமுள்ள சிலைகள் அந்த உத்திரத்தின் மூன்றுபக்கமும் பொறிக்கப்பட்டிருந்தன. நடுவே தியாகராஜா.. இடப்



பக்கம் விநாயகர் வலபபக்கம் கமலை. நடுவே அதிகார நந்தித்துப் பண்டாரத்தார்கள். ஓதுவார்கள். இடதுபக்கம் பிரபுக்கள். நிலக் கிழார்கள். வேளாளர்கள், மறவர்கள், வலதுபுற உத்திரத்தில் வாத்தியக்காரர்கள். எழு நடன மாதர்கள்.

"இதோ...இது நான். நாங்கள் ஒரு குழுவாக தியாகராஜருக்குப் பணிவிடை செய்தோம்."

"கோவில் பணிகள் குறைவில்லாமல் நடக்கவேண்டுமென்று குறியாக இருந்தோம்."

செல்வி விளக்கிக் கொண்டு போக பாண்டியனும், சுப்புலட்சுமியும் திகைத்தார்கள். ஆனால் இங்கு ஏன் இப்போது வந்திருக்கிறேன் என்று தெரியவில்லை. இவையெல்லாவற்றையும் மறுபடி பார்ப்பதற்காக நான் இங்கு வரவில்லை.

இங்கு யாரோ அழைக்கிறார்கள். என்னைப் பார்க்க ஆசைப்படுகிறார்கள். செல்வி நடந்து தேவாசிரிய மண்டபம் போனாள். கம்பி போட்டு மூடி வைத்திருந்த அந்த மண்டபத்தை உற்றுப் பார்த்தார்கள்.

காற்று தரையிலிருக்கும் தூசியை மேலே எழுப்பியது. வலப்பக்கம் தேவாசிரிய மண்டபம். நேரெதிரே கோபுரம். காற்று சட்டென்று கடுமையாக வீசிற்று. தரைப் புழுதி தூணாய் உயர்ந்தது. பேய் பிடித்த பெண் போல இடமும், வலமுமாய் அலைக்கழிந்தது. செல்வி அந்தப் புழுதித் தூணையே பார்த்துக் கொண்டிருந்தாள். புழுதித் தூண் குறுகிற்று. மூன்றடி உயரத்துக்கு நின்றது. தரையில் பொத்தென்று விழுந்தது. அழுகைக் குரல் கேட்டது. செல்வி தலையைப் பிடித்துக் கொண்டாள்.

"நான் தான்... நான் தான் விஷம் வச்சேன். நான்தான் கொன்னேன். என்னை மன்னிச்சுடு வெள்ளையம்மா." விசும்பலோட குரல் கேட்டது.

"என்னை நீ மன்னிக்காத வரைக்கும் இந்த மண்டபத்தியிருந்து நான் வெளியே போக முடியாது செய்த தப்புக்கு தினம் அழுது தினம் அலறி... என்னால் முடியலை வெள்ளையம்மா."

"என்னால் உள்ளேயும் போக முடியலை, வெளியவும் போகமுடியலை செய்த தப்பு செத்த பிறகும் விடாது வெள்ளையம்மா."

வெள்ளையம்மாள் உருவமில்லாத பொன்னுத்தாயை வேதனையோடு கேட்டுக் கொண்டிருந்தாள்.

"என்னை மன்னிச்சுடு ஆத்தா." மறுபடி விசும்பல்

கேட்டது.

"நான் யார் மன்னிக்கறதுக்கு... மன்னிக்கற அளவுக்கு நான் என்ன உசத்தி."

"நீ என்னை மன்னிக்காமல் போனால் எனக்கு இந்த மண்டபத்திலிருந்து விடுதலை கிடைக்காது. நான் மன்னிப்பு கேட்கிறேன் தியாகராஜனிடம் நான் மன்னிப்பு கேட்கிறேன்.

செல்வி மௌனமாக இருக்க உள்ளுக்குள் இருந்த வெள்ளையம்மாள் பதறினாள்.

உயிர்கள் தவறு செய்யப் பிறந்தது. உடல் எடுத்த உடனேயே பிழைகள் செய்ய நேர்வதுண்டு. மிகுந்த கருணை உள்ளவனே... எல்லாவித குற்றங்களையும் மன்னிப்பாய்.

செல்வி அசையாமல் நிற்க, வெள்ளையம்மாள் அபிநயம் பிடித்தாள்.

காற்று அசைந்து நின்று போயிற்று. குப்பென்று ஒரு புழுக்கம் ஏற்பட்டது.

அவள் பொன்னுத்தாயைப் பரிவோடு பார்த்தாள்.

இவளை விடுதலை செய்யேன்..மறுபடி மறுபடி இறைஞ்சினாள். அங்கே எந்த மாற்றமும் நிகராதது கண்டு மனம் பதறினாள். சட்டென்று அந்தப் பதிகம் மனதுக்குள் நினைவுக்கு வந்தது.

அவளுக்கு பிடித்த பதிகம். அவள் அடிக்கடி பாடும் பதிகம்.

மீளா அடிமை உமக்கே ஆளாய்
பிறரை வேண்டாதே
மூளா தீ போல் உள்ளே கனன்று
முகத்தால் மிக வாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவாரூரில்
வாழ்ந்தே போம் நீரே.

கை கூப்பி வெள்ளையம்மாள் பதிகம் பாடினாள். செல்வி கண்களில் இருந்து கண்ணீர் ஆறாய் பெருகிற்று. பரிசென்று அந்த இடத்தில் வெளிச்சம் அதிகமாயிற்று. பொன்னுத்தாயி விடுதலை அடைந்துவிட்டாள் என்று அந்த் வினாடி



நேரத்தில் புரிந்தது.

அக்கா... ரொம்ப நல்ல அக்கா. "பொன்னுத்தாயி வணங்கினாள். செல்வியின் பாதம் சில்லென்று ஆயிற்று. செல்வியின் கண்ணுக்கு இப்போது யார் யாரோ தென்பட்டனர். மேலே மெல்லியதாக மோதினர்.

வெள்ளையம்மாளாக இருந்த போது அவளைப் பெற்று வளர்த்த தாய் தோன்றினாள். செல்விக்கு வயிறு குழைந்தது.

"நமக்கு எந்த ஜென்மத்திலயும் கல்யாணம் கிடையாது வெள்ளையம்மா. பாவப்பட்ட ஜென்மங்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டாமா. வேதனைப்பட்டவங்களைத் தடவிக் கொடுக்க வேண்டாமா.. தோத்துப் போனவங்களைத் தூக்கி நிறுத்த வேண்டாமா. முடிச்சுக்கலாம்னு நினைச்சவங்களை மனசு மாத்த வேண்டாமா.

> நமக்கு
> காமம்
> வராது.
> காமம்
> வராத
> போது
> கல்யாணம்
> நல்லா
> இருக்காது
> உலகத்தை
> வறுத்தெடுக்கிற
> அந்த நெருப்பு
> உன்னையோ
> என்னையோ
> ஒன்னும்
> பண்ணாது

"நமக்கு காமம் வராது. காமம் வராத போது கல்யாணம் நல்லா இருக்காது. உலகத்தை வறுத்து எடுக்கிற அந்த நெருப்பு உன்னையோ என்னையோ ஒண்ணும் பண்ணாது. இது எவ்வளவு பெரிய தகுதி... எத்தனை பெரிய வசதி.. உனக்கு திருமணம் அவசியமில்லை. இந்த ஜென்மத்தோடு உன் கணக்கு முடிந்தது."

போ... சௌகரியமாக இரு. உன்னைத் துன்பப்படுத்தியவர் உன்னால் விடுதலை செய்யப்பட்டு விட்டாள். உன்னைத் துன்பப்படுத்தியதற்காக இத்தனை ஆண்டு காலம் அழுது புலம்பினாள். இப்போது சரியாகி

விட்டது. போய் வா நலமாக இரு. தியாகேசரை வலம் வந்து இறைவனுக்கே ஆட்பட்ட வாழ்க்கையை ஒருமுறை நடத்து.''

தாஸி என்பவள் இழிவானவள் அல்ல. அவள் ஆணுக்கு அடிமை அல்ல. அவள் போக வியாபாரி அல்ல. பெண் குலத்துக்கு தாஸமாய் இருப்பவள் தான் தாஸி. நொந்து போன பெண்களுக்கு உதவியாக இருப்பவள்தான் தாஸி. இப்போதும் அதேதான் செய்து கொண்டிருக்கிறாய். நீ செய்வது வெறும் சிங்காரிப்பு இல்லை. அது நம்பிக்கையூட்டல். மனம் நிமிர வைத்தல். சந்தோஷப்படுத்துதல். அதை மட்டும் செய். திரும்பத் திரும்ப செய். வேறேதுவும் வேண்டாம்.''

செல்வி அந்த வெட்ட வெளியில் உள்ள எல்லோரையும் நோக்கி வணங்கினாள். வலம் சுற்றிக் கொண்டு ஸ்வாமி தரிசனம் முடித்து வெளியே வந்தாள். உள்ளே தெளிவாகி இருந்தது.

''பாண்டியன், சுப்புலட்சுமி வீட்டுக்கு போய் நாள் குறிக்கச் சொல் மத்த ஏற்பாடுகள் நாம பண்ணிக்கலாம்.''

என்னக்கா... என்னைப்பத்தி ப்பேசறீங்க. சங்கர் உங்களுக்காக காத்திருக்காரே.. அவருக்கு முடிவு சொல்ல வேண்டாமா...''

'' இல்லை, என்னால் சிங்கப்பூர் போகமுடியாது. என்னால் பியூட்டி பார்லர் விட முடியாது. என்னால பெரிய பணக்காரனுக்கு பெண்டாட்டியா இருக்கமுடியாது. ஒருத்தரை மட்டும் பிடிச்சுக்கிட்டு வாழ்க்கை நடத்த முடியாது.''

''பார்லர்ங்கறது அழகுப்படுத்தற இடம் மட்டுமில்லை மனசுக்கு ஆரோக்கியம் தர்ற இடம் வாழ்க்கை போல நம்பிக்கை தர்ற இடம் எனக்கு இன்னும் பத்து அழகு நிலையங்கள் ஆரம்பிக்கணும். ஒரு காலேஜ்... ஆயிரம் பேர் படிக்கிற காலேஜ் ஆரம்பிக்கணும். அழகியல் பத்தி நிறைய பேருக்கு சொல்லித்தாணும். அழகு படுத்தற பெண்களுக்கும், அழகு படுத்திக்கணும்னு வர்ற பெண்களுக்கும் அந்த காலேஜில் முழுமையா சொல்லித்தாணும். சின்னச் சின்ன டவுன்களில் கூட பெண்களால் நடத்தற பியூட்டிபார்லர் வரணும்.

கிராமத்துப் பெண்களெல்லாம் சுத்தமா பளிச்சுன்னு இருக்கணும். அந்த சுத்தம் அவங்களை சந்தோஷப்படுத்தணும்.

''எனக்கு நிறைய வேலை இருக்கு. என் வேலை முடிய இந்த ஜென்மம் ஆகும்.''



''அக்கா திருவாரூர்ல என்ன பண்ணீங்க யார் கூட பேசினீங்க''.

''அதுவா... அவ என் சிநேகிதி ரொம்ப பழைய கதை. அவ மறுபடியும் பொறப்பா உனக்கு பொண்ணா.. எனக்கு மருமகளா.. அப்போ நாங்க ரெண்டு பேரும் ஒத்துமையா இருப்போம்.''

''அப்படின்னா.. போன ஜென்மத்துல சண்டை போட்டீங்களா..

''இல்லை எனக்கு யார் கூடவும் எப்பவும் சண்டை இல்லை நாம யாரு... நாம எதுக்கு பொறந்திருக்கிறோம் என்று தெரிஞ்சுட்டா போறும். சண்டையே வராது.

ஊருக்குத் திரும்பின மறுநாள் காலை ஏழு மணிக்கு அடித்தார்கள். கதவு திறக்க பூஞ்சையாய் செம்பட்டை தலையாய் ஒரு பெண் நின்று கொண்டிருந்தது.''

''என்னம்மா..''

''எனக்கு மேக்கப் போட்டா நல்லா இருப்பேனா எல்லாரும் என்னை கேலி பண்றாங்க. கேலி பண்ணாதபடிக்கு என்னை மாத்தமுடியுமா, எனகிட்ட நாப்பது ரூபா இருக்கு. இது போறுமா.''

''எதுக்கு அவ்வளவு காசு.. அஞ்சு ரூபால சரி பண்ணி தரேன் வா.''

செல்வி அந்தப் பொண்ணை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள். அவள் வெகுதூரம் பயணப்பட ஆயத்தமாகி விட்டாள் என்பது அவள் முகத்தில் தெரிந்தது.

- முற்றும் -